பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை
20/=


புதுமை : 01 | 10 டிசம்பர் 2016 | விதி : 26




# மரண விளையாட்டு



நடுங்க வைத்த 'நாடா'



அடங்காத ஆட்டம்



குருதியின் கோடு

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

புதுவிதி

தொடர்கதை



# 26

# ஆறாவடு

சயந்தன்

“இப்ப நாங்கள் இந்தியாவைக் கடந்து வந்திருப்பமே” என்று நிர்மலன் பெரியய்யாவைக் கேட்டான். அவர் கைகளை விரித்து “ஆருக்குத் தெரியும்” என்று சொன்னார். அப்படி ஒரு விரக்தியான மனநிலையில் தான் எல்லோரும் வள்ளத்தில் இருந்தார்கள்.

“பன்னிரண்டு நாட்களாகியும் நிலத்தைக் காணவில்லை” என்ற கலவரம் எல்லார் முகங்களிலும் இருந்தது. முன்னரைப் போன்ற கலகலப்பும் குறைந்திருந்தது. எல்லோரும் சலித்துக்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். இரவு கண்ணயரும் போது “இன்றைய இரவுப் பயணத்தின் முடிவில், நாளை கண்விழிக்கும் பொழுதில் நிலம் வெளிக்கும்” என்ற நப்பாசைகள் ஒவ்வொரு விடியலின் போதும் நிராசைகள் ஆயின.

ஓட்டிகள் எதைப்பற்றியும் மூச்சு விடுகிறார்கள் இல்லை. ஒன்று. இரண்டு தடவை அவர்களோடு கொழுவுப்பாடும் வந்தது. நேற்றைக்கு முன்தினம், மம்மல் பொழுதில், கடலுக்குள் சூரியன் முழுவதுமாக தாழ்ந்த பின்னரும் வெளிச்சம் இருந்தது. ஓட்டிகளில் ஒருவன் சிகரெட் புகைத்தபடி ஓரமாக நின்றான். இளைஞன் ஒருவனின் பெயர் தெரியவில்லை, அவன் ஓட்டியை நெருங்கி “இப்படியே போய்க்கொண்டிருந்தால் எப்படி, இன்னும் எத்தனை நாளில இத்தாலிக்குப் போவியள் எண்டதை சொல்லலாந்தானே” என்று கேட்டான். ஓட்டி அவனைப் பொருட்படுத்தாதவனாக மறுபக்கம் திரும்பி நின்று புகையை ஊதி வெளியேற்றினான். இளைஞன் ஓட்டியின் தோளில் கை வைத்து அவனைத் திருப்பினான்.

“நான் விசரன் மாதிரிக் கேட்டிருக்கிறன். நீர் விறைச்ச தலையன் மாதிரி நிற்கிறீர். நாங்கள் லட்சக்கணக்கில காசு கட்டியிருக்கிறோம். மரியாதையா பதில் சொல்ல வேணும். “ஓட்டி இளைஞனது கையை வெடுக்கென தட்டி விட்டான்” ஹலோ! நீங்கள் உடனே போகவேணுமென்றால் பிளேனில போயிருக்கணும். இதில வந்திருக்கக் கூடாது. போட் இப்படித்தான் போகும் சரியா”

“என்ன செருக்குக் கதை கதைக்கிறீர்...” இளைஞன் ஓட்டியின் நெஞ்சை தள்ளியவாறு முன்னால் போனான். சிகரெட்டைத் தூர வீசிய ஓட்டி, இளைஞனை இழுத்து சுற்றி கைகளால் இறுக்கிக் கொண்டான். இதற்கிடையில் ஆட்கள் கூடியிருந்தார்கள். பெரியய்யா இருவரையும் விடுவித்தார்.

“விடுங்கோடா... விடுங்கோடா... மனிசர் எப்ப கரையைக் காணுவம் எண்ட தவிப்பில இருக்கினம்.

> “விடுங்கோடா... விடுங்கோடா... மனிசர் எப்ப கரையைக் காணுவம் எண்ட தவிப்பில இருக்கினம். நீங்கள் என்னடா எண்டா கட்டிப்பிரண்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறியள். பெரியய்யா இளைஞனை இழுத்து தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டார். பிறகு ஒட்டியைப் பார்த்து “ஸொறி தம்பி, ஏதோ கோபத்தில நடந்து போட்டுது. நீங்கள் இதைப் பெரிசா எடுக்க வேண்டாம்” எண்டு சமாதானப்படுத்தினார்.
>
> “சிங்களவன் தான் றோலரை ஒட்டப் போறான் எண்டு முதலிலே தெரிஞ்சிருந்தா நான் கடைசி வரைக்கும் வந்திருக்க மாட்டன். என்று முணுமுணுத்துக் கொண்டு இளைஞன் நகர்ந்து போனான்.

நீங்கள், என்னடா எண்டா, கட்டிப்பிரண்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறியள்” பெரியய்யா இளைஞனை இழுத்து தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டார். பிறகு ஓட்டியைப் பார்த்து “ஸொறி” தம்பி, ஏதோ கோபத்தில நடந்து போட்டுது. நீங்கள் இதை பெரிசா எடுக்க வேண்டாம்” எண்டு சமாதானப்படுத்தினார்.

“சிங்களவன் தான் றோலரை ஓட்டப் போறான் எண்டு முதல்லே தெரிஞ்சிருந்தா, நான் கடைசி வரைக்கும் வந்திருக்க மாட்டன்” என்று முணு முணுத்துக் கொண்டு இளைஞன் நகர்ந்து போனான்.

இவன் கால்களை நீட்டி உட்கார்ந்திருந்தான். கால்களுக்கு மேலே “ட்ரவலிங்” பை கிடந்தது. பொக்கற்றுக்குள், விபூதி சுற்றப் பட்டிருந்த வெற்றிலை காய்ந்து, சருகாகி தூள் தூளாகியிருந்தது. அவற்றை உள்ளங்கைகளில் வைத்துக் கொண்டான். அந்த வெற்றிலையில், அகிலாவின் கைபட்டது என்ற நினைப்பு நெஞ்சை அழுத்தியபடி இருந்தது.

நாரியில் நோ எடுத்து வலித்தது. இந்திய ராணுவம் ட்ரக்கில் தூக்கி எறிந்த அன்றைக்குப் பிறகு, இவனால் ஒரு இடத்தில் நிறைய நேரம் உட்கார முடிவதில்லை. உடம்பு நிறைய இடங்களில் குத்தி உளைந்தது. இப்படியாகினால், கட்டாயம் காய்ச்சல் வரும். ஏற்கனவே வள்ளத்தில் நிறையப்பேருக்குக் காய்ச்சலும், வாந்தியுமாக இருந்தது. சின்னப் பெடியன் இரண்டு நாளாய் காய்ச்சலில் கிடக்கிறான். அன்றைக்கு காலையில் இருந்தே தலையைக் கவிழ்த்து முழங்கால்களை மடித்துக் கைகளை தொடைகளுக்குள் செருகி கருப்பையிலே ஒரு குழந்தையைப் போல, அவன் சுருண்டபடி கிடந்தான். அப்பொழுது இலேசான கணகணப்பாய்த்தான் கிடந்தது. பின்னேரத்துக்குள், அனலாக கொதிக்கத் தொடங்கியது.

கம்பளி ஒன்றால் அவனைச் சுற்றிக்கீழ் அறையில் வளர்த்தினார்கள். அதற்குப் பிறகும், கூதலில் அவனுடம்பு தூக்கித் தூக்கி அடித்தது. பெரியய்யா அவனை வெகு கவனமாய்ப் பார்த்துக் கொண்டார். அவனது உடம்பு நடுங்கத் தொடங்கிய போது, பண்டார ஓடிப்போய்த் தனது கம்பளியை எடுத்துவந்து அவன் மேல் போர்த்தினான்.

அவனும், சிங்கள இளைஞர்களும் சற்று நெருக்கமாக மற்றவர்களுடனும் கதைக்கத் தொடங்கியிருந்தார்கள். அதனால், மாலைப் பொழுதுகளில் காட்ஸ் விளையாடும் போது அவர்களையும் கூப்பிட்டு இருத்திக் கொண்டார்கள். ஊர்க் கதைகளும், பகிடிக் கதைகளுமாய் அந்த நேரங்கள் கரைந்தன. அப்படியான ஒரு நாளிலேயே, எவரும் கேட்டகாமல், பெரியய்யா தன் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

பெரியய்யா, ஆறு சகோதரர்களின் அண்ணனாக இருந்தார். அவரையும் கடைக் குட்டியையும் தவிர்த்து, மற்றதெல்லாம் பெண் பிள்ளைகள். அவருக்கு நேர் மூத்தவள், கல்யாண வயதைத் தாண்டிய பிறகு, எண்பத்தேழில் அவர் சவுதிக்குப் போயிருந்தார். நான்கு பெண் சகோதரிகளுக்கும், கேட்கின்ற சீதனம் கொடுத்துக் கட்டிக் கொடுத்த போது அவருக்கு நாற்பது வயது முடிந்திருந்தது. கடைக் குட்டிப்பெடியன் மீது, பெரியய்யா நல்ல பாசம் வைத்திருந்தார். வேலைக்குப் போன இடத்தில், நெஞ்சைப் பொத்திக் கொண்டு சரிந்த பெரியய்யாவின் அப்பாவைப் பிரேதமாக வீட்டுக்குக் கொண்டு வளர்த்திய போது கடைக்குட்டி தவழத் தொடங்கியிருந்தான். அன்றைக்குப் பிரேதம் கிடந்த கட்டில் கால்களுக்கிடையே அவன் தத்தித் தவழ்ந்து கொண்டிருந்த காட்சி இப்பொழுதும் பெரியய்யாவின் நெஞ்சுக்குள் நிற்கிறது.

சவுதிக்குத் தாமதமாக வந்த கடிதம் ஒன்றில் “கடைக்குட்டி எங்களையெல்லாம் விட்டுவிட்டு இயக்கத்துக்கு போய் விட்டான்” என்றிருந்தபோது, பெரியய்யா நிலைகுலைந்து போனார். “தான் ஒரு கல்யாணம் முடிக்க முதல், கடைக் குட்டியை ஐரோப்பிய நாடொன்றிற்கு அனுப்பிவிட்டால், தனது கடமைகள் முடிந்துவிடும்” என்று அவர் நம்பியிருந்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர், பெரியய்யா ஊருக்கு வந்து கல்யாணம் கட்டினார். இப்பொழுது, இரண்டு வயதில் குழந்தை ஒன்று இருக்கிறது. சமாதான நேரத்தில், பாதைகள் திறந்தன. புலிகள் யாழ்ப்பாணம் வந்து அலுவலகங்களைத் திறந்திருந்தார்கள். பெரியய்யா கடைக் குட்டியின் வரவை எதிர்பார்த்திருந்தார். அவர், அவனுக்காக ஜில்லெட் சேவிங் றேசர், ஹொறக்கொடையில் ரீ சேட்டுக்கள், நைக்கி காலணிகள், உடுப்புகள் என வாங்கி வைத்திருந்தார். கடைக்குட்டியைத் தேடி கொக்குவிலுக்கும், கிளிநொச்சிக்கும் புதுக்குடியிருப்புக்கும் பெரியய்யா அலைந்து திரிந்தார். யாருக்கும் அவனைக் குறித்து தெரிந்திருக்கவில்லை.

அப்படியொரு நாள், புதுக்குடியிருப்பில் வைத்து “கனகாலத்துக்கு முன்னர் சேர்ந்தது என்று சொல்லுறீங்கள். அவர் எங்கட இயக்கத்தில தான் சேர்ந்தவரோ அல்லது வேற இயக்கமோ” என்று பெரியய்யாவைக் கேட்டார்கள்.

அவரிடம் இருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியேறியது. பெரியய்யா அமைதியாக “அவனுக்கு நினைவு தெரிஞ்சு இதுதான் ஆமி, இதுதான் இயக்கம், இது தான் துவக்கு என்று அறிய முதலே நீங்கள் மற்ற இயக்கங்களை முடிச்சுப் புதைச்சிட்டீங்கள்” என்று சொன்னார்.

“மாவீரர் பட்டியலில் பார்த்தனீங்களா?...”

பெரியய்யாவுக்கு ‘திக்’ என்றது....

(வலிகள் இன்னும்...)



# இரகசியப் புலிக்கோட்டை

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

இரத்தினம் மாமி, மருந்து குடிச்சுச் செத்த அன்று, தென்னியன்குளத்துக்குப் போகவேண்டியிருந்தது. அதிகாலை உறக்கத்திலிருந்த என்னை வந்து எழுப்பினார், தேவுச்சித்தப்பா. "ரத்தினக்கா செத்திட்டா. அண்ணைக்குச் சொல்லீட்டு வாறியா?" என்று கேட்டார். அண்ணையென்றால், அவருக்கு நேரே மூத்தவர். அவரும் எனக்கு சித்தப்பாதான். கிளிச் சித்தப்பா. கிருஷ்ணபிள்ளை என்ற அவருடைய பெயர் எனக்குத் தெரிந்தது, தென்னியன்குளத்துக்குப் போன அன்றுதான். தென்னியன்குளத்தில போய் "இரிக்கேஷனில் வேலை செய்கிற கிருஷ்ணபிள்ளை என்று கேள். சொல்லுவார்கள்" என்றார் தேவுச் சித்தப்பா.

கிளிச்சித்தப்பா தென்னியன்குளத்திலிருந்தார். அங்கேயுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை. குளத்திலிருந்து பாய்கிற தண்ணீரை அளந்து குடுக்கிற பணி.

காலை பஸ்ஸைப் பிடித்து மாங்குளத்திலிறங்கினேன். ஊரில் இருந்து நேராக ஒரே பஸ்ஸில் துணுக்காய்க்குப் போகலாம். ஆனால், அது வருவதற்கு தாமதமாகும். அதைப் பார்த்துக் கொண்டிருந்தால், வேளையோடு போய்த்திரும்பவும் முடியாது. இதைவிட, இரத்தினம் மாமி இறந்த அன்றே இறுதிக்கிரியைகளைச் செய்வதற்கும் ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். அதற்குள் கிளிச்சித்தப்பாவை அழைத்து வரவேணும்.

ஆகவே, மாங்குளத்துக்குப் போய், அங்கிருந்து துணுக்காய்க்குப் போகும் பஸ்ஸிலோ, ட்ரக்ரரிலோ, தட்டிவானிலோ போகலாம் என்று மாங்குளத்தில் இறங்கினேன். சொல்லி வைத்தமாதிரியே நான் மாங்குளம் சந்தியில் இறங்க, ஒரு தட்டிவான் நின்றது. அதிலே ஏறி, துணுக்காய்ச் சந்தியில் இறங்கினேன். துணுக்காய் வரையில் ஏற்கனவே வந்திருக்கிறேன். சாமிநாதன் மாமா, அங்கே எள்ளும் உழுந்தும் விதைத்திருந்த போது, அறுவடைக்காக வந்திருக்கிறேன். ஆனால், துணுக்காய்க்கு அப்பால் சென்றதில்லை.

## வித்தியாசம் தெரியாப் பாதைகள்

துணுக்காய்ச் சந்தியிலிருந்து கிளைவிட்டுச் செல்லும் பாதைகள் மேற்கே வெள்ளாங்குளத்துக்கும், வடக்கே உயிலங் குளம், அம்பலப்பெருமாள் ஊடாக அக்கராயனுக்கும் போகும் என்று தெரியும். ஆனால், அங்கெல்லாம் போனதில்லை. இன்னொரு பாதை தென்னியன் குளத்துக்குப் போகும். எல்லாமே செம்மண் தெருக்கள் அல்லது கிறவல் பாதைகள். பெரும்பாலும் காட்டு வழியே. இடையிடையே வயல்வெளியும் ஆற்றுத்தடங்களும் வரும். வழிநெடுகவும் பாலையும் வீரையும் விளாத்தியும் கருங்காலியும் இன்னும் காட்டு மரங்களும் குடை விரித்து நிழல் பரப்பும். எந்தப் பாதையிலாவது கொஞ்சத்தூரம் போனால், வேறுபாடு தெரியாது. எல்லாமே ஒரே மாதிரியே இருக்கும். வன்னிப் பாதைகளுக்கு அப்பிடியொரு ஒற்றுமை.

துணுக்காயிலிருந்து தென்னியன் குளத்துக்கு பஸ்லெல்லாம் கிடையாது. ஊர்க்காரர்கள் சைக்கிளில் அல்லது மாட்டு வண்டிலில் அல்லது ட்ரக்ரரில் போவர்கள். யாராவது ஒன்றிரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் போகக்கூடும். மற்றப்படி வெளியூர்க்காரர்கள் என்றால் போகும் வண்டிகள் வாய்த்தால் ஏறிப் போகலாம். இல்லையென்றால் நடைதான். துணுக்காயிலிருந்து நடந்தேன். எட்டு மைல் நடக்க வேணும். பாதித்தூரம் கடந்திருப்பேன். ஒரு சைக்கிள் வந்தது ஏறிக்கொண்டேன்.





## காலின் கீழே சோழர் எச்சங்கள்

தென்னியன்குளம் சோழமன்னர்கள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்திய காலத்தில் செழிப்பாக இருந்த ஒரு மையம் என்பது அந்தப்பகுதி மக்களின் ஐதீகம். அதற்குரிய ஆதாரங்களும் தொல்லடையாளங்களும் அங்கே இருக்கின்றன. ஆனால், அவை முழுமையாக இல்லை. பெரும்பாலும் அநேகமானவை சிதைந்து எச்சங்களாகவே மிஞ்சியுள்ளன. அந்தச் சிதைவுகளைக் காடுகளில் அங்குமிங்குமாகக் காணலாம். வேட்டைக்காரர்களும், ஊர்க்காரர்களும், தங்களுக்குத் தேவையானதை அவ்வப்போது எடுத்துச் சென்றது போக மிஞ்சியவை இன்னும் அந்தக் காடுகளில் உண்டு. அந்தக் காலத்தில், அங்கிருந்த மக்களுக்கு ஒரு குளம் கட்டப்பட்டுள்ளது. அந்தக் குளத்தைக் கட்டியது சோழர் வழிவந்த தென்னவன் என்று, ஒரு கதையுண்டு. அதனால்தான் அது "தென்னியன்குளம்" என்று மருவி இன்று வழங்குகிறது என்று வரலாறு சொல்கிறார்கள். தென்னியன்குளத்தில் ஆதிக் குடிகள் இருந்து வருகின்றன. இந்த ஆதிக் குடிகளுக்கு பல்லவராயன்கட்டு, அம்பலப் பெருமாள், அக்கராயன், பனங்காமம் போன்ற பகுதிகளுடன் தொடர்பிருந்திருக்கிறது. இந்த இடங்களெல்லாம், அக்காலத்தில் மக்கள் வாழ்ந்த இடங்களே. எல்லாமே ஆறுகளை மையப்படுத்திக் கட்டப்பட்ட சிறிய குளங்களும், அதையண்டிய குடியிருப்புகளுமாக இருந்திருக்கின்றன. இவை அநேகமாக, சோழருடைய பெயர்களைக் கொண்டவை. இன்றைய வரலாற்று ஆய்வாளர்களும், அப்படியான ஒரு முடிவுக்குத்தான் வந்திருக்கிறார்கள்.

## வேட்டையும் வேளாண்மையும்

தென்னியன்குளத்திலிருந்த ஆதிக் குடிகள், துணுக்காய் வழியாகப் பனங்காமத்துக்கும், மாந்தைக்கும் போய் வந்திருக்கிறார்கள். வடக்கே என்றால், பல்லவராயன் கட்டு வழியாக பூநகரி, பொன்னாவெளியூடாக யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் போய் வந்தனர். மற்றும்படி, காட்டின் நடுவே ஒரு குடியிருப்பு. காடென்றால், ஏதோ புதரும் பற்றையுமான சிறிய காடல்ல. யானையும் கரடியும் சிறுத்தையும் நரியும் உலாவும் பெருங்காடு. மானும், மரையும், மயிலும் பன்றியும் நிற்கும் காடு. தென்னியன்குளத்திலிருந்தவர்கள் வேட்டையும், வேளாண்மையும் செய்தே வாழ்ந்திருக்கிறார்கள். ஆதிக்குடிகளின் தொழிலும் வாழ்வும் ஏறக்குறைய இப்படித்தானிருந்திருக்கிறது. கடலோரங்களாக இருந்தால் கடல்தொழிலையும் செய்திருப்பார்கள்.

## மாறத் தொடங்கியது புராதனம்

தென்னியன்குளத்தில் ஆதிக்குடிகளுக்குத் துணையாக, 1956 இல் அங்கே பாழடைந்திருந்த பழைய குளத்தைத் திருத்தி நிர்மாணித்தது அரசாங்கம். ஆனாலும் அது சிறிய அளவிலேயே நடந்தது. குளத்தில் நீர் பிடித்தாலும், பாசனத்துக்குப் போதவில்லை. பிறகு, 1962 இல் திரும்ப அந்தக் குளத்தைப் பெருப்பித்தார்கள். அதோடு அங்கே புதிய குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. புதிய குடும்பங்கள் வர சனப்புழக்கமும் கூடியது. வீடுகளும் கடைகளும், அரச திணைக்களக் கட்டடங்களும் வர ஊரே வேறு விதமாக மாறியது. ஒரு புராதன ஊர் மெல்ல, மெல்ல குடியேற்றக் கிராமமாக மாறியது.

என்றாலும், தென்னியன்குளத்தின் பழைய அடையாளங்களின் கவர்ச்சி குறையவில்லை. பழைய சுவடுகளைத் தேடி ஆய்வாளர்கள் அந்தக் காட்டுக் கிராமத்துக்கு வந்தனர். நில அளவையாளரின் வரைபடக்குறிப்புகளில், புராதன இடங்களைப்பற்றிய குறிப்புகள் எழுதப்பட்டன. வரலாற்று மாணவர்கள் அங்கிருந்த அடையாளங்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அங்கே இருக்கும் மாவில் பக்கமாக ஒரு பெரிய நிலப்பகுதி புராதன அடையாளங்களோடு, இன்னுமிருக்கிறது. ஆனால், அது பெரிய பண்ணைமாதிரி ஆகிவிட்டது.

## காட்டு வழிபாட்டிடம்

மாவில் பக்கமாக நடந்து அந்தக் காடெல்லாம் தேடி, வரலாற்றுச் சுவடுகளை அடையாளம் கண்டோம், நானும் தவபாலனும். தேனெடுக்கும் துரைக்குட்டி அண்ணை வழிகாட்டினார். துரைக்குட்டிக்கு வரலாறு பற்றி அதிகம் தெரியாவிட்டாலும் அங்கே இருந்த கற்களும், குளமும், கறுப்புச் சிவப்பு மண்பாண்டச் சிதைவுகளும் ஏதோ பழைய காலத்து வாழ்க்கையின் மிச்சங்கள் என்று புரிந்திருந்தது. எங்களுடைய ஆர்வத்தைப் பார்த்துவிட்டு உற்சாகமாக வழிகாட்டினார். ஆறு நாட்கள் அங்கே சுற்றியலைந்தோம். ஒருநாள், தென்னியன் குளத்தில் இருந்து நடந்து, ஒட்டறுத்த குளத்தில் மிதந்தோம். இன்னொருநாள் பல்லவராயன் கட்டில்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



# மரண விளையாட்டு

**தமிழன்**

தமிழகத் தமிழர்களை மட்டுமல்ல தரணி எங்கும் வாழும் தமிழர்களையும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம். மர்மம் நிறைந்த அவரின் வாழ்வு போன்று அவரின் மரணமும் மர்மம் நிறைந்ததாகி விட்டது.

இந்தியாவின் இரும்புப் பெண்ணாக வர்ணிக்கப்படும் ஜெயலலிதா உண்மையில் எப்போது இறந்தார் என்பது புரியாத புதிராக உள்ளபோதும் தமிழர்களைப் பொறுத்தமட்டில் அவரின் மரணம் பேரிழப்பே.

## சிறை சிதைத்த உடல் நலன்

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட முதல்வர் ஜெயலலிதாவுக்கு 2014 செப்ரெம்பர் 27 ஆம் திகதி 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி இந்திய ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

பதவியை இழந்த ஜெயலலிதா பெங்களூர் அஹ்ரகாரா சிறையில் அடைக்கப்பட்டார். சுமார் ஒன்றரை மாதம் சிறையில் இருந்த ஜெயலலிதா பின்னர் பிணையில் வெளியே வந்தார். 2015 மே மாதம் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் இரும்புப் பெண் ஜெயலலிதாவை மனதளவிலும் உடல் நிலை ரீதியாகவும் கடுமையாகப் பாதித்ததாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. இதன் பின்னர் தனது வசிப்பிடமான போயஸ் கார்டனை விட்டு அவர் வெளியே வருவது குறைந்துவிட்டது.

தவிர கடந்த தேர்தலின்போது பிரசார நடவடிக்கைகளில் அவர் பெரிதளவில் ஈடுபடவில்லை. அவர் பங்கேற்ற பிரசார கூட்டங்களில் வழமை போன்று நின்றவாறு பேசாது, கதிரையில் அமர்ந்தவாறே உரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## அப்பலோ மர்மம்

திடீர் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட ஜெயலலிதா கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி சென்னை அப்பலோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சாதாரண காய்ச்சல், நீர் சத்து குறைபாட்டாலேயே அவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் ஒரு வாரத்தில் குணமடைந்து விடுவார் என்றும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

ஜெயலலிதா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இரண்டொரு தினங்களிலேயே தமிழச்சி முகப்புத்தகத்தின் மூலம் ஜெயலலிதா மரண மடைந்து விட்டார் எனக்கூறினார். தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்திய மாணவி சுவாதி கொலையின் சந்தேகநபர் ராம்குமார் கொல்லப்படப் போகிறார் என முற்கூட்டியே தகவல் வெளியிட்ட இந்த தமிழச்சியின் இந்தத் தகவலால் தமிழகம் பரபரப்பானது.

அப்பலோ வைத்தியசாலையின் இரண்டாவது மாடியில் 2008 இலக்க அறையிலேயே ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த அறையின் அருகே சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளிகள் பாதுகாப்பை காரணம் காட்டி வேறு அறைகளுக்கு மாற்றப்பட்டனர். இதே போன்று மூன்றாவது மாடியில் இருந்தவர்களும் வெளியேற்றப்பட்டனர்.

சிகிச்சை பெறும் ஜெயலலிதாவைப் பார்க்க அ.தி.மு.க.வை சேர்ந்தவருக்கும் ஏன் தமிழகத்தின் பதில் ஆளுநர் வித்யாசாகர்ராவுக்குக்கூட அனுமதி வழங்கப்படவில்லை. ஒன்றல்ல இரண்டல்ல சுமார் 75 நாள்கள் இந்த மர்ம நிலை நீடித்தது.

## சசிகலா ஏற்படுத்திய பாதுகாப்பு வலயம்

வைத்தியசாலையில் இருந்த ஜெயலலிதாவை, எவரையும் சந்திக்க விடாது தடுத்தவர் அவரின் நிழலாக இருந்த சசிகலாவே. 2008 இலக்க அறைக்கு அருகிலேயே முகாமிட்டிருந்த சசிகலா, ஜெயலலிதாவை சந்திக்க வரும் கட்சிக்காரரையும் முக்கியஸ்தர்களையும் தானே சந்தித்துப் பேசினார்.

இவ்வளவும் ஏன்? ஜெயலலிதாவின் அண்ணனின் பிள்ளைகளான தீபக் (சசிகலாவுடன் இணைந்து ஜெயலலிதாவுக்கு இறுதிச்சடங்கு செய்தவர்), தீபா ஆகியோரைக்கூட ஜெயலலிதாவைப் பார்க்க சசிகலா விடவில்லை.

அதுமாத்திரமின்றி, தனக்குத் துணையாக அப்பலோ வைத்தியர்களையும் தனக்கு வேண்டிய முக்கிய அதிகாரிகளையும் நெருக்கமான உறவினர்களையும் வைத்திருந்தார். இந்த நெருக்கமான வட்டாரங்களில் ஜெயலலிதாவால் கட்சியில் இருந்தும், போயஸ் கார்டனிலும் இருந்தும் துரத்தப்பட்ட டி.டி.தினகரன், சசிகலாவின் அண்ணியின் மகன் விவேக் ஆகியோரும் இருந்தனர்.

இதனால் "சசிகலா அண்ட் கோவைத் தாண்டி எமன்கூட செல்ல முடியாது" என்று கட்சியினர் விமர்சித்தனர்.

## சந்தேகம் கிளப்பிய பெருவிரல் அடையாளம்

இந் நிலையிலேயே ரத்துச் செய்யப்பட்ட 3 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடந்தது. அச்சமயத்தில் ஜெயலலிதா பூரண சுகமடைந்து விட்டார் விரைவில் வீடுதிரும்புவார் எனக் கூறப்பட்டது. ஆனால் கட்சி வேட்பாளருக்கான அனுமதிப் பத்திரத்தில் (போர்ம் பி மற்றும் ஏயில்) ஜெயலலிதாவின் கையொப்பத்துக்குப் பதிலாக பெருவிரல் அடையாளம் இடப்பெற்றமை தெரிய வந்தது.

இந்த விடயம் பெரும் சர்ச்சையைப் கிளப்பிய போதும் மெதுவாக அடக்கப்பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்தே, நிர்வாக ரீதியான சிக்கல்களைத் தவிர்க்க, ஜெயலலிதா வழமையாகத் தனக்குப் பதிலாக நியமிக்கும் ஓ.பன்னீர்செல்வம் பதில் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

## எழுந்த சந்தேகங்கள்

ஒருபுறம் நிர்வாக சர்ச்சை தணிக்கப்பட்ட சமயம் போயஸ் கார்டனில் இருந்து நவம்பர் முற் பகுதியில் பல கார்கள் வெளியேறி இரகசிய இடம் ஒன்றுக்கு சென்றன. அவற்றில் பணம், நகைகள் எனப் பெறுமதியான பொருள்கள் இருந்தன எனப் புலனாய்வு இதழான ஜூனியர் விகடன் தகவல் வெளியிட்டது.

இவை யாரால் கொண்டு செல்லப்பட்டன, எங்கு கொண்டு செல்லப்பட்டன எனத் தெரியாத நிலையில், ஜெயலலிதாவின் நிலை குறித்து பலமான சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

மேலும், 2015 காலத்தில் ஜெயலலிதா சிறையிலும், வீட்டிலும் இருந்த சமயம் சுமார் நான்கரை மாதங்களுக்கும் மேலாக இயங்காது ஸ்தம்பித்த ஆட்சி நிர்வாகமும் கட்சி நிர்வாகமும் ஜெயலலிதா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஸ்தம்பிக்கவில்லை. இந் நிலையும் ஜெயலலிதாவின் இருப்புக் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

ஜெயலலிதாவுக்கு சாதரண காய்ச்சல் என்றே ஆரம்பத்தில் கூறப்பட்டது. நாள்போக்கில் அவருக்கு 35 இற்கும் மேற்பட்ட வருத்தங்கள் உள்ளன எனக் கூறப்பட்டன. இதுவும் ஜெயலலிதாவின் நிலை குறித்துப் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தத் தவறவில்லை.

## 2016. 12. 05

ஜெயலலிதாவின் மரணம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாளான கடந்த 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் அப்பலோ வைத்தியசாலை கட்டடத்திலேயே இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சசிகலாவும் அவருக்கு நெருக்கமானவர்களும் பங்கேற்றனர்.

ஆனால் இதற்கு முன்னராக மாலை 5.40 மணியளவில் ஜெயலலிதா உயிரிழந்து விட்டார் எனத் தகவல்கள் வெளியாகின. அ.தி.மு.க. தலைமையகத்தில் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. இதனால் பெரும் சர்ச்சைகள் கிளம்பின.

அ.தி.மு.கவினரை சந்திக்க சசிகலா அன்ட் கோ வெளியேறிய சமயத்திலேயே இந்தத் தகவல் வெளியானதாகக் கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்து உடனடியாக மறுப்பு வெளியானது. தொடர்ந்து ஜெயலலிதா இல்லாத நிரந்தர (தற்போதைய) அமைச்சரவை தெரிவு செய்யப்பட்டது. இவையெல்லாம் நடந்து சில மணி நேரங்களிலேயே ஜெயலலிதா மரணமானார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஜெயலலிதா உயிருடன் இருந்த சமயத்தில் அவரின் படத்துக்கு முன்னால் கூட முதுகை வளைத்து நின்ற அ.தி.மு.கவினர். ஜெயலலிதா வைத்தியசாலையில் இருந்த சமயத்தில் அவ்வாறெல்லாம் நடக்கவில்லை. இதுவும் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துவிட்டது.

## இறுதிச் சடங்கும், மர்மங்களும்

ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கு நடந்த சமயத்தில் முதலமைச்சர் பன்னீர் செல்வத்தையும் சபாநாயகர் மதுசூதனனையும் ஏனையோரையும் ஒதுக்கி சசிகலாவே அனைத்துமாக இருந்தார். ஜெயலலிதாவின் உடல் பார்வைக்கு வைக்கப்பட்ட ராஜாஜி அரங்கில் முக்கியஸ்தர்கள் சசிகலாவை சந்தித்து ஆறுதல் தெரிவித்தமையும், அரச அதிகாரிகள்கூட சசிகலாவின் கட்டளைப்படியே நடந்தமையும் முதலமைச்சர்கூட ஓரங்கட்டப்பட்டமையும் வியப்பை ஏற்படுத்தியது.

இவை எல்லாவற்றையும் தாண்டி ஜெயலலிதா இறந்ததாக அறிவிக்கப்பட்ட 19 மணித்தியாலங்களுக்கு உள்ளாகவே அவரின் உடல் எம்.ஜி.ஆர். சமாதியருகே அடக்கம் செய்யப்பட்டுவிட்டது. ஆறரைக் கோடிப் பேருக்கும் அதிகமான மக்களின் தலைவருக்கு அவாது அபிமானிகள் அஞ்சலி செலுத்த, போதுமான அவகாசம் வழங்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் பார்க்க முடியாத தூரத்தில் ஜெயலலிதாவின் உடல் வைக்கப்பட்டமையும் ஏதோ ஒரு மர்மம் இந்த மரணத்தில் இருப்பதையே தெளிவாக சொல்கின்றன.

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## அஞ்சலிப்பது தவறா?

கிட்டத்தட்ட 75 நாட்களாக நீடித்த மிக நீண்ட நாடகமொன்று கடந்த 5 ஆம் திகதி முடிவுக்கு வந்துவிட்டது. தமிழகத்தின் முதலமைச்சராக ஆறு தடவைகள் பதவியேற்ற, "இரும்புப் பெண்மணி" என வர்ணிக்கப்படும் ஜெயலலிதாவின் உயிர்ப்பிரிவு, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் இருவேறு விதமான மனநிலையில் ஈழத்தமிழர்கள் இருந்தார்கள். ஜெயலலிதாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதா, இல்லையா என்பதே அந்தக் குழப்பம்.

தமிழகத்தில் எதிர்க்கட்சிக்களுக்கு மட்டுமல்லாமல், அ.தி.மு.க உறுப்பினர்களுக்கு கூட 'அம்மா' என்றால் அடிவயிறு கலங்கும். அந்தளவுக்கு அதிகாரத்தின் சாட்டையை பலமாகப் பற்றியிருந்தவர் ஜெயலலிதா. அப்படிப்பட்டவர் தன்னுடைய கட்சி ரீதியாக தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கும் அதே பாணியையே, ஈழத்தமிழர் விவகாரத்திலும் பிரயோகித்ததன் விளைவே, அவர் நல்லவரா, கெட்டவரா என்ற குழப்பத்துக்குள் பலரையும் தள்ளியிருந்தது.

ராஜீவ் காந்தியின் மறைவுக்கு பின்னர், இந்தியாவில் கொண்டு வரப்பட்ட "பொடா" சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஜெயலலிதாவின் பங்கு முக்கியமானது. அந்தச் சட்டத் தின் கீழே பல ஈழ இளைஞர்கள் கேட்டுக் கேள்வியின்றி கைது செய்யப்பட்டு சிறைகளுக்குள் தள்ளப்பட்டனர். அகதி முகாம்களில் இருந்த ஈழ அகதிகள், விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தப்பட்டார்கள்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை "இலங்கை கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும்" என சட்டசபையில் கோரிக்கை விடுத்தார். இலங்கையில் மக்கள் கொல்லப்படுவது பற்றி கருத்து தெரிவிக்கும் போது "போர் என்றால் மக்கள் கொல்லப்படுவது வழமை தானே" என்று சர்வ அலட்சியத்தோடு வார்த்தைகளை சிதறவிட்டார்.

இவையெல்லாமே 'அம்மா' என்கிற விம்பத்தை ஈழத்தமிழர் மனதில் எதிர்மறையான ஆளுமையாகவே கட்டியெழுப்பின. ஆனால் இதே 'அம்மா' தான், "மஹிந்த ராஜபக்ச ஓர் கொடுங்கோலர். இறுதிப்போரில் இனப்படுகொலை நிகழ்ந்தது பற்றி சர்வதேச விசாரணை வேண்டும்" எனவும், "தமிழீழமே ஈழத்தமிழர்களுக்கு தீர்வு. அதற்காக சர்வசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும்" எனவும் தமிழக சட்டசபையில் தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தார். அத்தோடு ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளிகள் எனத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, அந்தத் தண்டனையை நீக்கி நீதிமன்றம் தீர்ப்பிட்ட பின்னர், அவர்களை சிறையில் இருந்து விடுவிக்க உத்தரவிட்டார். ஆனால் அதனை மத்திய அரசு மேன்முறையீட்டு வழக்கின் மூலம் தடுத்திருந்தது.


இப்படி ஈழத்தமிழர் விவகாரத்தில் சரி எது, பிழை எது என்று ஆராயாமல் தனக்கு மனதில் பட்டதை மட்டும் வைத்துக் கொண்டு கருத்துக்களைச் சொன்னதாலும், முடிவுகளை எடுத்ததாலுமே ஈழத்தமிழர் மத்தியில் ஜெயலலிதா பற்றிய இருவகைப்பட்ட மனப்படிமங்கள் ஏற்படக் காரணம்.

எல்லா நாணயங்களுக்கும் இருபக்கங்கள் உண்டு. சாவு மனிதர்களின் கெடுதலான பக்கங்களை மறக்கச் செய்து புனிதப்படுத்திவிடக் கூடியது. அதைத்தான் இலங்கையிலும் தமிழ் மக்கள் ஜெயலலிதாவுக்கு அஞ்சலித்தமை உணர்த்தி நிற்கின்றது. துணிச்சலான அந்த ஆளுமைக்கு அஞ்சலிப்பதில் தவறொன்றுமில்லையே.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

புதுவிதி
விளம்பரத் தொடர்புகளுக்கு...
021 492 7466, 0777 243 129
puthuvithimkt@gmail.com

வர்சி




# வரிகளில் ஓடும் நல்லாட்சி வாகனங்கள்

மகிந்த ஆட்சியை வீழ்த்தி, நல்லாட்சி எனும் அரசை கொண்டு வந்தனர் மக்கள். ஆனால் "நல்லாட்சியை விடவும் மகிந்த ஆட்சியே பரவாயில்லை" என்று தற்போது முணுமுணுக்கத் தொடங்கியுள்ளனர் மக்கள். அதற்கு காரணம் இல்லாமலுமில்லை. அரசாங்கத்தின் அண்மைக் கால ஆடம்பர செலவுகள், கட்டுமீறிப் போவதோடு, சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவு, சரசர வென உயர்வடைவதுமே இதற்கான பிரதான காரணமாகும். அரசின் தலைவர் எளிமையாகவும் சிறந்த மனிதராகவும், எல்லோரிடத்திலும் பெயர் எடுப்பராகவும், இருந்தால் மட்டும் போதாது. அவரின் கீழ் இருப்பவர்களும், அவரைப்போல் நடந்தாலே மக்கள் நல்லாட்சி அரசின் மீது நம்பிக்கை வைப்பர்.

அண்மையில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக் கப்பட்ட அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய வரிச்சுமை, மற்றும் தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ளதே ஒழிய, மக்களுக்காக சொல்லிக் கொள்ளும்படியாக எவ்வித திட்டங்களும் இல்லை. ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கோ ஏராளம் சலுகைகள்.

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக பெருமளவு மக்கள் நிதி செலவிடப்படவுள்ளது. மகிந்த காலத்தில்கூட இல்லாத சலுகைகள் இவர்களுக்கு நல்லாட்சி அரசில். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மாதாந்தச் சம்பளம் 50 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாடாளுமன்ற அமர்வில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவு, நாளொன்றுக்கு 500 ரூபாவிலிருந்து 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனைவிட, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு பதிலாக, கொழும்பில் வீடு ஒன்றை வாடகைக்கு கொள்வனவு செய்ய, ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவும் கிடைக்கவுள்ளது. மாதிவலையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பில் உரிய வசதிகள் இல்லை என்பதால், "அவர்கள் கொழும்புக்கு அருகில் வீடுகளை வாடகைக்கு கொள்வனவு செய்ய இந்த கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்" என கடந்த செவ்வாய்க் கிழமை அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்திலும், உத்தியோகபூர்வ வீடுகள் இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வாடகையாக ஒரு லட்சம் ரூபா வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் ஏற்பட்ட கடும் எதிர்ப்புக் காரணமாக அந்தக் கொடுப்பனவு 50 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அதி சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்ய 79 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது. அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்டவர்களுக்கு 28 வாகனங்களை இறக்குமதி செய்யவே இந்தப் பணம் கோரப்பட்டுள்ளது. ஆனால் சிறுவர் விவகாரங்களுக்காக 6 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீட்டு அறிக்கையை, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்

இதனைவிட, சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு, புதிய 10 அதி சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுப் பணிப்பாளர் உட்பட, இதன் உயர் மட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே அதி சொகுசு வாகனங்கள் இருக்கின்ற நிலையிலேயே, இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரிகளின் பயன்பாட்டுக்கென வாகனங்கள் இருக்கின்ற நிலையிலும், புதிய வாகனம் ஒன்றிற்கு மாதாந்த கட்டுப்பணமாக 150,000 முதல் 170,000 ரூபா செலவில் மேலும் 10 அதி சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இப்படி சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வது என்பது, நல்லாட்சி அரசாங்கத்திற்கு துரதிர்ஷ்டம் என்றும், அரசாங்கத்தின் நிதிகளை தவறாக பயன்படுத்தும் ஒரு திட்டம் என்றும் சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், சிவில் விமான சேவைகள் அதிகாரசபை பொதுப் பணிப்பாளர் எச்.எம்.சி. நிமலசிறிதெரிவிக்கையில், தங்கள் நிறுவனத்திற்கு ஐந்து புதிய பணிப்பாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளமையினாலேயே, ஐந்து வாகனங்கள் புதிதாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், 10 வாகனங்களை கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தும் ஐந்து வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதேபோன்று, பத்தரமுல்லையில் அலுவலகத்தைக் கொண்டுள்ள அமைச்சருக்காக தருவிக்கப்பட்ட அதிசொகுசு வாகனம் தொடர்பிலும் தற்போது அனைவரினதும் கவனம் குவிந்துள்ளது. புதிய ரக பென்ஸ் கார் ஒன்றே இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. குறித்த வாகனம் தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மக்களின் வரிப்பணத்தில் அமைச்சர்கள் ஆடம்பரமாக இருக்கவா மக்கள் நல்லாட்சியை ஆட்சி பீடமேற்றினர்?

"அரசின் செலவீனங்களை குறைக்க பொது மக்கள் செல்லும் விமானங்களிலேயே ஜனாதிபதி தனது வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதாக காட்டும் அரசாங்கம், இப்படியான ஆடம்பரங்களுக்கான செலவுகளை எங்கள் தலையில் கட்டவா வரிகளை அதிகரித்துள்ளது?" என மக்கள் கேட்பதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது. வாழ்க நல்லாட்சி.

# அம்மா அதிகாரம்

01



"சத்துணவு உயர்மட்டக் குழு உறுப்பினராக இருந்தார்...", "சினிமா நடிகையாக இருந்தார்...", "முதலமைச்சராகவும் இருந்தார்..." என்று திமுக தலைமையும், அடுத்த தலைமையாக நம்பப்படுபவரும், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தங்கள் இரங்கல் அறிவிப்பில் பத்திரிகையாளர்களிடம் நாசுக்காக குத்திக்காட்டிக் கொண்டிருக்க, கனிமொழியின் இரங்கலை பல மடங்கு நேர்மையானதாகவும் உளப்பூர்வமானதாகவும் பார்க்கிறேன்.

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும், இந்தத் திராவிட தேசத்தின் இரு பெரும் தூண்களாக இருந்தபோதிலும், எதிரிகளைப் போலவே ஒருவருக்கொருவர் நேற்றுவரை இருந்திருக்கின்றனர். "இன்று, அ.தி.மு.கவின் தலைமை மறைந்த பிறகாவது இரு கட்சிகளும் இணைய வேண்டும்" என்பதே என் ஆழ்மன ஆசை. மூன்றாவது அணி தோற்ற நிலையிலும், தேசிய அணிகள் சூழ்ச்சி செய்து தமிழ் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடுமோ? என்ற பயம் நிறைந்த சூழலிலும் "இதைவிடவும் ஒரு சிறந்த மாற்று இருக்குமா" என்று தெரியவில்லை. அடிமட்ட மக்கள் மனதில், தி.மு.க, அ.தி.மு.க என்ற இரு பெரும் கட்சிகள் தான் இன்றுவரை இடம் பிடிக்க முடிந்திருக்கிறது. படித்த மேதாவிகளின் பா.ஜ.க குறித்த புளகாங்கிதமும், தமிழ்த் தேசியம் குறித்த வெறுப்பும் வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்பதை இதுவரை காலம் உணர்த்தி வந்திருக்கிறது. இனி மேலும் அது தொடரவும், மாஃபியா கும்பலிடம் சிக்கி, தமிழ்நாடு சின்னாபின்னமாகாதிருக்கவும், தி.மு.க மற்றும் அ.தி.மு.கவும் இணைந்தே ஆக வேண்டும், என்று மீண்டும் மீண்டும் மனம் ஏங்குகிறது.

**விலாசினி ரமணி**

வாழும்போது போட்டு கழுவோ கழுவென்று கழுவிவிட்டு, இறந்ததும் "ஒப்பற்ற தெய்வமே, இதய தாரகையே, உலகத் தமிழர்களின் விடிவெள்ளியே" - என்ற வசனத்தை யாரேனும் சொல்லும் போது சாணியை எடுத்து சப்பென்று அப்பவேண்டும் போல் இருக்கும், "இரும்புப்பெண்மணியே, அதே, இதே" என்று வாய்கூசாமல் புழுகித் தள்ள இவர்களால் எப்படி முடிகின்றது என்பது மட்டும் எனக்குத் தெரியவில்லை. உயிருடன் இருக்கும் போது இவர்களுக்கு கேலிப்பொருளாகவும், சர்வாதிகாரியாகவும் இருந்த ஒருவர் இறந்த பின் "ஓவர் நைட்டில்" எப்படிப் புனிதராகிப் போகிறார் என்று தான் எவ்வளவு யோசித்தும் விடையே இல்லாமல் இருக்கிறது. ஜெயலலிதா வாழும் போதே அவர் மீது பேரபிமானத்தோடு இருந்த பலர் அவர் இறந்த பிறகும் அதே அபிமானத்தோடு புகழ்கிறார்கள். அது தான் நாகரீகம்.

02



எல்லோரும் சொல்கிறார்கள் என்பதற்காக கடமைக்கு புழுகித் தள்ளுபவர்களைக் கண்டால், எரிச்சலாய் இருக்கிறது. கேட்டால் நாகரீகமாம். நாகரீகம் என்பது ஒருவர் உயிரோடு இருக்கும் போதே அவர் நற்பண்புகள் குறித்துப் பேசுவது, பெருமிதம் கொள்வது. இறந்த பிறகு "இரும்புப் பெண்மணியே" என்பதில் இல்லை நாகரீகம்.

எனக்குப் பிடிக்காத அரசியல்வாதிகளில் முதலில் இருந்தவர் ஜெயலலிதா, இரண்டாவது தான் கருணாநிதி. அவர் இறந்துவிட்டார் என்பதற்காக நான் அவரை வெறுத்தது இல்லை என்று ஆகி விடாது. ஆனாலும் விடுமுறையில் வீட்டிற்குச் செல்லும் போது ஒலிக்கும் ஜெயா டிவியில் "தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி, இதய தெய்வம், தங்கத் தாரகை அம்மா அவர்கள் தெரிவித்தார்" என்ற காலங்காலமாக கேட்டுப் பழக்கமான செய்தி அறிக்கையை, என் சிறுவயது முதலே பரிச்சயமான ஒன்றை இழந்த கவலை மட்டும் தான் எனக்கு. கூடவே பிரிந்து போன ஒரு உயிருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். அவளவே!

**கிஷோகர் ஸ்ரனிஸ்லஸ்**

இத்தனைக்கும் அவர் எனக்குப் பிடித்த தலைவரில்லைதான்.

அப்படியிருந்தும் மனம் கசிகிறது. ஆனால் அவர் ஒரு பெண் தனித்து நின்று அரசியலில் வென்று காட்டியவர்.

எதிரிகளைத் தயவு தாட்சண்யமின்றி பந்தாடியவர். தனது பிடிவாத குணத்தையும் நினைத்ததைச் செய்வதையும் யாருக்காகவும் தளர்த்திக் கொள்ளாதவர்.

இந்த குணங்கள் அவரிடம் இல்லாதிருந்தால் ஒருவேளை எனக்கும் அவர் பிடித்த தலைவராக இருந்திருக்கலாம்.

ஆனால், அந்த குணங்கள் அவரிடம் இல்லாதிருந்தால், அரசியலில் இருந்து அவரை எப்போதோ ஒழித்துக் கட்டியிருப்பார்கள்.

"அரசியலில் சாணக்கியர்கள்" என்று சொல்லப்பட்டவர்களுக்கெல்லாம் ஒற்றைப் பெண்ணாக சிம்ம சொப்பனமாக இருந்தவர். அவரைப் பாராட்டவோ, பரிகசிக்கவோ பல விஷயங்கள் நம்மிடம் இருக்கலாம். அதையெல்லாம் மீறிய ஒரு பரிவு அவர்மீது ஏற்படுகிறதென்றால், அது எதனால் ஏற்படுகிறதென்று விளக்கம் சொல்லத் தெரியவில்லை.

நம்மோடு, இத்தனை காலம் நெருக்கமாக வாழ்ந்த ஒரு பெண், மிகுந்த அவஸ்தைகளோடு அரசியலோடும், சொல்லப்படாத ரகசியங்களோடு மோசமாக பாதிக்கப்பட்ட நிலையிலும் தன்னை நேசிக்கும் மக்களை கடைசியாக பார்க்க முடியாமல் அவர்களுக்கு எந்த செய்தியும்

03



சொல்லமுடியாமல், போராடி மரணமடைந்தது மிகுந்த துயரத்தை தருகிறது.

"அவருக்கு எது நல்லதோ" அதை இறைவன் வழங்கட்டும் என்று பிரார்த்திப்பதைத் தவிர வேறொன்றும் சொல்லத் தெரியவில்லை.

என் காலத்திய, எனக்கு தெரிந்த தலைவர்களில், எனக்கு உடன்பாடில்லாத ஒரு தலைவருக்காக, முதன்முறையாக என்னை மீறி அழுது கொண்டிருக்கின்றேன்.

**கல்யாணசுந்தரம் புதுச்சேரி.**

சொந்த வாழ்வில் ஏற்பட்ட தோல்விகளும் ஏமாற்றங்களும்,பொது வாழ்வில் சந்தித்த அவமானங்களும் அவரை எவரும் நெருங்கமுடியாததோர் தொலைவில் வைத்திருக்கச் செய்திருக்கலாம், இவைகளே அவரை எதற்கும் அஞ்சாத தற்துணிவுடையவராக்கி, அத்துணிவையே பலரும் அகந்தை, ஆணவம் கொண்டவர், எவருக்கும் அடிபணியாதவரென குறைபகர வைத்திருக்கலாம். சரி, பிழை எனும் தன்மைகளுக்கப்பால் எடுத்த முடிவுகளில் இருந்து என்றும் பின்வாங்காத தன்மை அவரின் எதிரிகளை மட்டுமன்றி சூழ இருந்தோரையும் என்றும் அச்சத்தில் வைத்திருந்ததென்பது அவரின் பாணி. எதிர்பார்த்து ஆசைப்பட்ட வாழ்வு கிடைக்காமல் போனதும்,எதிர்பாராது வந்த வாழ்வில் உச்ச நட்சத்திரமாய் மிளிர்ந்தார்.

கோர்ப்பரேட் இந்தியாவில் ஊழலின் கறைபடியாத அரசியல்வாதிகள் என்றெவருமில்லை, அவ்வாறே எதிர்பாராது கிடைத்த பதவியெனும் தகுதி இவரையும் தடுமாறவைத்து ஊழலின் கரங்களுள் சிக்கவைத்திருக்கலாம்.

நிலவுடமை ஆணாதிக்க சமுதாயத்தில் தனியொரு பெண்ணாய் அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு, எதிர்பார்த்ததிலும் சற்றேறக்குறைவான ஆட்சியையும், தன் கட்சிக்குள் தலைமைத்துவத்திற்கான ஆளுமைப் பண்புகளுடன்கூடியதோர்தலைமைத்துவம், நிர்வாகமுறைமைகளையும் ஏற்படுத்தியிருந்தார்.

தனிப்பட்ட வாழ்வில் நம்பிக்கைமிகு உறவுகளென்று எவருமில்லையெனினும், தனது ஆட்சியில் தமிழ் நாட்டு மக்களுக்கு செய்த சிலபல நன்மைகள் அவரை அம்மக்களின் குடும்ப உறவுகளில் ஒருவராக்கியது.

இறுதிவரை அன்புக்கும்,

அரவணைப்பிற்காகவும் ஏங்கிய ஒருவராகவே வாழ்ந்திருந்தவர் இனிமேலாவது அமைதி கொள்ளட்டும்.

**கார்வண்ணா சுபாஷ்**

04



# அம்மா

## அதிகாரம் 05



ஜெயலலிதா, தன் அரசியல் வாழ்வின் மேல் நிலையில் இருக்கையில், "எப்போது மறைவார்?" என சுற்றம் விழையும் வரை காத்திராமல், மறைந்துவிட்டாரே என அன்பர்கள் துக்கிக்கும் நிலையில் மரணமடைந்தது பொருத்தமானது. தமது வாழ்க்கையை, தமது நினைப் பின்படி வாழ்ந்தவர், கிழப்பருவ மெய்திக் கொடுங் கூற்றுக்கிறையெனப் பின் மறைவது பொருத்தமாக இருந்திராது. கவர்ச்சிகரமான நடிகையாக அறியப்பட்டவர் தன் தோற்றம் சார்ந்த கவனங்களில் - இளமைத் தோற்றம், கருமுடி, ஆடை அலங்காரம் - தங்கி நிற்காமல் காலத்தின் காலத்திற்கேற்பத் தனது பிம்பத்தை மாற்றிக்கொண்டார். நாவன்மை அரசியலிலிருந்து மாறுபட்டு, சராசரி பொதுத்தமிழில் அடைமொழிகள் இன்றிப்பேசி பல தேர்தல்களை வெற்றிகளைக் கண்டார்.

திமுக, காங்கிரஸ் அரசியல்வாதிகள், கடைசித் தேர்தல் வரை அவரது வாழ்க்கையை ஒழுக்க மதிப்பீடுகளுக்கு, உட்படுத்தி இழி சொற்கள் பேசினர். ஆணாதிக்கத்துக்கு பொது வாழ்க்கையில் அவர் வேட்டு வைத்ததைப் போல, தாக்கம் செலுத்தியவர்கள் இல்லை. எல்லா அரசியல் தலைவர்களும் தமது ஆத்மார்த்தமான உறவுகளை தமது குடும்பம், ரத்த உறவு, சாதி, இனம் சார்ந்து அமைத்து வரும் காலத்தில், இவற்றிக்கு அப்பால் சசிகலாவை தன் குடும்பமாக, துணையாக அமைத்துக் கொண்டார். அந்த உறவை ஒருபால் உறவாக ஊகித்துப் பேசப்பட்ட இழி சொற்கள் எவற்றிக்கும் அவர் தன்னிலை விளக்கம் அளிக்கவில்லை. இதை சோபன் பாபுவுடன்கூடி வாழ்ந்ததுடன் இணைத்துப் பார்த்தால் தனி மனித உறவுகளுக்கு அவர் அளித்த முக்கியத்துவத்தை உணரலாம். அவரது முன்னோடி பாத்திரத்தையும் புரிந்து கொள்ளலாம். காஞ்சி மடத்தை அவர் தகர்த்ததைப்போல, சொந்த சாதி அதிகாரத்திற்கு எதிராக செயல்பட்ட அரசியல் தலைவர்கள் அரிதாகவே இருப்பர். அதுபோல தனது அரசியலை சுய சாதிக்கு அப்பால் வைத்தே இயங்கினார். தனது சொந்த குடும்பத்தையும், தனது அரசியலுக்கு அப்பாலேயே நிறுத்தி இருந்தார். அவர் மறைவுக்கு பின்னர் இரண்டு மாஃபியாக்கள் ஓங்கும் வாய்ப்பு உண்டு. இதில் மன்னார்குடி பற்றி மட்டுமே அரசியல் அறிஞர் பேசுவர். இரண்டைப்பற்றியும் சம கவனத்துடன் இருப்பதே விழிப்புணர்வு.

-கண்ணன் சுந்தரம்.




# திரையிடலும் திரைமறைவுத் தடைகளும்

**கிரிஷாந்த்**

**யாழ்.** பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில், டிசம்பர் 5 ஆம் திகதி இடம்பெறவிருந்த, ஆய்வாளரும் ஆவணப்பட இயக்குநருமான பரம்சோதி தங்கேசின் "புங்குடுதீவு-சிதைவுறும் நிலம்" என்ற ஆவணப்படம், பல்கலைக் கழகத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது.

"தற்போது திரையிட முடியாது காரணத்தை பின்னர் அறிவிக்கிறோம்" என்று சொல்லி, அனுமதியளித்த நிகழ்வை முதல் நாள் (டிசம்பர் 4) ஒரு சிறிய அறிவித்தலுடன் நிறுத்தியிருக்கிறது.

இது தொடர்பில், ஆவணப்பட இயக்குநர் தங்கேசிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் கூறியவை ஆச்சரியமாயும், அதிர்ச்சியாயும் இருந்தன, "இப்படியெல்லாமா தடையைத் தீர்மானிப்பார்கள்" என்று தலை சுற்றியது.

திரையிடல் தடைக்கு தங்கேஸ் கூறுகின்ற பிரதான மற்றும் கூட்டுக் காரணிகளாக இருக்கக் கூடியவை-

*1* டிசம்பர் முதலாம் திகதியே -திரையிடலுக்கு தீர்க்கமான அனுமதி கிடைத்த பின்னரே -திரையிடல் பற்றிய அறிவிப்பை தங்கேஸ் வெளியிட்டிருந்தார்.

ஆனால் அதன் பின்னர் "அடையாளம்" நிறுவனம் பல்கலைக் கழகத்தில் நடத்திய சமூக நீதி பற்றிய அமர்வொன்றில் அவர் தனது கட்டுரையை வாசித்திருந்தார். அன்றைய தினம் நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தார்.

"நீங்களா சுமந்திரனை அழைத்தீர்கள்?" என்ற கேள்வி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏற்பாட்டாளர்களால் தங்கேஸிடம் கேட்கப்பட்டது. அதற்கு "நிகழ்வு பற்றி சுமந்திரன் எம்.பி, அடையாளம் நிறுவனத்தின் மின்னஞ்சல் மூலம் அறிந்திருந்ததாலேயே வந்திருந்தார்" என்று தங்கேஸ் கூறினார்.

இது முதலாவது சந்தேகம்.

*2* - தங்கேஸ், அடையாளம் நிறுவனமும் பல்கலைக்கழக விஞ்ஞான சங்கமும் இணைந்து நடத்திய கலந்துரையாடல் பற்றி முக நூலில் குறிப்பொன்றை எழுதியிருந்தார், அதில் "சாதி என்ற விடயத்தைக் கூட சமூக நீதி என்றபெயரில் தான் உரையாட முடிகிறது" என்ற தொனிப்பட ஒரு நிலைத் தகவலை இட்டிருந்தார்.

இதனையடுத்து இது விஞ்ஞான சங்கத்தை விமர்சிக்கும் செயல் என்று பல்கலைக்கழகத் தரப்புகள் சில கருதியுள்ளன. இந்தப் பதிவு ஏற்பாட்டாளர்களுக்கு கோபத்தையோ அல்லது சந்தேகத்தையோ தங்கேஸ் மீது ஏற்படுத்தியிருக்கிறது.

*3* - மூன்றாவது காரணம் பற்றித் தங்கேஸ் தனது முகநூலில் எழுதிய குறிப்பின் துண்டொன்றை இணைக்கிறோம்.

★ ★ ★

"நேற்றைய தினம் (04/12/2016) எனது கையடக்கத் தொலைபேசிக்கு ஒரு தகவல் வந்தது. "கைலாசபதி கலையரங்கில் திரையிடுவதற்கு உமது ஆவணப்படத்தின் பிரதி ஒன்று எமக்குத் தேவை" என்று. நானும் உடனே ஒரு பிரதியை உரியவரின் வீட்டில் சென்று கொடுத்தேன். அவர் கேட்டு அரை மணித்தியாலத்துக்குள் அதனைக் கொடுத்துவிட்டேன். உரியவர் அங்கு இல்லாததால் "உங்கள் வீட்டில் கொடுத்துள்ளேன்" என்று தகவல் கொடுத்தேன். பின்னர் உடனடியாக பின்வருமாறு ஒரு தக்வல் வந்தது:

"நிர்வாகம் படத்தினைத் திரையிட அனுமதி தருவதற்கு ஆயத்தமாக இல்லை. அவர்களுக்கு மேலதிக நேரம் வேண்டும். பின்னர் அறியத்தருவோம். அசௌகரியத்துக்கு வருந்துகின்றோம். உமது பிரதியை திரும்ப எடுத்துச் செல்லவும்"

★ ★ ★

இந்த மாதிரி இறுதி நேர அறிவித்தல்களுடனும், வெற்றுச் சாட்டுகளுடனும் நிகழ்வுகளை நிறுத்துவது, பல்கலைக் கழத்திற்குப் புதியதல்ல. இந்த வருடத்திலேயே, இது மூன்றாவது தடை,

புதுவிதியில் இதற்கு முன்னராகத் தடை செய்யப்பட்ட மற்றைய நிகழ்வுகள் தொடர்பிலும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தோம்.

இந்த வருடம் மலையக மக்களின் வரலாற்று ஆவணமாக எழுதப்பட்ட மு. சி .கந்தையாவின் "சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்" நூல் வெளியீடு அரசியல் பிரமுகர்கள் (அனைத்துக் கட்சிகளும்) வருகை இருப்பதால் வெளியீட்டுக்கு முதல் நாள் அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் அது மறைக் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

பிறகு "தவிப்பு" என்ற தனியாள் ஓவியக் கண்காட்சி, கண்காட்சி தினத்திற்கு முதல் நாள் தடை செய்யப்பட்டது. இறுதி நேர யுத்த வன்முறைகளை ஓவியங்கள் பேசியதால் இது நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. பின்னர் அது பலாலி வீதியில் உள்ள வீடொன்றில் நடந்தது.

இப்படியாக தொடர்ந்து பல்கலைக் கழகத்தில் கருத்துச் சுதந்திரத்துக்கும், மாற்றுச் சிந்தனைகளுக்கும் எதிரான நிர்வாகத்தின் போக்குகள் கண்டிக்கப்பட வேண்டியவை. வெறுமனே இலச்சினையில் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று எழுத்தில் மட்டும் வைத்திருக்கும் யாழ். பல்கலைக் கழகம், உண்மையாகவே மெய்ப் பொருளைக் காண்பதற்கு தடையாகவே இருக்கின்றது இதற்கு புங்குடுதீவு: சிதைவுறும் நிலம் ஆவணப் படத்துக்கான தடையும் ஒரு உதாரணம்.



புதுவிதி

# அலம்பல் ஆச்சி



செல்வி

இந்தக் கிழமை ஆச்சியின்ரை புறுபுறுப்பு இருக்காது பெடியள். பயப்பிடாமை வாசியுங்கோ. கனகாலத்துக்குப் பிறகு நெஞ்சுக்குள்ளை தண்ணி வந்தது போலை இருக்கடா மோனை. எங்களுக்காக நஞ்சு மாலையை கழுத்தில் சுமந்து மண்ணில் புதைஞ்சுபோன மாவீரர்களுக்காக, எங்கடை மண்ணிலை விளக்கேத்தியிருக்கிறம். விளக்கேத்தினதுக்கு பின்னாலையும், முன்னாலையும் இடையாலையும் இருக்கிற அரசியல் விளையாட்டுக்களை விட்டிடோணும். எங்கடை சனம் அவையின்ரை அரசியலுக்கு எடுபட்டுதான் விளக்கேத்த வந்ததெண்டு அவை நினைச்சினமெண்டா, அதைப்போல ஒரு பேய்த்தனம் வேறை ஒண்டும் இருக்காது. தங்கடை பிள்ளையளை, பேரன் பேத்திகளை மண்ணுக்கை குடுத்துப்போட்டு நிக்கிற சனத்துக்கு தான் அந்த வேதனை தெரியும்.

நடுநிலை எண்டு சொல்லிப்போட்டு எங்கடை சனத்தை சீண்டுறது போலை கதைக்கிற விசர்க்கூட்டத்துக்கு உதுகளை சொல்லுறதும் வீண்வேலைதான். ஆக்களை விட்டா, பிடலுக்குப் பெட்டி எடுத்துக்கொண்டு ஓடுவாங்கள் போலை இருந்திச்சு. உன்ரை நாட்டுக்காக உயிரைக் குடுத்தவனை கொண்டாடாட்டிலும் பரவாயில்லையடாப்பா. நடுநிலை எண்ட பேரிலை புலியெதிர்ப்பு செய்யாமை எல்லாத்தையும் பொத்திக் கொண்டு இருங்கோ. புறுபுறுக்கக் கூடாதெண்டு நினைச்சாலும் உங்கட ஆட்டங்களை நினைக்க தேகமெல்லாம் பத்திக்கொண்டு வருது. ஆனால் ஒண்டு சொல்லுறன்டாப்பா. எண்டைக்கோ ஒரு நாளில் அவர்களின்ரை பெயராலை எங்கடை நிலம் எங்களுக்கு கிடைக்கும் எண்ட நம்பிக்கையோடை கடைசிக்காலங்களை கழிக்கிற ஆக்களிலை ஆச்சியும் ஒராள் தான். உங்களுக்கு கொஞ்சமெண்டாலும் மனசாட்சியெண்டு ஒண்டு இருந்தா, உங்களையெல்லாம் மேய்ச்சு, ஒரு குடையின் கீழை கொண்டுவரோணுமெண்டு நினைச்ச மனுசனின்ரை ஓர்மத்தையும் வீரத்தையும் மறக்கமாட்டிங்கள்.

இளம்பிள்ளையள் எத்தினை கனவுகளோடை பள்ளிக்கூடம் போயிருக்குங்கள். எப்பிடியெல்லாம் வாழோணும் எண்டு அவர்கள் கண்ட பதின்ம கனவுகளை தங்களுக்கையே புதைச்சுப் போட்டு, விடுதலை எண்ட ஒண்டுக்காக போனவங்கள் தான். ஒரு குரூப் பள்ளிக்கூடம், கம்பஸ், அரசாங்க வேலையெண்டு திரிய, இன்னொரு புறம் இனத்துக்காக தங்கடை உயிர்களைப் பணயம் வைச்ச தியாகமும் எங்கடை நாட்டின்ரை வரலாறுகள். அவையள் மற்றப்பிள்ளையளைப் போலப் பட்டத்துக்குமேலை பட்டம் வெற்று வாழோணுமெண்டு நினைக்கையில்லை. அவையின்ரை தம்பியும் தங்கச்சியும் ஏத்துற பட்டத்தின்ரை காத்து கூட சுதந்திரமானதா இருக்க வேணுமெண்டு நினைச்சினம். அவையோட்ட பிள்ளையள் இலங்கை கிரிக்கெட்டுக்கு கைதட்டி ஆரவாரித்து ஓட்டங்களை எண்ணிக் கொண்டிருக்கேக்கை, ரவைகளின் சிதறல்களை எண்ணிக்கொண்டிருந்தினம். கல்யாணக் கனவுகளை, கல்லறைகளுக்குள் புதைத்துப் போட்டு விடுதலைக்கனவை மட்டுமே நெஞ்சில் சுமந்திச்சுதுகள். சின்ன காயத்துக்கு கூட அலறியடிச்சு ஊரைக்கூட்டும் எங்கடை அக்காக்கள், எத்தினை காயங்களை தாங்கி மண்ணுக்குள்ளை போயிட்டினம். மண்ணை விரும்பினதாலை தங்களுக்கு தாங்களே நஞ்சுத்தாலி கட்டிக்கொண்ட தியாகிகள் அவையள்.


சுயநலவாதியளாய் நீங்கள் படிச்சு கிழிச்சுக்கொண்டிருக்க, அவையள் செயல்களின்ரை உச்சத்தை தொட்டிச்சினம். சிறிய கப்பல்களிலை இருந்து பெரிய ஆயுதங்கள் வரைக்கும் தாங்களே செய்த பொறியியலாளர்கள் அவர்கள். உலகத்தின்ரை சமுத்திரங்களின்ரை நீள அகலங்களை மட்டுமில்லாமை, ஆழங்களையும் தொட்டு வந்திச்சினம். பெடியளை கண்டா சிங்களவனுக்குக் கெடிக்கலங்கிற அளவுக்கு சூழியனுகள். வானத்திரை எல்லையையும் அளக்கேக்கதான் உலகமெல்லாம் சேர்ந்து அவையின்ரை கனவை பொசுக்கிபோட்டாங்கள். துறவிகள் என்று காவி போட்டு இனவாதம் கதைக்கேல்லை அவையளின்ரை துறவறம் விடுதலைக்கானதாய் இருந்தது. அவங்கடை திறமையாலை உலகத்தையே திரும்பிப் பார்க்க வைச்சாங்கள். கடற்புறாவாகிச்சினம். சமுத்திரங்களை ஆண்டினம். 'கரும்புலி'களாகி விடுதலைத் தீயை மூட்டினார்கள்.

ஆனால், இண்டைக்கு?? அவையின்ரை கல்லறைகளை உழுது கெடுத்திருக்கிறாங்கள். 8 வருசத்துக்கு பிறகு இந்த மண்ணிலை விளக்கேத்த கிடைச்சிருக்கிது. ஆனா இது நல்லாட்சிக்கான அறிகுறியாத் தெரியேல்லையடா அப்பு. கவனமா இருங்கோ. விட்டுப்பிடிக்கிறாங்கள். இராணுவத்தின்ரை கட்டுப்பாட்டுக்குள்ளை இருக்கேக்கை யாழ்ப்பாண கம்பசிலை ஒளிகொண்ட அந்த தீபத்தின்ரை வீரம் இண்டைக்கும் நினைவிலை நிக்குது. ஆனா, இந்தமுறை அந்த உணர்வு அப்படியாவா வரேல்லை. அதுக்கு பின்னாலை என்னவும் இருக்குமோ எண்டுதான் யோசிக்க வைக்கிது.

எங்கடை பெடியளுக்கு நாங்கள் விளக்கேத்துறதுக்கு விளக்கம் கேட்கிற எல்லா பேரினவாதியளுக்கும் ஒருநாளைக்கு மாவீரத்தின் அடி, விழத்தான் போகுது. எத்தினைபேர் விளக்கேத்த வருவினம் எண்டு கேட்கிற மோட்டுக் கூட்டத்துக்கு தெரியேல்லை. பெரும்பாலான எல்லா தமிழ் வீடுகளிலையும் அண்டைக்கு மாவீரர்களுக்கான தீபம் ஒளிர்ந்திருக்கும். மண்ணோடை மண்ணாய் துயிலுமில்லங்களை உழுதவையள் கண்முன்னாலை அழியத்தான் போகினம்.

விடுதலை அறம் எண்ட ஒண்டு இருக்கிறது உண்மையெண்டா, அந்த மாவீரற்றை கனவுகள் நனவாகியே தீரும். இன்னரும் உலகின் மூலைகளில் மாவீரத்தை எதிரிக்கு புகட்ட காத்திருக்கிறவை நிறைவேற்றியே தீருவினம். தமிழீழத்தை ஒருநாள் எங்கடை கையுக்குள்ளை கொண்டுவருவினம். அதை நினைச்சாலே இன்னும் கொஞ்சக் காலத்துக்கு உயிரோடை இருக்கோணும் எண்டு ஆசை வருது.

# மாயாவின் டயரி



வண்மங்களின் வழியாக, உலகம் தன்னைத்தானே பழி தீர்த்துக் கொண்டிருக்கின்றது. பலவீனங்கள், ஒரு நோயெனப் படர்கின்றன. இரவின் நிசப்தத்திலே என் தலையணை மேல் சுழன்றாடும் அச்சங்கள் யாருடையது? அவை என்னை விழித்திருக்கச் செய்வதேன்? கேள்விகளினூடாகவே நகர்கின்றது காலம். விடையறியாப் பெரும் கேள்வியாய் வாழ்க்கை சற்றும் சுவாரஷ்ஸ்யம் குன்றாமல் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

நவம்பர் 25 அன்று, பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம் (International Day of Violence against Women) கொண்டாடித்தீர்த்து விட்டு அல்லது அனுஷ்டித்து முடித்துவிட்டு, மீண்டும் இந்த உலகம் தன்னுடைய கூரிய கரங்களை பெண்களுக்கெதிராகவே நீட்டத் தயார் நிலையில் உள்ளது.பெண்களுக்கு எதிரான வன்முறை என்றதும், எனக்கு உடனே நினைவிற்கு வருவது பேருந்துக்களில் நடக்கின்ற பாலியல் சேட்டைகள்தான்.

அப்போது, நாங்கள் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தோம். காலையிலிருந்து, மாலைவரை விரிவுரைகள் நடக்கும். எங்கள் ஊரிலிருந்து நாங்கள் ஐந்தாறு பேர் ஒன்றாகவே பேருந்தில் பயணமாவோம். காலையில் மிகவும் நெருக்கியடித்துக் கொண்டு கசங்கிய நிலையில் புத்தகங்கள், குடை, சாப்பாடு ஒரு கையிலும், மறு கையால் எப்படியோ மேலுள்ள பேருந்துக் கம்பியை எட்டிப் பிடித்தபடியும், ஊசலாடிக்கொண்டேதான் செல்வோம். கற்பு, புனிதம் என்ற வார்த்தையெல்லாம் அங்கு நம் சட்டையோடு கசங்கிக் கொண்டு தான் இருக்கும்.

இப்படியாகச் செல்கின்ற நிலையிலும். காலையில், இளம் வாலிபர்களின் உரசல்களையும், தெரிந்தே படும் தொடுகைகளையும், சகித்துக் கொண்டே பல்கலையைச் சென்றடைவோம். மாலை வேளைகளில், வயதான வாலிபர்களின் அங்க சேட்டைகளை கண்டும் காணாமல்தான் நகர வேண்டி இருந்தது. என் தோழியொருத்தி அடிக்கடி புலம்பிக் கொள்வாள் "என் அப்பாவின் வயதொத்த ஆம்பிளையள் தான் சொறிச் சேட்டை விடுகினம்". இதைப்பற்றி நடத்துநரிடமோ வேறு எந்த ஆணிடமோ கூறினால் அவர்கள் கூறும் பதில் "பஸ்ஸில போனா, அங்க, இங்க இடிக்கத்தான் செய்வினம். நீங்கதான் உங்களை பாதுகாக்கோணும்" என்பதாகவே இருக்கும்.

நிற்க. எனக்கு ஆரம்பத்திலிருந்தே இது சந்தேகமாகவே இருக்கின்றது. பேருந்துக்களிலும், அடர்ந்த ஜன நெரிசல்களிலும், பெண்களின் பின்புறத்தையோ, மார்பையோ, தோளையோ, இடையையோ உரசுவதன் மூலம் இந்த ஆண்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய சுகம்தான் என்ன? ஒரு காலத்தில், வெளியில் வர மறுத்த பெண்கள் இப்பொழுது தான் தைரியமாய் தலைநிமிர்ந்து தாராளமாய் தனியாக உலாவத் தொடங்கியுள்ளனர். அந்தத் தனிமையின் பயணங்கள், இப்படியான பாலியல் சேட்டைகள் மூலம் அவஸ்தைக்கு உள்ளாவதென்பது எத்தனை துன்பமானது.

எவ்வளவுதான் கொந்தளித்தாலும், இப்படியான பெண் உடல் மீதான வெளிப்படையான துஷ்பிரயோகங்களை தடுக்க வக்கற்ற உலகம். இது மீண்டும், பெண்ணை வீட்டுக்குள்ளேயே பூட்டி வைக்கும் பின்னோக்கிய சிந்தனைக்கான அடிப்படை அணுகுமுறையாகவும் தோன்றுகின்றது. தற்காப்புக்குக் கலை ஒன்றுதான் தீர்வு. எங்களை நாங்களே காத்துக் கொள்ள வேண்டியதுதான். "அந்த இடத்தில் வேறு ஒருவர் கிருஷ்ண அவதாரம் எடுத்துக் காத்தருள்வார்" என்று மௌனித்திருப்பதெல்லாம் வீண். அந்த இடத்திலேயே நாங்களே தண்டனையைக் கொடுக்க வேண்டும்.

இப்படியான வன்முறைகள் முதலில் பெண்களால் பேசப்பட வேண்டும். "தனக்கு நிகழும் துன்பம், இன்னொரு பெண்ணுக்கு நிகழக் கூடாது" என்று நினைக்கின்ற ஒவ்வொரு பெண்ணும், பிரச்சினைகளைக் கதைப்பதற்குத் தயங்குவதை முதலில் நிறுத்த வேண்டும். வன்முறைகளைப் பற்றியும் பிரச்சினைகள் பற்றியும் பேசுவதற்கு வாயைத் திறந்தால், நம்மைத் தவறாக எண்ணிவிடுவார்களோ! நம்மை ஒதுக்கிவிடுவார்களோ! என்ற மனோ நிலையிலிருந்து நாம்தான் முதலில் வெளிவர வேண்டும்.

*சர்க்கரைப் பெரும் வெளியில்*
*நீயும் நானும்*
*பெண்ணாயிருத்தல் செய்தியல்ல*
*அடக்கமாயிருத்தல்*
*அடக்கமாக்கப்படல்*
*இரண்டிற்கும் இடையில்*
*நாம் செய்தியாக்கப்படுகின்றோம்.*

# வாரப்பலன்

**மேடம்**
மனைச் சிறப்பு. கவலையீனம். காரிய மேன்மை. தெய்வ சிந்தனை.

**ரிஷபம்**
பணமுடை. காரியத் தடை. எண்ணம் ஈடேறல். ஆலய தரிசனம். பலம்.

**மிதுனம்**
தைரிய மேன்மை. இல்லச் சிறப்பு. ஈகையில் நாட்டம். பயிர் பலிதம்.

**கடகம்**
கலகம். விடிவு. பொருள் சேர்க்கை. உறவு வருகை. தாய் வழி நன்மை.

**சிம்மம்**
தைரியக் குறைவு. தானிய விருத்தி. புது முயற்சி. குறை கேட்டல்.

**கன்னி**
இறை சிந்தனை. காரியச்சிறப்பு. கனவு பலிதம். கலை .விருத்தி.

**துலாம்**
புகழ். புத்திரர் மேன்மை. வாகனச் சிறப்பு. சமுதாயச் சிறப்பு. சிந்தனை.

**விருச்சிகம்**
காரிய சித்தி. கனவு பலிதம். தீய எண்ணங்கள் வசப் படல். பயம்.

**தனுசு**
தாரச் சிறப்பு. மன உளைச்சல். தொழில் விருத்தி. போசன மகிழ்ச்சி.

**மகரம்**
தூய்மை. புகழ்ச்சி. வீரிய விருத்தி. தாரச் சிறப்பு. தொழிலாளர் மேன்மை.

**கும்பம்**
கனவு பலிதம். காரிய மேன்மை. எண் .ணங்கள் கூடிவரல். பொருள் வரவு.

**மீனம்**
தரும சிந்தனை. மனைச்சிறப்பு. புத்திரரால் மேன்மை. விடிவு. பயமிகுதி.



கடந்த 03 ஆம் திகதி சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் அமைந்துள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான கருவி சமூக வள நிலையம் சேர்.பொன். இராமநாதன் வீதி, ராஜா கிறீம் கவுஸில் அமைந் துள்ள சரஸ்வதி மண்டபத்தில் சர்வதேச வலுவிழந்தோர் தினத்தையொட்டி, கலை நிகழ்வுகளோடு கூடிய ஒரு நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண அமைச்சர் ஐங்கரநேச னும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான கௌரவிப்பும், அவர்களின் கலை நிகழ்வும் நடைபெற்றது.







கடந்த, நவம்பர் மாதம் 30 ஆம் திகதி, கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில், "தகவல்கள் அறியும் உரிமையை யதார்த்தமாக்குவோம். என்ற தொனிப்பொருளில், "ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் ஒரு மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டில் ஜனாதிபதி, ஊடகத்துறை அமைச்சர், பிரதியமைச்சர், தகவல் பணிப்பாளர் நாயகம், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பிரதான நீரோட்டத்தின் தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் இலங்கையின் ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 250 தொழில்சார் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சக்தி வாய்ந்த ஊடகக் தொழிலையும் மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய ஊடகக் கலாசாரத்தையும் கட்டியெழுப்பவதற்கெனச் சமர்ப்பிக் கப்படும் விஞ்ஞாபனம் என்ற தலைப்பில் ஒரு மகஜரும் மாநாட்டுக் குழுவினரால் ஜனாதிபதியிட்ம் கையளிக்கப்பட்டது. இந்த மாநாட்டிற்கு போரையும் சமாதானத்தையும் அறிக்கையிடும் நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## நூல் அறிமுகமும் இறுவட்டின் அறிமுகமும்.

கவிஞர் வேலணை சுரேசின் "மன வானின் மழைத்துளிகள்" கவிதைத்தொகுதியின் வெளியீட்டு விழாவும், அவர் இயற்றிய பாடல் களடங்கிய "அம்மை அப்பன்" அருட்பாமாலை இறுவட்டு அறிமுகமும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, சேர். பொன். இராமநாதன் வீதி, ராஜா கிறீம் கவுஸில் அமைந்துள்ள ஹம்சியா மண்டபத்தில் நடை பெற்றது. வட மாகாண அமைச்சர் குருகுலராஜா பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட நிகழ்வில், வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி மற்றும் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

சி.செந்தூரன், ச.அஜகதீஸ்வரன், ச.சண்முகநாதன், கு. சிறீதர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமதி. சித்ரா பிரசன்னாவும் தலைமையுரையை ஜெயக் குமாரும், வாழ்த்துரையை கலாநிதி.செ.திருநாவுக்கரசு வும், சிறப்புரையை ந.விஜயசுந்தரமும், கவிதை நூலின் மதிப்பீட்டுரையை கவிஞர்.சோ.பத்மநாதனும், பாமாலையின் மதிப்பீட்டுரையை எஸ். லலீச னம், ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையை சி.நிசாகரனும் நிகழ்த்தினர்.







உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி யாழ்.மாநகர பேருந்து நிலையத்தில், இலவச இரத்தப் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள எச்.ஐ.வி. கிளினிக்கைச் சேர்ந்த வைத்திய கலாநிதி வேணுகாந்தன் தலைமையில் பல மருத்துவத் தாதிமார்கள் பரிசோதனையில் ஈடுபட்டிருப்பதையும், முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களையும் காணலாம்.



# பூதத்தீவுப் புதிர்கள் 24

செங்கை ஆழியான்



உயர்ந்து வளர்ந்திருந்த புல்வெளிப் பரப்பில், ஆங்காங்கு இடையிடையே மரங்கள் காணப்பட்டன. பாதையின் இரு மருங்கும் வளர்ந்திருந்த புற்கள், இரு பூதங்களைத் தவிர, ஏனையோரை மூடும் உயரத்திற்கு வளர்ந்திருந்தன. அவர்கள் நடந்து வரும் பாதையில் குறுக்கிட்ட ஒரு சிங்கக் குடும்பம், அவர்களை ஏறிட்டுப் பார்த்து விட்டு, புற்களுள் புகுந்து கொண்டது. ஒரு கணம் பிள்ளைகள் பயத்தால் உறைந்து போனார்கள்.

ஒட்டகச் சிவிங்கிகள் ஆங்காங்கு காணப்பட்ட மரங்களில் இருந்து முட்கள், மூக்கிலும், வாயிலும் குத்தாமல், வெகு பக்குவமாக இலைகளைத் தெரிந்து எடுத்து விழுங்கின. ஓநாய்களும், கழுதைப் புலிகளும் இரை தேடி அலைந்தன. முதலில் அவற்றினைக் கண்டு பயந்தவர்கள், பின்னர் அவற்றினை வியப்புடன் பார்க்கத் தலைப்பட்டனர். அவற்றினை அடையாளம் காணவும் முயன்றனர்.

"மாலா, நீர் எப்படி அந்த நீச்சல் தடாகத்தினை மாற்றியமைக்கச் சொன்னீர்?" என ரகு கேட்டான்.

"டைமன் வடிவத் தடாகத்தின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள பேரீந்து மரங்கள், தடாகத்தின் ஒவ்வொரு பக்கத்தின் நடு மத்தியில் வரத்தக்கதாக மாற்றினால், அத்தடாகம் இரு மடங்காகும். நீளமும் அகலமும் மாறாது. யோசித்துப் பாரும்" என்றாள் மாலா.

"ஆமாம் புரிகிறது" என்றான் ரகு.

"நீர், கோபுரந்தாங்கியிடம் கேட்ட வினாவுக்கு, அது, 10 நிமிடங்கள் என விடை தந்தது. தவறு என்றீர்? சரியான விடையென்ன?"

"புதிர்ப்பூதம் 30 கிலோ மீற்றரை ஒரு மணியில் கடக்கும். அதே தூரத்தை 20 கிலோமீற்றர் வேகத்தில் நடக்கும் கோபுரந்தாங்கி கடக்க ஒன்றரை மணி நேரம் எடுக்கும். எனவே 30 நிமிடம் புதிர்ப்பூதம் அவ்விடத்தில் இளைப்பாறி இருக்கும். கோபுரந்தாங்கி வந்ததும் இருவரும் மேலும் 10 நிமிடம் இளைப்பாறுவர். எனவே, புதிர்ப்பூதம் மொத்தமாக 40 நிமிடங்கள் இளைப்பாறியிருக்கும்" என்றான் ரகு.

அவர்கள் மதிய வேளையில் ஓர் ஆற்றங்கரையை அடைந்தனர். ஆற்றங்கரையில் ஒரு சிறிய படகு காணப்பட்டது. அப்படகின் அருகில் மூன்று ஜோடிப் பூதங்கள் அமர்ந்திருந்தன. அவர்கள் வந்ததைக் கவனியாமல், தங்கள் பாட்டில் சிந்தனை வயப்பட்டிருந்தனர்.

"இந்த ஆற்றைக் கடந்தால் தான் யுக்திப் பூதத்தின் இடத்தை அடையலாம்" என்றது புதிர்ப்பூதம்.

"இதை எப்படிக் கடப்பது?"

"இந்தப் படகின் மூலம்தான்"

"ஏன் புதிர்ப்பூதம் நீங்கள் இருவரும் எங்களைத் தூக்கி அக்கரையில் இறக்கிவிடக்கூடாது?" என சசி கேட்டாள்.

"அப்படியெல்லாம் செய்யக்கூடாது. பயணத்தின் கஷ்டங்களை நீங்கள் அறியவேண்டும். சுலபமாக உங்களைக் குறுக்கு வழியில் சேர்க்க நாங்கள் தயாராக வில்லை" என்றது கோபுரந்தாங்கி.

"சரி படகில் செல்வோம்" என்றான் வசந்தன்.

கோபுரந்தாங்கி அப்படகினை எடுக்கப்போன போது, அப்படகின் அருகில் அமர்ந்திருந்த ஒரு பூதம் எச்சரித்தது. "அதனைத் தொடாதே. முதலில் வந்தவர்கள் நாங்கள். நாங்கள் அக்கரையை அடைந்த பின்னர் தான் நீங்கள் அப்படகினைப் பயன்படுத்தலாம்"

"இவ்வளவு நேரமாக என்ன செய்தீர்கள்?" என்று கோபுரந்தாங்கி கோபத்துடன் கேட்டது.

"மூன்று நாட்களாக இவ்விடத்தில் இருக்கின்றோம். எப்படிக் கடப்பது என்று புரியவில்லை" என்றது ஆற்றங்கரைப் பூதம்.

"கொள்ளிக் கட்டையை நீரில் வைத்துப் பார்த்து விட்டு அது தூங்கவில்லை என்ற பரமார்த்த குருவின் கதையோ?" எனச் சீலன் கேட்டான்.

"அதென்ன குருவின் கதை?" என்று ஆற்றங்கரைப் பூதம் கேட்டது.

"அதெல்லாம் சொல்ல இப்பொழுது நேரமில்லை. நீ விசயத்துக்கு வா. என்ன பிரச்சினை?" என்று புதிர்ப்பூதம் அதட்டியது.

ஆற்றங்கரைப் பூதம் எழுந்து நின்றது.

"என் பெயர் இராமன். இவள் என் மனைவி. பெயர் இராமி. இவன் சுப்பன். இவன் மனைவி இது, சுப்பி. இவன் பெயர் கணேசன். அது அவன் மனைவி, கணேசி. இந்தப்படகில் ஒரே நேரத்தில் இருவர் தான் பயணம் செய்யலாம்"

"இரண்டு, இரண்டு பேராகப் பயணம் செய்யுங்களேன்.."

"அக்கரையில் இறக்கிவிட்டு, ஒருவர் படகினைத் திருப்பிக்கொண்டுவர வேண்டுமே?"

"அப்படிச் செய்தால் ஆயிற்று"

"அதுவல்ல பிரச்சினை.. ஆண்களை நம்ப முடியாது. பெண்கள் தனித்து நின்றால் அள்ளிக் கொண்டு போய் விடுவார்கள்" என்றது ஆற்றங்கரைப் பூதம்.

மாலாவும் சசியும் சுருக்கெனச் சிரித்தனர்.

"இப்பொழுது பாருங்கள்" என்றான் இராமன். "நானும், என் மனைவியும் முதலில் படகில் செல்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். என் மனைவியை அக்கரையில் இறக்கிவிட்டு நான் படகுடன் திரும்பி வருகிறேன். வந்து சுப்பியை அல்லது கணேசியைப் படகில் அழைத்துச் செல்வதாகக் கொள்வோம்"

"இவனை நம்பமுடியாது. அவன் அப்படியே படகினை அக்கரையில் விட்டுவிட்டு இருவரையும் கூட்டிச் சென்றுவிடுவான்" எனக் குறுக்கிட்டது சுப்பன்.

"உன் மனைவியை அக்கரையில் இறக்கிவிட்டு நீ திரும்பி வந்து, இங்கிருக்கும் ஒரு ஆணைப் படகில் ஏற்றிச் செல்.." என்றது கோபுரந்தாங்கி.

"என்னடா தம்பி..! தப்பாக வழி சொல்கிறாய். இராமன் ஒருவனைப் படகில் ஏற்றிச் செல்ல, இக்கரையில் நிற்கின்ற மற்றவன் தனித்து நிற்கின்ற இரு பெண்களையும் அழைத்துச் சென்று விடுவான்" என்று புதிர்ப்பூதம் குறுக்கிட்டது.

"பெரும் சிக்கல் தான்" என்றான் வேடன்.

(புதிர்கள் தொடரும்)

## உதவி உயிர் காக்கும்

ஒரு கட்டெறும்பு, ஆற்று தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா ஒன்று மரத்திலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.

எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக்கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்கக் கரையில் ஏறித் தப்பிய அந்த எறும்பு, புறாவுக்கு நன்றி கூறியது.

மற்றொரு நாள்.

ஒரு வேடன் அந்த புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு.

ஆனால், புறாவோ! இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது, தனது கடமையாக எண்ணியது எறும்பு.

விரைந்து சென்று, வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது.

கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி, தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்படவிருந்த ஆபத்தை



அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

எறும்புக்கு புறா நன்றி சொன்னது.

அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாயிருக்காமல் உதவி செய்ததால்தான் புறாவின் உயிர் தப்பியது. அந்த சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயல்பட்டது.

எவருக்கும் எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். அது போல் நமக்குச் செய்த நன்றியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது.

## குட்டீஸ் பரிசுப் போட்டி - 22

✷ தமிழகத்தின் புதிய முதலமைச்சர் யார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் -திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்போட்டி - 22

முடிவுத்திகதி : 20.12.2016

விடை: 1989 ஆம் ஆண்டிலிருந்து

1. மு.யானுஜா
மூத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய், கரவெட்டி

2. யோகராசா சுபாஷினி
சரவாலை தெற்கு,
சாவகச்சேரி.

# புதினப்பூங்கா

ராஜேஷ் மணாளன்


## கூதலும் குளிரும்



பொதுவாகவே, வட கொரியாவின் சிறைக் கைதிகள் மிருகத் தனமாக நடத்தப்படுவது, உலகறிந்த சங்கதி. இந்த அநியாயத்தை மேலும் அதிகரிப்பது போல, புதிதாக ஒரு சவ எரிப்பகத்தை கட்டி யுள்ள வடகொரியா, சிறைக் காவலாளிகளை நிறுத்திவைக்க மேலும் புதிய ஆறு நிலையங்களை தனது சிறைச்சாலைக்கு அண்மையில் எழுப்பியுள்ளது. பெரிய அளவில், கைதிகள் மீது மேற்கொள்ளும் சித்திரவதைகளை அதிகரிக்கவே இந்த ஏற்பாடு என்று சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரித்துள்ளது. மிக இரகசியமாகப் பாதுகாக்கப் பட்டு வரும் அரசின் இரண்டு முகாம்களில் அதிக நடவடிக்கைகள் இடம் பெறுவதைச் செய்மதிகள் அனுப்பிய படங்கள் மூலம் இந்த அமைப்பு உறுதிப்படுத்தி உள்ளது. வன்புணர்வு, சிசுக்கொலை, சித்திரவதை, திட்டமிட்ட பட்டினிவதை என்று உலகிலேயே மிக மோசமான வழிகளில் இங்கு சித்திரவதைகள் இடம்பெறுகின்றன என சமீபத்தில் தன் அறிக்கை ஒன்றில் ஐ.நா.சபை அறிவித்துள்ளது. மிக மோசமான இந்த முகாம்களில் 120,000 பேர் வரையில் அரசியல் கைதிகள் என்று கூறப்படுவதோடு, பலர் அரசை விமர்சித்த ஒரே குற்றத்திற்காக, இங்கே அடைக்கப்பட்டுள்ளனர், என்றும் தெரிய வந்துள்ளது.

வடகொரிய மண்ணைவிட்டுத்தப்பியோட முயல்பவர்கள் இங்குள்ள வயல்களில் சாகும் வரை கடுமையாக உழைக்க பலவந்தப்படுத்தப் படுவதோடு, சாப்பாட்டின் தேவையைக் குறைக்கப் பலரை அவர்களது சொந்தப் பிள்ளைகளைக் கொல்லும்படி அதிகாரிகள் நிர்ப்பந்திப்பது இங்கு வழமையில் உள்ளது என்கிறார்கள். அரசு, இப்படியான முகாம்கள் இருப்பதை என்றுமே ஒத்துக் கொண்டதில்லை. ஆனால் வருடாவருடம் இங்கு நடைபெறும் அட்டூழியங்களை நாம் பட மெடுத்தபடிதான் இருக்கிறோம் என்கிறார் மன்னிப்புச் சபையின் பிரித்தானிய இயக்குநர்.

அற நனைந்தவனுக்குக் கூதல் என்ன? குளிர் என்ன? என்ற நிலை தான் வடகொரிய அரசுக்கு!




## அறுபதிலும் ஆசை வரும்...

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன்... நியாயம் தான். ஒருவனுக்கு பல பெண்டாட்டி என்பதை உங்களால் ஜீரணிக்க முடிகிறதா? அரபு நாடுகளில் மதத்தை முன் வைத்து பல தாரக்காரர்களாக பலர் வாழ்கிறார்கள். இங்கே நமக்கு வாய்க்கட்டு போடப்பட்டு விடுகிறது. அது போகட்டும், பிரிட்டனில் வாழ்கின்ற 68 வயது கொள்ளுத் தாத்தாவுக்கு எதுக்கு பல பெண்டாட்டிகள்?

பிரிட்டனில், மிக அதிகம் பெண்களை மணந் தவர் என்ற சாதனையோடு, ரொன் செப்பெர்ட் என்ற பெயர் கொண்ட இந்த இளையவர் தனது ஒன்பதாவது திருமணத்திற்கு தயாராகி வருவதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு சென்று 26 வயதான கிரிஸ்டல் என்ற பெண்ணின் குடும்பத்தாருடன் நத்தார் நாட்களைக் கழித்து விட்டு வருட முடிவில் பெண்ணை மணம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார். அத்துடன் கதையை முடித்து விட்டு, இப்பொழுது தன்னுடன் ஒரு மாதம் பிரிட்டனில் தங்கியிருக்க ஏற்பாடு செய் துள்ளார். ஏழு மாத சிசுவை வயிற்றில் சுமக்கும் பெண்ணுடன் இவருக்கு திருமண வைபவம் நடக்கப்போகிறது. இந்தப் பெண் இவரது 9 வது மனைவி. தனது எட்டாவது மனைவியின் விவாகரத்து அறிவித்தல் வரும்வரை காத்து நிற்கிறார். வருடா வருடம் இதே கூத்துதான். ஒருத்தியை மணம் செய்வது, பின்பு அவளை விவாகரத்து செய்துவிட்டு, இரண்டாவது திரும ணம். இவருக்கு 19 வயதாக இருந்தபோது, அதாவது 1966 ஆம் ஆண்டு மார்க்றேட் என்ற பெண்ணை முதலில் மணந்தவர் இன்று வரை எட்டு பெண்களை திருமணம் செய்துள்ளார். இத் திருமணங்கள் மூலம் இவருக்கு எட்டுப் பிள்ளைகள் பிறந்துள்ளார்கள்.

கடைசியாக 2004 இல் திருமணம் செய்து கொண்ட வெங் என்ற பெண்ணுடன்தான் இவர் அதிக காலம் அதாவது 11 வருடங்கள் விவாகரத்து செய்யாது இருந்துள்ளார். புதுமையான உலகம் புதுமையான மனிதர்கள்!!




## பறக்கும் கோப்பி

இதுகாலம் வரையில் தரையில் இருந்தவர் பறக்க ஆரம்பித்து ரொம்பவே குஷியாக இருக்கின்றார். பறக்கும் விமானங்களிலும் மாக்டோனால்ட்ஸ் நிறுவனம் பயணிகளுக்கு கோப்பி அருந்த வழி செய்துள்ளது. கனடிய விமான நிலையமான WestJet உடன் செய் துள்ள ஒப்பந்தத்தின்படி, இந்த நிறுவனத்தின் ஸ்பெஷல் கோப்பி இதனுடைய முழு விமானங்களிலும் பரிமாறப்படும்.

ஏற்கனவே டொராண்டோ-கால்கரி பாதைப் பயணத்தின் போது, கடந்த வாரம் முதற் தடவையாக இந்தப் பானம் விமானத்தில் அறிமுகம் செய்யப்பட்டு இருந்தது. அடுத்த மாதம் தொடக்கம், இந்த விமான நிறுவனத்தின் போயிங் 737, 767 விமானங்களின் பயணிகளுக்கு McCaf இலவச பானமாக வழங்கப்படவுள்ளது.

இது ஒரு விளம்பர யுக்தி என்பது உங்களுக்கு சொல்லாமலே புரிந்திருக்கும்.

ஸ்டார்பக், டிம் ஹோர்ட்டன்ஸ் போன்ற பிரபல்ய நிறுவனங்களு டன் போட்டியிட்டு இந்த ஒப்பந் தம் மக்டொனால்ட்ஸ் நிறுவனத் தின் கைகளில் போய் சேர்ந்துள்ளது.

"வானமே எல்லை என்பதை நாம் நம்பினோம். இன்று அது சாத்தியமாகி இருக்கின்றது" என்று பூரிப்போடு சொல்கிறார் மக்டொனால்ட்ஸ், கனடாவின் தலைவர் ஜான் பெட்ஸ். "ஏனைய சிற்றுணவுகளும் தொடருமா?" என்று கேட்டபோது "முதலில் கோப்பி பறக்கட்டும். பின்பு பார்ப்போமே" என்கிறார் தலைவர். வியாபாரிகளுக்கு பிழைக்க ஆயிரம் வழிகள் இருக்கின்றன.



## உயிர் காப்பான் தோழன்

தினமும் பலருக்கு பல வேலைகள் இருக்க, இந்தக் குறிப்பிட்ட நபர் கடந்த 13 வருடங்களாக வார முடிவில் செய்யும் வேலை நம்மை பெருமளவில் ஆச்சரியப்படுத்தும் என்பது நிச்சயம். தனது வீட்டிலி ருந்து தன் எலேக்ட் ரோனிக் ஸ்கூட்டர் மூலம் 20கி.மீ. தூரம் பயணம் செய்து, சீனர்கள் அதிகமாகத் தற்கொலை செய்யும் இடத்திற்கு வாரமுடிவில் போய் வருவதை இவர் வழமையில் வைத்துள்ளார். 48 வயதான இவர் சீனாவின் மிக நீண்ட நதிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள Nanjing Yangtze பாலத்திற்குதான் வந்து போகிறார். இங்கு தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களை தடுத்து நிறுத்தவே இவர் இங்கு வந்து போகிறார். தன் சொந்தச் செல விலேயே இந்தச் சமூகப்பணியை மேற் கொண்டு வருகின்றார் இந்த அபூர்வ மனிதர்.

2003 இலிருந்து இந்தப் பணியை ஆரம்பித்த சென், இதுவரையில் 321பேரை தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றி உள்ளாராம்.

இவரே ஒரு தடவை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும், ஒரு நண்பர் இவரைக் காப்பாற்றியதாகவும் அதன் பின்னர் இவர் மற்றவர்களை காப்பாற்றும் முயற்சியில் இறங்கியதாகக் கூறப்படும் செய்தியை இவர் அடியோடு மறுக்கின்றார்

1968 இல் கட்டப்பட்ட் இப் பாலம் சீன தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தும் பிரபல்யமான பாலமாக இருப்பினும் 67மீ. உயரத்தில் உள்ள இப் பாலத்திலிருந்து ஆற்றுக்குள் குதித்து தற்கொலை செய்பவர் கள் அதிகரித்து வருவது இதற்கு அபகீர்த் தியை ஏற்படுத்தி வருகின்றது. 1968-2006 காலகட்டத்தில் 2000 பேர் வரையில் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.





'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தைத் தொடர்ந்து சந்தானம் நடிப்பில் உருவாகும் படத்தில் கவனம் செலுத்தி வருகிறார் செல்வராகவன். இதன் படப் பிடிப்பு டிசம்பர் 2-ஆம் திகதி தொடங்கியுள்ளது. இதில் நாயகியாக சாய்பல்லவி, ரெஜினா என பல்வேறு பெயர்கள் அடிபட்டு வருகிறது. ஆனால், படக்குழு நாயகியாக புதுமுகம் ஒருவரை தேர்வு செய்துள்ளது. யுவன் இசையமைக்க இருக்கிறார். சுமார் 8 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் காதல் சார்ந்த கதை களம் கொண்ட படத்தை செல்வராகவன் இயக்கவிருப்பதால், இப்படத்துக்கு எதிர்பார்ப்பு கூடியுள்ளது.



'வேட்டைக்கா
திரையில் தன்னே
அதிர்ச்சி கொடுத்
ஒரு முயற்சியில்
'டிக் டிக் டிக்' என்
மகன் ஆரவ்வை
இருக்கிறாராம். இ
நடிப்பார் என்கிறா



பெரும் வரவேற்பைப் பெற்ற 'குயின்' படத்தின் கதையை எந்த மொழியில் வேண்டுமானாலும் எடுக்கலாம் என்பதால் இப் படத்தின் ரீமேக் உரிமைக்கு பலரும் போட்டியிட்டார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென் னிந்திய மொழிகளில் ரீமேக் செய்யும் உரிமையை நடிகர் தியாகராஜன் கைப்பற் றினார். 'குயின்' தமிழ் ரீமேக் படத்துக்கு சுஹாசினி மணிரத்னம் வசனம் எழுத, ரேவதி இயக்குகிறார். இதில் கங்கனா ரனா வத் கதாபாத்திரத்தில் நடிக்க பல்வேறு முன்னணி நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இறுதியாக தமன்னா நடிக்கவிருப்பது உறுதியானது. 'குயின்' ரீமேக்கில் நடிக்கவிருப்பது குறித்து தமன்னா, "குயின் படத்தைப் பார்த்தவுடன், இதன் ரீமேக்கில் நடிக்க வேண்டும் என விரும்பினேன். ஆனால், ரீமேக் செய்யப்படுமா என்ற சந்தேகம் இருந்தது. இப்படத்தின் சிறப் பம்சம் என்னவென் றால் அனைத்து தரப்பு மக்களுக்கும் பிடிக்கும் வகையில் அமைந்திருப்பது தான். அப்படத்தைப் பார்த்தவுடன் விடுதலையானது போல் உணர்ந் தேன். தற்போது இதன் ரீமேக்கில் நடிக்கவிருப்பது சந்தோஷத்தை அளிக்கிறது. ரேவதி மேடம் என்னை வைத்து இயக்குவது, எனக்கு ஏன் அவ்வளவு முக்கியமானது என்றால் 'தேவி' படத்தில் வரும் கதாபாத்திரத்துக்கு அவர்தான் எனக்கு உந்துதல். சிறப்பான அணியில் இணைந் திருக்கிறேன். இப்படம் ரீமேக் என்பதைத் தாண்டி, தமிழ் உணர்வுகளுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்திருக் கிறார் தமன்னா.

அஜித் படங்களை தேடித்தேடி ரீமேக் செய்து வருகிறார் 'பவர் ஸ்டார்' பவன் கல்யாண், ஜில்லா நேசன் இயக்கத்தில் 'வேதாளம்' ரீமேக்கில் நடிக்கும் அவருக்கு தங்கையாக நடிக்க ஒரு நடிகையை தேடி வந்திருக்கிறார்கள். அந்த அதிர்ஷ்டம் அடித்தது கயல் ஆனந்திக்கு. கும்கி லட்சுமி மேனன் நடித்த அதே பாத்திரத்தில் கயல் ஆனந்தி.







'ஓ காதல் கண்மணி' படத்துக்காக உருவாக் கப்பட்ட மெட்டை அப்படியே 'அச்சம் என்பது மடமையடா' படத்தில் பயன்படுத்தியிருக்கிறார் இயக்குநர் கௌதம் மேனன்.

'அச்சம் என்பது மடமையடா' படத்தில் சிம்பு மற்றும் மஞ்சிமா மோகன் இருவரும் கன்னியாகுமரி கடற்கரை பின்னணியில் வரும் 'அவளும் நானும்' பாடல் அப்படத்துக்காக உருவாக்கப்பட்டது அல்ல. கௌதம் மேனன் அப்பாடல் இடம்பெறும் காட்சியை விளக்கிய வுடன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் "பாரதிதாசன் வரிகளை வைத்து நானே ஒரு மெட்டை உருவாக்கியிருக்கிறேன். கேட்டுப் பாருங்கள்" என்று கூறியிருக்கிறார். இறுதி செய்யப்படாத பாடல் என்றாலும், அருமையாக இருக்கிறது இதனை அப்படியே உபயோகப்படுத்திக் கொள்கிறேன் என்று தெரிவித் திருக்கிறார் கௌதம் மேனன். அப்பாடல் 'ஓ காதல் கண்மணி' படத்தில் 'ஏ சினாமிகா' பாடலுக்கு முன்பு இப்பாடலைத் தான் கொடுத்திருக்கிறார் ஏ.ஆர். ரஹ்மான். அதனை வைத்து காட்சிப்படுத்தியும் இருக்கிறார் மணிரத்னம். ஆனால், படமாக பார்க்கும் போது அந்த இடத்தில் அப்பாடல் பொருந்தவில்லை என்று 'ஏ சினாமிகா' பாடலை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்.

இந்நிலையில், கௌதம் மேனன் மெட்டில் சிறுசிறு மாற்றங்கள் செய்து 'அவளும் நானும்' பாடலை இறுதி செய்திருக்கிறார்.


...டக்காரன்' படத்தில் தன் மகன் சஞ்சயை தன்னோடு ஆட வைத்து ரசிகர்களுக்கு இன்ப ...கொடுத்தார் விஜய். ஜெயம் ரவியும் அதேபோல ...யில் இறங்கியிருக்கிறார். தான் நடிக்கும் ... என்ற விண்வெளி அறிவியல் படத்தில், தன் ...வை குழந்தை நட்சத்திரமாக அறிமுகப்படுத்த ...ம். இளம் வயது ஜெயம் ரவியாக அவரது மகன் ...கிறார்கள்.




நவரச நாயகன் கார்த்திக் 'அனேகன்' படத்தில் வில்லனாகி கோலிவுட்டை மிரட்டலாம், 'அமரன் 2' எடுத்து தலைகீழாக திருப்பலாம் என போட்ட திட்டங்கள் எதுவுமே கை கொடுக்கவில்லை. இந் நிலையில் தானே ஒரு படத்தை இயக்கி நடிக்க முடிவெடுத்து, அதற்கான பணிகளில் இறங்கி விட்டாராம். துப்பறியும் கதையான அதில் 3 நாயகிகள் இருக்கிறார்களாம். அதற்காக நாயகி வேட்டையில் முதற்கட்டமாக இறங்கியுள்ளாராம் கார்த்திக்.



ரஞ்சித்தின் முதல் இரண்டு படங்களில் அரசியல் பேசி இருந்தாலும் ரஜினி நடித்ததால் 'கபாலி' யில் இருந்த அரசியல் பெரும்சலசலப்பை ஏற்படுத்தியது. தற்போது அவரின் உதவியாளர் இயக்கத்தில் நடிக்க அதர்வா ஒத்துக்கொண்டு விட்டாராம். அதற்கு கதை, வசனம் எழுதியிருப்பது ரஞ்சித்தானாம். அதிலும் சாதி அரசியல் நிரம்பியே இருக்கிறதாம். அதர்வா அதைப்பற்றி கவலையேபடவிலையாம்.



திருச்சி மற்றும் தஞ்சாவூரில் உள்ள திரையரங்க உரிமையாளர்கள் கபாலி திரைப்படத்தால் தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு இருப்பதாக கூறி தாணுவை சந்தித்து பேச்சு நடத்தி வந்தார்கள். அப்பேச்சு தோல்வியில் முடிந்தது. இதனைத் தொடர்ந்து ரஜினியை சந்திக்க முயற்சித்து வந்தார்கள். இந்த சர்ச்சை தொடர்பாக தாணு, "அந்த ஏரியா விநியோக உரிமையை விநியோகஸ்தர் பிரான்சிஸிடம் கொடுத்தேன். தற்போது வந்திருப்பவர்கள் என்னிடம் படம் வாங்கவில்லை. நானும் அவர்களிடமிருந்து பணம் வாங்கவில்லை. 125 நாள் கழித்து வந்து நஷ்டம் என்கிறார்கள். அவர்கள் யார் என்றே தெரியாது" என்று தெரிவித்தார். இந் நிலையில் எம்.ஜி.ஆர் திரைப்பட கல்லூரியில் '2.0' படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. அங்கு திருச்சி - தஞ்சாவூர் திரையரங்க உரிமையாளர்கள் சென்றிருக்கிறார்கள். அப்படப்பிடிப்பிலிருந்து ரஜினி கிளம்பிய போது, இவர்கள் அளித்த மனுவை மட்டும் வாங்கியிருக்கிறார். அந்த மனுவில் தாங்கள் என்ன விலை கொடுத்தோம், எவ்வளவு வசூல் ஆகியிருக்கிறது, எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்ற மொத்த தகவலும் அடங்கியிருப்பதாக கூறுகிறார்கள்.



பரதன் இயக்கத்தில் விஜய், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'பைரவா'. இப்படத்துக்கு ஆடை வடிவமைப்பாளராக பணியாற்றி இருக்கிறார் சத்யா. 'பைரவா' படப்பிடிப்பு முடிவடைந்ததைத் தொடர்ந்து படத்தை விளம்பரப்படுத்த அவ்வப்போது புகைப் படங்களை வெளியிட்டு வருகிறது படக்குழு.

சமீபத்தில் வெளியிடப்பட்ட புகைப்படங்களில், விஜயின் ஆடை வடிவமைப்பை சிலர் கேலி செய்து வருகிறார்கள். இதற்கு ஆடை வடிவமைப்பாளர் சத்யா தனது ட்விட்டர் தளத்தில் பதிலளித்திருக்கிறார். "சாம்பல் கலந்த சிவப்பு சட்டை ஆயத்த அடையை வாங்கி, அதன் முன் பகுதியை வெட்டி சாம்பல் நிறத் துணியைத் தைத்தோம். அந்த சட்டையில் பொக்கெட்டின் கீழ் நிறைய பொத்தான்கள் இருக்கும். அது ஒரு புதிய முயற்சி. சாம்பல் கலந்த சிவப்பு நிறப் நீளக்காறட்டையை தனியாக செய்தோம். சுருக்கமாக சொல்வதென்றால் மடங்கும் போது நீல நிறம் தெரியும் வகையில் உருவாக்கினோம். 'பைரவா' வுக்காக இந்த கடின உழைப்பை மேற்கொண்டோம். நேர்மறையோ, எதிர்மறையோ உங்கள் கருத்துகளை வெளியிடலாம். ஆனால், மொத்த காட்சிகளோடு உடையைப் பார்த்துவிட்டு உங்களுடைய கருத்துகளைத் தெரிவித்தால் மகிழ்வேன்" என்று தெரிவித்திருக்கிறார் ஆடை வடிவமைப்பாளர் சத்யா. ஜனவரி 12-ஆம் திகதி வெளியீட்டுக்கு இப்படம் தயாராகி வருகிறது. விரைவில் இசை மற்றும் ட்ரெய்லரை வெளியிடுவதில் படக்குழு தீவிரம் காட்டி வருகிறது.



ஹ்ரித்திக் ரோஷன், மனைவி சுசான்னேவை பிரிந்த நாளில் இருந்து பஞ்சாயத்து தான். கங்கணா ரணாவத் காதல், பின் சண்டை என நாளுக்கு நாள் அவர் நடு ரோட்டுக்கு இழுக்கப்பட்டார். தற்போது எல்லாம் ஓய்ந்த நிலையில், இந்தி நடிகை நேகா தூபியாவை ஹ்ரித்திக் காதலிக்கிறார் என வட இந்திய உளவுத் துறை தகவல்களை வெயிட்டுள்ளது. அவர்கள் இருவரும் இணைந்து சுற்றும் புகைப்படங்களும் லீக் ஆகிவருகின்றன.

புதுமித்

சிறுகதை



ஓவியம் : ஏகலைவன்

# காலக்கொடுமை!

துரைச்சாமி, இவர் யார்? என்று உங்களுக்கு தெரியாமல் இருக்கும். அதனால், இவரைப் பற்றி நானே கொஞ்சம் அறிமுகம் தந்து விடுகின்றேன். துரையர் எனப்படுகின்ற துரைச்சாமி, ஓய்வு பெற்ற அரச திணைக்களத் தலைவரொருவர். துரையர் ஒன்றும் பெரிதாகக் கடமையே கண்ணாகத் திரியவில்லை. ஆனால், அவர் அலுவலகத்தில் எல்லோரையும் அடக்கியாண்டு பழக்கப்பட்டவர். அவர் வீட்டில், வேண்டாமே. இடமாற்றம் பெற்றுப்போகும் அலுவலகங்களில், இவர் தனக்கென்று ஒரு சில அல்லக்கைகளைக் கைக்குள் போட்டுக்கொள்வார். அவர்கள் மூலம் கொஞ்சம் பொக்கற்றுக்குள்ளும் போட்டுக்கொள்வார்.

இதனால், இவர் பிரதித்திணைக்களத் தலைவராகப் போகும் திணைக்களங்கள் எல்லாம், அதோகதி. சில திணைக்களங்களில் ஒட்டிக் கொண்டார் என்றால், யாருடைய காலில் விழுந்தாவது ஐந்து வருடத்தையும் தாண்டி, பல வருடங்கள் காலத்தை ஓட்டிவிடுவார். இப்படித்தான் வட கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணமாகவும், கிழக்கு மாகாணமாகவும் பிரியும் போது, அதிர்ஷ்டவசமாக திணைக்கள தலைவரானவர், 2016 இன் முற்பகுதியில் பென்சன் எடுத்துக் கொண்டவர். இவர் 2017 வரை இருந்திருந்தால், திணைக்கள தலைவரானதுக்கும், வடக்கு - கிழக்கு பிரிந்ததுக்கும் சேர்த்து தகர விழாவையும் விமரிசையாக கொண்டாடக் கூடியவர். நல்லகாலம் 2016 இல் அவருக்கு அறுபது வயதாகிவிட்டது.

மற்றவர்களிடம் வேலை வாங்கிப் பழக்கப்பட்ட துரையருக்கு, வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. அலுவலகத்தில் தனது மேசையில் இருந்து சாப்பிட்டு, கையையும் மேசையில் இருந்தே கழுவிவிட்டு, பேஸ்புக் பார்த்து கொண்டவருக்கு, வீட்டில் மனைவி காட்டும் அதிகாரத்தை தாங்கவும் முடியவில்லை, திருப்பிப் பேசவும் முடியவில்லை.

இன்று, கோயில் கும்பிடப்போன துரையருக்குக் கிடைத்தது ஒரு சந்தர்ப்பம். கோயில் திருவிழா தொடர்பாக ஊர் இரண்டுபட்டு கிடந்தது. "நல்ல சந்தர்ப்பம் விடப்படாது" என மனதில் யோசித்த துரையர், எந்தப் பக்கம் பலம் அதிகம் என்று பார்த்தார். பலமான பக்கம் இணைந்து கொண்டார். ஓய்வு பெற்ற அரச அதிகாரி என்றளவில், அந்தக் கூட்டத்துக்கும் சந்தோசம். துரையர் வேலையைத் தொடங்கினார். பல கடிதங்கள் பறந்தன. பிரதிகள் பலருக்கு இடப்பட்டன. முடிவில் கோயிலை ஒருவாறாக நீதிமன்றத்துக்கு கொண்டு வந்திருந்தார்கள். இப்படியாக, ஊரில் பலர் பகையைத்தேடிக் கொள்ளத் தொடங்கியிருந்தார். இதனால் மனைவி பிள்ளைகள் சீறத் தொடங்க, மெல்ல மெல்லக் கோயில் விவகாரத்தில் இருந்து விலகிக் கொண்டார்.

ஆனாலும், துரையரை அண்டிப் பிழைத்தவர்கள், துரையரை உசுப்பேத்தத் தொடங்கினர். "ஐயா, நீங்கள் நல்லதுதான் செய்தனீங்கள். அது எங்கட சனத்துக்கு விளங்கவில்லை. அதோட உங்கட திறமைக்குச் சின்ன சின்ன கோயில் பிரச்சினைகளில் தலையிடுகிறதெல்லாம் நல்லதில்லை. நாட்டுப் பிரச்சினையை தீர்க்கக்கூடிய திறமை உங்களிடம் இருக்கு. அரசியலில் இறங்கிறதுதான் சரி. இப்ப சரியான தலைவர் இல்லாத நிலையில் எங்கட மக்கள் அல்லாடுகினம்"

"சரியான தலைவர் இல்லாத நிலை" துரையரை உசுப்பேத்தியது. அவரை அறியாமலேயே முதுகுத்தண்டு நிமிர்ந்து கொண்டது. கால்கள் ஒன்றன் மேல் ஒன்று உரசிக்கொண்டன. துரையர் கற்பனையில் மூழ்க, மூட்டிய நெருப்பு புகையத் தொடங்கியதை உணர்ந்த அல்லக்கைகள் திருப்தியுடன் சத்தமில்லாமல் கிளம்பினர்.

"நான் நல்லதொரு தலைவனா?" என்ற கேள்வி எழுந்தவுடனேயே துரையரின் மனச்சாட்சி அந்தக் கேள்வியினை உடனேயே சுட்டுப் பொசுக்கியது. இருந்தும், துரையரின் பேராசை சொல்லிக் கொண்டது. "அந்த துரைச்சாமி அரச உத்தியோகத்தன். இந்த துரைச்சாமிதான் நிஜம், நான் நல்ல தலைவன்தான்" என்றது. "புலிகள் காலத்தில் அரசாங்கத்துக்கு தலையையும் புலிகளுக்கு வாலையும் காட்டி பிழைத்தது. பிள்ளைகளை அப்போதிருந்த உயர் அதிகாரிகள் காலைப்பிடித்துக் கொழும்பில் படிக்க வைத்தது. அது நல்லதொரு அப்பாவாக நான் செய்த கடமை"

"மூத்தவன் சிங்கள இனப் பெண்ணை திருமணம் செய்தது. திருமணத்துக்கு சம்மதித்தது. அது மற்றவர்களின் தனிமனித சுதந்திரத்தில் தலையிடாமை, இரண்டாவது மகனும் நண்பர்களும் இயக்கத்துக்கு போனபோது, தன் மகனை மட்டும் களவாகப் பலரையும் ஏமாற்றி வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைத்தது, அது கட்டிய மனைவியின் பிள்ளைப் பாசத்துக்காக" இப்படி தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாலும் மனச்சாட்சி குத்தியபடியே இருந்தது.

"பொதுச் சேவை செய்தது என்றால்? எடுத்த சம்பளத்துக்கு உரிய வேலையே செய்யவில்லை" குழம்பியபடி இருந்த வரை அவருடைய அல்லக்கை ஒன்று வந்து தூபம் போடத் தொடங்கியது. "ஏன் ஐயா குழம்பிறீங்கள். எல்லாம் நீங்கள் வேணுமென்றே செய்தனீங்கள், எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான். உங்கட திறமையை அப்ப யாரும் மதிச்சவங்களோ? இல்லைத்தானே.! ஒன்றுக்கும் யோசிக்காம "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று இறங்குங்கோ"

"ஆனால், கொஞ்சம் உங்களை மாற்றிக் கொள்ள வேணும் ஐயா!" என்று இழுத்தது ஒரு அல்லக்கை. "என்னை மாத்தவேணுமோ?" என்று ஒன்றும் விளங்காமல் கேட்டார் துரையர்.

"ஓம் ஐயா, பெரிதாக ஒன்றும் இல்லை, இனி தலைக்கு, மீசைக்கு 'டை' அடிக்க வேண்டாம், திருநீறைக் கொஞ்சம் அழுத்திப் பூசுங்கோ, வெள்ளை சேர்ட், வேட்டி உடுத்துங்கோ, யாரைக் கண்டாலும் தெரிந்த மாதிரியே புன்சிரிப்பொன்றை வீசுங்கோ. தோராயமாக குடும்ப நலனை விசாரியுங்கோ, விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்களுக்கு அப்ப, அப்ப கொஞ்சம் விசுறுங்கோ. மற்றதுகளை நாங்க பார்த்துக் கொள்ளுறம். முக்கியமாக மனிசியை, மகள் வீட்டுக்கு அனுப்பி விடுங்கோ"

அல்லக்கைகளின் உபதேசம், கண்ணனின் கீதா உபதேசம் போன்றிருந்தது துரையருக்கு. "ஐயா கொஞ்சப் பெடியளை கைக்குள்ள வைச்சுக்க வேணும்" என்று சொல்லி, தமது கன்னிக் கறவையை கறந்தனர் துரையரிடமிருந்த அல்லக்கைகள். வீட்டில் விசயத்தைச் சொல்ல, வெடித்தது பூகம்பம். துரையர் சொல்லாமலே மனிசி மகள் வீட்டுக்கு சென்று விட்டாள். இப்போது துரையர் வீட்டிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழித்தனர் அல்லக்கைகள்.

ஊரிலும், வேறு இடங்களிலும் துரையர் செல்வாக்கான ஆள் மாதிரியான பிம்பத்தை ஏற்படுத்தியபடியே, ஒவ்வொரு அரசியல்வாதிகளின் வீட்டுக் கதவுகளைத் தட்டி காலில் விழாக்குறையாக கெஞ்சியதின் விளைவு, போன தேர்தலில் தோற்றவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டனர். துரையரின் கற்பனை அதிகரிக்க, அதிகரிக்க அவரது வங்கி கணக்கும், கசநோய் வந்த நோயாளி போல், மெலியத் தொடங்கியது.

கற்பனையில் இருந்த துரையரை, ஒரு அல்லக்கையின் குரல் உலுப்பியது. "ஐயா வலி. வடக்கில் கொஞ்ச இடத்தை விடப்போறார்களாம்" என்றது. "என்னது விடப் போறாங்களாமோ? வலி. வடக்கை விட்டால்! நாங்க பிறகு எதை வைச்சு பிழைக்கிறது?"

"பயப்படாதேயுங்கோ ஐயா, அவங்கள் கொஞ்சம் தான் விடப் போறாங்களாம். மிச்சம் இருக்குத்தானே! அதை வைச்சுப் பிழைச்சுக் கொள்ளலாம். வசாவிளானில் ஏதோ ஒரு கோயிலுக்கு விடப் போகிறாங்களாம். நாங்களும் இரண்டு மூன்று சுலோக அட்டைகளுடன் போய் இருந்து போராடிவிட்டுப் பொங்கலையும் சாப்பிட்டு விட்டு வரலாம் ஐயா. எங்கட போராட்டம் ஓயாது, ஐயா"

"என்னடா சொல்லுகிறாய், இது கொஞ்சம் ஓவராக இல்லை?"

மானிப்பாய் - சுதன்

"இல்லை ஐயா, இப்ப இதுதான் டிரென்ட், பயப்படாதேயுங்கோ!"

"அவங்கள் மறுபடி வந்திட்டாங்கள் என்றால்? சுட்டுத் தள்ளிப் போடுவாங்கள்"

"அவங்கள் எங்கட பிள்ளையள்தானே! எங்கட பிள்ளையளின்ர காலில் விழுகிறதில என்ன வெட்கம் ஐயா! விழுந்திட்டாப் போச்சு. இப்படி பயம் வரும்போதெல்லாம் "பேஸ்புக்கை" பாருங்கோ உங்களுக்கு எவ்வளவு லைக் விழுகுது என்று. அவ்வளவும் உங்கட விசுவாசிகள்"

"போடா உப்பிடித்தான் பேஸ்புக்கை நம்பி போனமுறை தோத்தவங்கள். என்கென்னவோ பயமாகக் கிடக்குது. தோற்றால்? சேர்த்து வைத்த காசுமில்லை, குடும்பமும் இல்லை"

"ஐயா வென்றாலும் கைதடிக்குத்தான் போகப்போறியள், தோத்தாலும் கைதடிக்குத்தான் போகப் போறியள், இரண்டும் பக்கத்துல பக்கத்துலதான். பயம் வேண்டாம். நாங்க இருக்கிறம்" என்ற அல்லக்கைகளின் பேச்சுக்கள் விளங்கிய மாதிரியும், விளங்காத மாதிரியும் இருந்த போதிலும் துரையர் கற்பனையில் சஞ்சரிக்கத் தொடங்கினார்.

அல்லக்கைகள் தமக்குள் பேசிக் கொண்டன.


"டேய் உந்த லூசு வெல்லுமோடா?"

"போடா லூசா, சனத்துக்கு என்ன அந்தளவுக்கு கிறுக்குப் பிடித்துப் போச்சுதே?"

"அப்ப?"

"தமிழருக்கான தலைவரின் வெற்றிடம் இருக்கும் வரை, அந்த ஆசை உப்பிடியான லூசுகளுக்கு உள்ள வரை நாம் பிழைத்துக் கொள்ளலாம். நாங்கள் யார்? சண்டைக் காலத்திலேயே எப்படியெல்லாம் உழைச்சனாங்கள்! துரையரிட்ட இப்ப ஒண்டுமில்லை, செல்லாக்காசு. வா இனி அடுத்த தலையைத் தேடுவோம்"






## சுவரில் கொய்தவை

**Sathish Palaniyappan**

உங்கள் எதிரிகளை மன்னித்துவிடுங்கள், ஆனால் ஒருபோதும் அவர்களின் பெயர்களை மறந்துவிடாதீர்கள்.
- ஜான் எஃப் கென்னடி

**Indu RaviAnantha Indusha**

குறைகளே இல்லாத மனிதன் இதுவரையில் எங்கும் பிறந்ததில்லை.! குறைகளை பேசித்திரிவதில் அர்த்தம் எதுவுமில்லை.!

**Pantojithan Ramanathan**

"பிறருடைய தாக்குதல், அவமதிப்பு இவற்றால் பாதிக்கப்படாமலிருப்பது உண்மையான பெருமைக்கு அடையாளம்."
-ஸ்ரீஅன்னை

**Ravi Shangaran**

தமிழ் பற்றி எவ்வளவு பெருமையா பதிவு போட்டாலும் அதற்கு பின்னூட்டம் நைஸ் சூப்பர்னு சொல்ற சமூகத்தில்தான் நாம் வாழ்ந்துட்டு இருக்கிறம்...!

**Mynthan Shiva**

கொள்ளைன்னா என்ன ப்ரோ?
பஸ் ஸ்ரைக் நாட்களில மீட்டர் இருந்தும், வேலை செய்யாதுனு சொல்லி டபிள் ரேட் பேசி ஆட்டோ ஓடுவது

**Chenthooran Kalirajah**

சிங்கள தோழனானாலும், இந்தி தோழனானாலும் என் தோள் மீது கை போட்டு நடக்க எனக்கு சம்மதம், ஆனால் எந்த பயலுக்கும் என் தோள் மீது ஏற அனுமதி இல்லை
கவிஞர் இன்குலாப்
via அகராதி







முதல் முத்தமிட்டவளை மறக்கவே முடியாது என்கிறார்கள்...
பிறகு ஏன், அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்க்கிறார்கள்.



நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி.
அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்
கையில் பணமில்லையே
உடலில் வலுவில்லையே
உதவி செய்ய நண்பர்கள் இல்லையே..
என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே..
எதற்கும் பயப்படாதே.. தயங்காதே..!
இலக்கை நோக்கி அடியெடுத்து வை
தொடர்ந்து முன்னேறு
சோதனைகள் விலகும் பாதை தெளிவாகும்
நோக்கம் அடைந்தே தீருவாய்;
அதை யாராலும் தடுக்க முடியாது.

## இந்தவார மீம்ஸ் (Meme)





ஐயோ நைட் புள்ளா சார்ஜ் போட்டு 1% கூட ஏறலையே..



மூதேவி சார்ஜ் போட்டியே சுவிட்ச் போட்டியா..

**இணையவாசிகளுக்கு** https://www.facebook.com/puthuviniedtorial/
உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும்.

# பிடலின் இறுதி ஊர்வலம்



கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ரோவின் இறுதி அஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.கடந்த நவம்பர் 25 ஆம் திகதி பிடல் காஸ்ரோ மரணமானார். இறந்த சில மணி நேரங்களிலேயே அவரின் உடல் தகனம் செய்யப்பட்டது. பிடலின் அஸ்தி, சிறிய மரப்பெட்டியில் இடப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பிடலின் அஸ்தியின் இறுதி ஊர்வலம் நவம்பர் 30 ஆம் திகதி தலைநகர் ஹவானாவில் இருந்து 879 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சந்தியாகோடி நகர் நோக்கி ஆரம்பமானது.

வீதியின் இரு மருங்கிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர்வலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை, சந்தியாகோ வின் இராணுவக் கல்லறை தோட்டத்தை அடைந்தது.

கியூப மரபுப்படி, பிடலின் அஸ்தி கிரனைட் பாறையில் அவரது சகோதரரும் ஜனாதிபதியுமான ரவுல் காஸ்ரோவால் வைக்கப்பட்டது. பின்னர் “பிடல்” எனப் பொன்னிற எழுத்துப் பொறிக்கப்பட்ட தகடால் மூடப்பட்டது. இதன்போது மரியாதைக்காக 21 பீரங்கி வேட்டுக்கள் முழக்கப்பட்டன.




# அடங்காத ஆட்டம்

**அரவான்**

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத வேதாளம்... மன்னிக்கவும் மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதிபதி சுமணரத்தின தேரர் மீண்டும் முருங்கை மரம் ஏறிவிட்டார். அண்மைக்காலமாக அவரது அடாவடித்தனங்கள் கிழக்கில் அதிகரித்திருந்தன. கடைசியாக அவர் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க முற்பட்ட தமிழ்க் கிராமசேவகர் ஒருவரை நடு வீதியில் வைத்து வசைபாடியிருந்தார். நல்லவேளையாகப் பொலிஸார் அவரை சமாதானப்படுத்திய தால், அந்தக் கிராம சேவகர் தப்பித்தார். இல்லாவிட்டால் பிக்குவின் கைகள் கிராமசேவகரை ஒரு வழி பார்த்திருக்கும். ஒரு அரச அதிகாரியை அவரது கடமையைச் செய்யவிடாது தடுத்த பிக்கு மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாமலே அந்த விவகாரம் அமுங்கிப்போயிற்று.


அதன் பின்னர் பிக்குவுக்கு ஆதரவாக கொழும்பில் இருந்து இன்னொரு கும்பல் புறப்பட்டது. ஏற்கனவே முஸ்லிம் மக்களின் வழிபாட்டிடங்களை தலைநகரில் அழித்த வரலாற்றைக்கொண்ட பொதுபல சேனாதான், அந்தக் கும்பல். அதன் அமைப்பாளர் ஞானசாரதேரர் தலைமையில் பிக்குகளைக்கொண்ட ஒரு அணி மட்டக்களப்பை நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தது. நரி ஊருக்குள் வருவதே ஆபத்து. அதிலும் காவியுடை நரிகள் ஊளையிட்டுக்கொண்டு வருவது இன்னும் ஆபத்தானது. சுமணரத்தின தேரர் எட்டு அடி பாயக்கூடியவர் என்றால் ஞானசார தேரரோ எண்ணூறு அடிகள் பாய்ந்துவிடுவார்.

சுமணரத்தின தேரராவது மூலம் வெளித்தள்ளும் அளவுக்கு உரத்த தொனியில் இனத்துவேசக் கூச்சல்களைப் போடுவதோடு அடங்கிவிடுவார். ஆனால் ஞானசாரதேரரோ வந்த இடத்தில் நாலைந்து பள்ளிவாசல்களுக்கோ அல்லது கோயில்களுக்கோ தீ வைக்காமல் திரும்பிப்போகமாட்டார். போனபிறப்பில் அவர் அனுமனாகப் பிறந்திருக்க வேண்டும். அதனால்தான் அனுமன் தன் வாலில் மூட்டிய தீயால் இலங்கையை எரித்தது போல ஞானசாரதேரர் தன் வாயில் மூட்டிய தீ கொண்டு பள்ளிவாசல்களையும் கோயில் களையும் எரித்துக் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே கிராம சேவகரை நடுவீதியில் வைத்துச் சுமணரத்தின தேரர் வசைபாடிய தால் ஏற்பட்ட பதற்ற நிலை தணிவதற்கிடையில், ஞானசேரர் தலைமையிலான பொதுபலசேனாவின் மட்டக்களப்பு விஜயம் இன்னும் நிலைமையை மோசமாக்கிவிடும், என்று அரசுக்குத் தெரியும். எனவே உடனடியாகவே ஞானசாரதேரர் தலைமையிலான பிக்குகள் அணியை திரும்பிச் செல்லுமாறு கடும் தொனியிலான உத்தரவுகள் பறந்தன. முதலில் ஞானசாரதேரர் முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டேன் என்று முரண்டு பிடித்தார். ஆனாலும் தொடர்ந்து பயணித்தால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று அரசுத்தலைமை திட்டவட்டமாகத் தெரிவித்தால் தமது பயணத்தை இடைநடுவிலேயே கைவிட்டு பொதுபலசேனா அணி கொழும்புக்குத் திரும்பியது.

ஞானசாரதேரரோடு கூட்டுச் சேர்ந்து மட்டக்களப்பில் ஒரு இனவாதத் தீயை மூட்டுவதற்கு தயாராக இருந்த சுமணரத்ன தேரருக்கு பாதிவழியில் முடிந்த பொது பலசேனாவின் பயணம் இடியாய் வந்திறங்கியது. என்றாலும் தன் முயற்சி தோற்றுவிட்டதை வெளிக்காட்டக்கூடாது என்பதற்காக அடுத்த கட்டத் திட்டத்தில் இறங்கினார். கிழக்குப் பல்கலையில் பயிலும் சிங்கள மாணவர்கள் மற்றும் சில அடிப்பொடிகள் சகிதம் ஊர்வலமாகக் கிளம்பினார். தமிழர்களும் முஸ்லிம்களும் செறிந்து வாழும் பகுதிகளை ஊடறுத்து இந்த ஊர்வலம் ஒரு விசப்பாம்பு போல நெளிந்து நெளிந்து செல்லத்தொடங்கியது. கூடவே தமிழர்களையும் முஸ்லிம்களையும் சீண்டும் விதத்தில் கூச்சல் போட்டும், விசிலடித்தும் நகர்ந்த கூட்டத்தாரை இந்த முறை இளைஞர்கள் சகித்துக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால் தம்மைச் சீண்டியவர்களோடு தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் முரண்படத் தொடங்கினார்கள். இதனால் விகாரை நோக்கிச் சென்ற பிக்கு தலைமையிலான கும்பலை இளைஞர்கள் பின்தொடர்ந்தார்கள். நிலமை கட்டு மீறிப் போவதை உணர்ந்த பொலிஸார் விகாரைக்கு முன்னால் போக்குவரத்துத் தடையை ஏற்படுத்தினார்கள். அப்படியிருந்தும் பிக்குவின் ஆவேசம் குறையவில்லை. ஆவேச உச்சத்தில் போக்குவரத்துத் தடைக்காகப் போடப் பட்டிருந்த கம்பிகளின் மீது ஏறி நின்று சன்னதமாடத் தொடங்கிவிட்டார்.

ஒரு முனையில் பிக்கு தலைமையிலன கும்பலும் மறுமுனையில் தமிழ் முஸ்லிம் இளைஞர்களுமாக மாறி மாறி வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்தார்கள். தமிழ் இளைஞர்களோடு இணைந்துகொண்டு பிக்குவின் கும்பலுக்கு எதிராக கோசமிட்டார்கள். ஒரு கட்டத்தில் கம்பிமீது ஏறிநின்ற பிக்குவை இறக்க தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் ஒரு உபாயம் செய்தார்கள். வீடுகளுக்குள் நுழையும் குரங்குகளை விரட்ட வெடிகொளுத்திப் போடும் வழக்கம் உண்டு. அந்த வெடி கொளுத்திப் போடும் உத்தியை பிக்கு மீது பிரயோகித்தார்கள். சடசடவென எழுந்த வெடியின் சலசலப்புக்கு மங்கள ராமயவின் பனங்காட்டுப் பிக்கு அஞ்சி இறங்கியது. முதன் முதலாக தனக்கெதிராக ஒரு மக்கள் அணி கிளர்ந் தெழுந்தமை பிக்குவுக்கு கலக்கத்தையே உண்டு பண்ணியுள்ளது. ஒரு வகையில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மட்டக்களப்பு சுமணரத்தின தேரருக்கு நன்றிசொல்லத் தான் வேண்டும். சமீப காலமாக தாமரை இலையும் தண்ணீரும் போல பட்டும் படாமல் உறவாடிய தமிழ் - முஸ்லிம் தரப்புகளை மீண்டும் ஓரணியில் திரண் டெழச் செய்யும் வேலையை பிக்கு செய்து விட்டார். இந்த இணைப்பு என்றும் உடையாமல் இருக்கும்வரை ஆயிரம் ஆயிரம் சுமணரத்தின தேரர்கள் வந்தாலும் கிழக்கின் ஒற்றுமையை ஒன்றும் செய்ய முடியாது.



# எனது சிறகில் குருதியின் கோடு

**நோக்கன்**

> ஈழத்தமிழர்கள் மீது எப்போதும் கரிசனை கொண்ட கவிஞர்களில் இன்குலாப் முக்கியமானவர். ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு தன் எழுத்தால் எழுச்சியூட்டியவர்

## கவிஞர் இன்குலாப்பின் மறைவுக்காக

*ஒவ்வொரு புல்லையும்*
*பெயர் சொல்லி அழைப்பேன்*
*பறவைகளோடு எல்லை கடப்பேன்*
*பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும்*
*எனக்குத் தெரிந்த சொல்லால் விளிப்பேன்*

*நீளும் கைகளில் தோழமை தொடரும்*
*நீளாத கையிலும் நெஞ்சம் படரும்*
*எனக்கு வேண்டும் உலகம் ஓர் கடலாய்*
*உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்*

*கூவும் குயிலும் கரையும் காகமும்*
*விரியும் எனது கிளைகளில் அடையும்*
*போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்*
*பொங்கும் சமத்துவப் புனலில் கரையும்!*

*எந்த மூலையில் விசும்பல் என்றாலும்*
*என் செவிகளிலே எதிரொலி கேட்கும்*
*கூண்டில் மோதும் சிறகுகளோடு*
*எனது சிறகிலும் குருதியின் கோடு!*

*சமயம் கடந்து மானுடம் கூடும்*
*சுவரில்லாத சமவெளி தோறும்*
*குறிகளில்லாத முகங்களில் விழிப்பேன்*
*மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்!*

சிற்பி இலக்கிய விருது, கவிஞர் வைரமுத்து விருது என்ற விருதுகளுக்குச் சொந்தக்காரரான கவிஞர் இன்குலாப், 2006ஆம் ஆண்டு, ஈழத் தமிழர்களை காக்க இந்திய அரசு தவறிவிட்டதாகத் தெரிவித்துத் தனக்கு வழங்கப்பட்ட கலை மாமணி விருதினை திருப்பி அளித்து, அரசின் பொறுப்பற்ற போக்குக்குத் தனது எதிர்ப்பு ணர்வை காட்டியவர். "இன்குலாப்" என்ற பெயருக்குரிய அர்த்தம் என்னவோ, அதுதான் அவரது வாழ்வாகவும் இருந்தது. சமூகச் சிக்கல்கள், ஒடுக்குமுறைகள், போராட்டங்கள் ஆகியவற்றை மையப் படுத்தியே இவருடைய படைப்புகள் அமைந்திருந்தன. தனது இறுதி மூச்சுவரை தமிழனாக வாழ்ந்தவர். தமிழை நேசித்தவர். தமிழர்பால் அன்பு கொண்டவர்.

ஈழத் தமிழையும், தமிழரையும் அளவு கடந்து நேசித்தவர். தேசியத் தலைவர் பிரபாகரனை நேரில் வந்து சந்தித்துச் சென்றவர். ஈழப் போராட்டங்களுக்குச் சார்பாக இவர் எழுதிய படைப்புகளை வைத்து, இவர் விடுதலைப்புலி ஆதரவானரென அடையாளப்படுத்திய தாம் இந்திய அரசு. கவிஞர் இன்குலாப், மேத்தா, கவிஞர் அப்துல் ரகுமான் போன்றோர், ஈழத்து தமிழர்களோடு மிக நெருங்கிய நட்பை பேணிக்கொண்டவர்கள். ஈழத்து விடுதலை பற்றி எண்ணற்ற ஆக் கங்களைப் படைத்தவர்கள்.

அகிலமெல்லாம் வாழுகின்ற தமிழ் சமூகத்திற்கு, இன்குலாப் தமிழ்க்கவிஞர், பேராசிரியர், சொற் பொழிவாளர், நாடக ஆசிரியர், சிறுகதை எழுத்தாளர், பத்திரிகையாளர், பத்தி எழுத்தாளர், பொதுவுடைமைச் சிந்தனையாளர் எனப் பன்முக ஆளுமையாளராக அறிமுகமா னவர். இன்குலாப்பின் இயற் பெயர் எஸ்.கே.எஸ்.சாகுல் அமீது. கீழக்கரை என்னும் ஊரில், இஸ்லாமியச் சமூகத்தில் மிகவும் ஏழ்மை குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு சித்த மருத்துவர். ஆரம்பப் படிப்பைக் கீழக் கரையில் முடித்துவிட்டு, சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில் புகுமுகக் கல்வியையும், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் இளங்கலைக் (தமிழ்) கல்வியையும் பயின்றார். படிப்பை முடித்துவிட்டுச் சென்னையில் உள்ள புதுக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தபோது, ஈரோடு தமிழன் பன், நா.பாண்டுரங்கன் போன்றோருடன் சேர்ந்து பணியாற்றக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில் மாணவனாக இருந்த சமயத்திலேயே கவிஞர் மீராவின் நட்பைப் பெற்றுக் கொண்டார்.

1965 இல் தமிழ் நாட்டில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், சக ம்ாணவர்களான கவிஞர் நா. காமராசன் கா. காளிமுத்து, பா. செயப்பிரகாசம் ஆகியோருடன் கலந்துகொண்டார். காவல் துறையினரால் கைது செய்யப் பட்டுச் சிறைக்கும் சென்றார்.

இளவேனில் என்பவர் நடத்திய "கார்க்கி" இதழில் எழுத ஆரம்பித்தவர், தொடர்ந்தும் தராசு, நக்கீரன், இனி, நாற்காலி, உண்மை, உங்கள் விசிட்டர் எனப் பல இதழ்களில் ஏராளமான கட்டுரைகளையும், கவிதைகளையும் அவ்வப்போது எழுதினார். "சூரியனைச் சுமப்பவர்கள்" என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். எஸ்.வி. ராஜதுரையும், இன்குலாப்பும் இணைந்து "மார்க்சு முதல் மாசேதுங் வரை" என்னும் மொழியாக்க நூலை எழுதினார்கள். இவர் எழுதிய "மனுசங்கடா, நாங்க மனுசங்கடா" என்ற பாட்டு இன்றும், எண்ணற்ற மேடைகளில் தலித் மக்களால் பாடப்பட்டு வருகிறது. கல்லூரிக் காலத்தில் குரல்கள், துடி, மீட்சி என்ற மூன்று நாடகங்களை எழுதினார். பிற்காலத்தில் அவ்வை, மணிமேகலை ஆகிய நாடகங்களும் இவரால் எழுதப்பட்டன. இவர் எழுதத் தொடங்கிய காலந்தொட்டு, 2007 ஆம் ஆண்டு வரை எழுதிய கவிதைகள் அனைத்தும் "ஒவ்வொரு புல்லையும்" என்னும் பெயரில் ஒரு பெரிய நூலாக வெளிவந்திருக்கிறது.

இந்திய அமைதிப்படையள் இலங் கையில் ஏற்படுத்திய கொடூரங்களை, ஒரு இந்தியனின் ஒப்புதல் வாக்கு மூலமாக இவர் எழுதிய "ஏழுகடல்க ளும் பாடட்டும்" என்ற பாடல் மெய் சிலிர்க்க வைக்கின்றதொன்று.

சமாதான காலத்தில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "மானுடத்தின் கூடல்" என்ற நிகழ்வுக்கு வந்திருந்த போது கவிஞர் இன்குலாப், ஓவியர் மருது மற்றும் ஈழத்து எழுத்தாளர்களும், கலைஞர்களும் ஒன்றிணைந்து உரையா டிய கலந்துரையாடல் ஒன்றில், "எங்க ஊரில் பனையை பயிரிடுவதற்குப் பல முயற்சி எடுத்தும் பலனில்லை, அதென்ன யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் பனைமரங்களாகக் காட்சி யளிக்கிறது" என்று இன்குலாப் கேட்டா ரம். அதற்கு மட்டக்களப்பிலிருந்து வந்த முஸ்லிம் கவிஞர் "யாழ்ப்பாணத் தில் ஒரு தும்புக்கட்டைஒன்றைக் கொண்டு வந்து நட்டாலும் அது பனையாகத்தான் முளைக்கும்" என்று யாழ்ப்பாணத்துப் பனையின் பெருமையை நகைச் சுவையாகச் சொன்ன போது "பனையின் பலம்தான் யாழ்ப்பாணத்தவர் பலம்" என்று இன்குலாப் சொன்னதாக, நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

## மரணத்தில் வியாபாரம்



கடந்த வாரம் வியாழக்கிழமை (டிசம்பர் 1) யாழ்ப்பாணத்தில் திடீரென காலநிலை மாற்றம். ஒரே குளிர். மப்பும் மந்தாரமுமான வானம். மழை பெய்வதும், விடுவதுமாக விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது, காற்றும் உரு வந்தது போல மூசியதில்; பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்தன. அப்படி வீழ்ந்த மரங்களில் ஒன்று, பணிக்குச் சென்று கொண்டிருந்த இளைஞனின் உயிரை நடுவீதியில் குடித்தது. பூநகரி கால்நடை வைத்திய அதிகாரி பணி மனையில் சாரதியாகக் கடமையாற்றிய, சங்கத்தானையில் வசித்து வந்த, கஜந்தன் என்ற இளைஞரே இப்படி நாடாப் புயலின் நர்த்தனத்தால் நடுவீதியில் உயிரைவிட்டவர்.

இந்த இளைஞனின் மரணத்தை இணைய ஊடகங்கள் அறிக்கையிட்ட விதம், பலரையும் கடுப்பேறச் செய்தது.

வழக்கம் போல பணிக்கு கஜந்தன் சென்று கொண்டு இருக்கும் போதே அந்த விபத்து நிகழ்ந்திருந்தது. ஆனால் "கஜந்தன் நீதிமன்ற வழக்கு ஒன்றுக்கு சென்று வரும் போதே இறந்தார்" எனப் பல இணைய ஊடகங்கள் சம்பவத்தை திரித்து அறிக்கையிட்டன.


இந்தச் செய்தி அறிக்கையிடலின் உச்சமாக, இணையச் செய்திகளை இன் னும் திரிவுபடுத்தி, தமது கற்பனையை யும் கலந்து, யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி ஒன்று, "நீதிமன்றில் விவாகரத்து வழக்கு ஒன்றுக் காகச் சென்றுவிட்டு திரும்பும் வழியில் கஜந்தன் இறந்தார்" எனத்தெரிவித்துத் தன் ஊடக அறத்தின் தன்மை என்ன வென்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இணைய ஊடகங்கள் பலவும் பதிவு செய்யப்படாதவை. இணைய இணைப்பும், சில ஆயிரம் ரூபாய்களும் இருந்தால் எவரும் இணைய ஊடகங் களை ஆரம்பித்து நடத்தும் நிலை இப்போது. எனவே அவற்றுக்கு ஊடக தர்மம் என்ற ஒன்று இருப்பதே பெரிதாகத் தெரியாது. சில ஊடகங்கள் இந்த ஊடக அறங்களை மீறுவதை மட்டுமே தமது பார்வையாளரைக் கூட்டுவதற்கான உத்தி யாக வைத்திருக்கின்றன.

இணையங்கள் செய்கின்ற இத்தகைய கீழ்த்தர ஊடகத்தனத்தை, இலங்கையில் பதிவு செய்து உரிமம் பெற்ற ஒரு தொலைக்காட்சி சேவை செய்ய முடியாது. எந்தச் செய்தியானாலும் அதன் மூலத்தை யும், உண்மைத் தன்மையையும் ஆராய்ந்தே வெளிப்படுத்த வேண்டும். ஒரு இளைஞனின் அகால மரணத்தில் கூட, தம்மிஷ்டப்படி கதை விட்டு, இன்புறும் கேடுகெட்ட ஊடக வியாபாரத்தனத்தை இனியாவது இத்தகைய தொலைக்காட்சி களும், இணைய ஊடகங்களும் நிறுத்த முன்வரவேண்டும்.

# இரகசியப்...

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)



இன்னொருநாள், கரையாலை நாகபடுவானில். இன்னொரு நாள், உயிலங்குளம் வழியாக அம்பலப் பெருமாளில். எல்லாமே, காடும், ஆற்றுத் தடங்களுமான வழிகள். காட்டிலும், ஆற்றுத் தடங்களிலும் நடக்க, நடக்க முன்னோர்களைப் பற்றிய மனச்சித்திரங்கள் அலாதியாக எழுந்தன. வழியில் எதிர்ப் படும் மிருகங்களை வேட்டையாடியதும் உண்டு. விரட்டி விட்டதுமுண்டு. யானைகள் எதிர்ப்பட்டபோது விலகிச் சென்றோம்.

காட்டில், அங்கங்கே பெரிய மரங்களில், கீழே சிறிய வழிபாட்டிடங்கள். கோயிலோ, கட்டடமோ கிடையாது. கல்லினால் ஒரு அமைப்பு. அல்லது மரத்தைச் சுற்றி வெளி யாக்கப்பட்டு, காட்டுக்கொடிகளால் ஒரு சித்திரிப்பு. ஊன்றிக்கவனித்தால் மட்டுமே "அது ஒரு வழிபாட்டிடம்" என்று தெரியும். மற்றும்படி பொதுப்பார்வையில் அது காடுதான். அடையாளம் காணமுடியாது.

## கெரில்லாக்களின் மறைவிடம்

இப்படி ஒரு அடர்காடாக இருந்தபடி யால்தான், புலிகளும் அங்கே தங்களுடைய களஞ்சியங்களையும், மருத்துவமனை ஒன்றையும் வைத்திருந்தனர். இந்த மருத்துவமனை ஒன்றும் பொது மக்க ளுக்கானதல்ல. போரிலே காயப்படும் போராளிகளைப் பராமரிப்பதற்கானது. யுத்தத்தின்போது, ஒரு கெரில்லா அமைப்பு மறைவிடங்களில் தன்னுடைய பாது காப்பை வைத்திருப்பது வழமையானது. எனவே, இந்தப் பகுதியில் அவர்கள் ஒரு பெரிய பயிற்சி முகாமையும் வைத்திருந் தனர். அது தென்னியன்குளத்துக்கு வட கிழக்கில் உயிலங்குளத்திலிருந்தது. புதிய போராளிகளை இந்த உயிலங்குளம் முகாமில்தான் பயிற்சிக்கு முன்பாக வைத்திருப்பார்கள். அங்கிருந்தே பயிற்சி முகாமுக்கு அனுப்பப்படுவார்கள்.

தென்னியன்குளம், துணுக்காய், உயிலங்குளம், ஒட்டறுத்தகுளம் என புலிகளின் முகாம்கள் விரியத்தொடங்க, காடுகளில் சனங்கள் நடமாடுவதும் குறையத் தொடங்கியது. வேட்டைக்குப் போகலாம் என்றாலும் காட்டுத்தடியை வெட்டமுடியாது. புலிகளின் வனவளப்பாதுகாப்புப் பிரிவு, காட்டுக்குக் கட்டாய விதிமுறைகளைக் கொண்டு வந்தது. அப்படியே அவர்கள் வரலாற்றுச் சுவடுகளைத் தேடிச் சேகரிக்கும் பணிகளையும் செய்யத்தொடங்கினார்கள். ஒரு பக்கம் சண்டை. இன்னொரு பக்கத்தில் சண்டைக்கான பயிற்சி. மறு பக்கத்தில் சண்டையில் காயப்படுவோருக்கான மருத்துவமும், பராமரிப்பும். வேறொரு பக்கத்தில், வரலாற்றைத் தேடுதல். அடுத்த பக்கத்தில் "காடுபேண்" காரியங்கள். இப்படி தென்னியன்குளம், வட்டகைக் காடு எல்லாவற்றுக்கும் ஒரு மையமாக இருந்தது. தென்னியன்குளத்துக்கும், துணுக்காய்க்குமிடையில் கைதிகளை வைத்திருந்த சிறப்பு முகாமொன்றும் இருந்தது. இப்படி புலிகளின் கோட்டையாக தென்னியன்குளம் இரகசியமாக மாறியிருந்தது.

## வரலாற்றை தேடுதலும் உருவாக்குதலும்

இதற்குள் ஒரு தடவை நாங்களும் சிக்கியிருந்தோம். வன்னியின் கறுப்புச் சிவப்பு மட்பாண்ட அடையாளங்களைத் தேடிக் கொண்டிருந்தோம். இப்படித் தேடிக்கொண்டிருந்தபோது, உயிலங்குளப் பக்கமாக இரும்பை ஒத்த தாதுப்படிமங் களைக் கண்டோம். அதைப்பின் தொடர்ந்த போது உயிலங்குளத்துக்கு மேற்கே, அடர் காட்டில் ஒரு இரகசிய முகாமைக் கண் டோம். முழுமையாகவே உருமறைப்புச் செய்யப்பட்டிருந்த முகாமில் பிரபாகரனின் படமிருந்தது. அங்கே நான்கைந்து போரா ளிகள். எங்களைக் கண்டதும் அழைத்து விசாரித்தனர். விபரத்தைச் சொன்னோம், "நாங்கள் காடுதேடும் ஆட்களல்ல. வரலாற்றைத் தேடும் மனிதர்கள்" என்று. தாங்கள் கண்டெடுத்துச் சேகரித்து வைத்தி ருந்த சில பொருட்களையும் கற்களையும் காட்டினார்கள்.

நாங்கள் தேடியெடுத்த பொருட்களைப் போலவே, அவையும் இருந்தன. சில பொருட்கள் ஆபரணங்களைப் போல மணியினால் செய்யப்பட்ட வளையல்கள். ஏதாவது ஒரு பொருள் ஈர்த்தால், அதை எடுத்துச் சேகரிப்பது மனித இயல்பு. அப்படித் தான் அவர்களும், அவற்றைச் சேகரித்துள்ளனர். அவர்களுடன் பேசி, விடைபெற்று வந்த போது, அந்தக் காட்டில் நம் முன்னோர், தங்கள் நினைவுகளை நீக்கமறக் கரைத்திருப்பதை உணர்ந்தேன். அதைப்பற்றித் தவபாலனிடம் சொன்னேன். "அந்த நினைவுகளைத் தேடித்தானே நாங்கள் இங்கே வந்திருக்கிறம்" என்றான்.

"போராட்டம் என்பது ஒருவகையில் வரலாற்றைத் தேடுவதும் வரலாற்றை உருவாக்குவதும் என்பதுதானே"

இரண்டு வாரங்களுக்கு முன்னே, தென்னியன்குளத்துக்கு மறுபடியும் போ னேன். ஏனோ இந்த நினைவுகளெல்லாம் கோர்வையாக வந்து கொண்டிருக்கின்றன.

பார்வை நயம் - 01



# நூறும் காமினியும்



கணபதிசர்வானந்தா

ஈழத்தில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம். வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருந்தன. அதன் தாக்கம், வடக்கிற்கும், கிழக்கிற்கும் வெளியிலும் கணிசமான அளவு பரவிக்கிடந்தது. அவசியமற்று யாரும் வெளிவரமாட்டார்கள். அதிலும், விடுமுறை நாட்களில் மக்கள் பூரணமாக வீட்டிற்குள் முடங்கிவிடுவார்கள். கொழும்பு நகரும் இதற்கு விதிவிலக்கல்ல. தெருவில் போக நேர்ந்த சமயங்களில் எதிரே வருபவர் எமக்கு நன்றாகத் தெரிந்தவர்கள் என்றால் மாத்திரமே சிரிப்போம். மற்றைய வேளைகளில் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொள்ளக் கற்றுக் கொண்டோம். போர் அத்துணை இயல்பைப் பாதித்திருந்தது.

நான் முதன்முதலாகக் கொழும்பு வந்தபோது அங்கு கண்ட வாழ்வியல் நிலைவேறு. அப்போது, எனது கிராமத்து புகையிரத நிலையத்திலிருந்து ஐந்து ரூபாவோடு வண்டியேறி கொழும்புக்கு வந்துவிடலாம். அந்தக் காலத்தில் கொழும்பு வருவது சதாரணமாக நடக்கக்கூடிய நிகழ்ச்சியல்ல, என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனது கிராமத்தில் எனக்கு கிடைத்ததைப்போல, நீண்டகால கொழும்பு வாழ்க்கையும் எனக்கு பலரது சிநேகிதத்தைப் பெற்றுத்தந்தது. அப்படியே காமினியும் என்னால் அறியப்பட்டவன்.

காமினி பிறவியில் கண்களை இழந்தவன். மனைவியும் பார்வையற்றவள். அவனுக்கு இரு பிள்ளைகள். தொலைதூரத்திலிருந்து மக்களின் உதவிக்காக பிள்ளையார் கோவிலுக்கு அருகே வந்து போவது அவரின் வழக்கமாயிற்று. பெரும்பாலும், காலை வந்து மதியம் திரும்பிவிடுவான். வெள்ளிக்கிழமைகளிலும், சனிக் கிழமைகளிலும் சற்றுத் தாமதமாகச் செல்வான், காமினி. மருந்தக வாச லைத் தனதாக்கிக் கொண்டவன். சுடுகின்ற வெயிலிலும், ஆடாமல், அசையாமல் சிலை போல நிற்பதைக் காணும்போது அவ்னில் ஒரு அனுதாபம் தோன்றும். கோயிலுக்கு வருவோரு, போவோரு இயன்றவரை அவனுக்குக் பணம் கொடுத்து விட்டுப்போவதைக் கண்டிருக்கிறேன். நிரந்தரமாகப் பலரைத் தனது வாடிக்கை வட்டத்திற்குள் வைத்திருந்தவன் காமினி. ஏனெனில் அவர்களோடு அவன் சு கம் விசாரிப்பான். வீட்டுப் புதினங்களையும் கேட்பான். அப்படிப்பட்ட, அவன் கொண்ட நிரந்தரமானவர்களில், நானும் ஒருவன். ஏறத்தாழ இருபது ஆண்டு களாக என்னை எனது குரலால் இனங்கண்டவன். அவனை ஒரு நண்பன் என்று கூடச்சொல்லலாம்.

நடுத்தர வர்க்கத்தின் பிரதிநிதியான என்னையும், போர் பாதித்திருந்தது. வறுமையைக் கையில் பிடித்தவாறே, வாழ்வு நகர்ந்து கொண்டிருந்த காலம். சேமிப் பென்று ஒன்றும் இல்லை. அத்தகைய சூழலிலும், வாழ்க்கையை சரிவர எப்படி நகர்த்துவதென்பதைக் கற்றுக்கொண்டேன்.

அன்று, ஞாயிறு விடுமுறையென்பதால், வேகமற்று நகர்ந்து கொண்டிருந்தது வாழ்க்கை. அன்றைய தினத்தையும் போக்கியாகவேண்டும். வீட்டிலிருந்த பழைய தினசரிகளைக் கட்டியெடுத்துக்கொண்டு, பண்டமாற்றுக்காக புறப்பட்டு நெடுஞ் சாலையைத் தொட்டபோது, வர்ணச்சாயம் விற்கின்ற கடையையொட்டி நின்றான் காமினி. அன்று அவன் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லவில்லை. நடைபாதையில் நின்று மக்கள் உதவிக்காகக் காத்துக்கிடந்த காமினியை நெருங்கியதும், அவனது பெயரைச் சொல்லி அழைத்தேன். என்னை இனங்கண்டு கொண்டவனாய், எனது பெயரைச் சொல்லி அருகில் வருமாறு அழைத்தான்.

"ஒரு உதவிவேண்டும்" தயங்காமல் கேட்டான்.

"சொல்" என்றேன்.

"குழந்தைகளுக்கு பால் மா வேண்ட, நூறு ரூபாய் பணம்வேண்டும்" என்றான்.

"பழைய தினசரியை விற்கப் போகிறேன்" என்ற எனது பற்றாக்குறையையும் சொல்லிவிட்டு அவனைக் கடந்து சென்றுவிட்டேன். திரும்பி வரும்போது, அவன் பெயரை மீண்டும் அழைத்தேன். "ஐயா" என்றான். "கடைச்சொந்தக்காரர் அங்கில்லை. சற்றுத் தாமதமாக வரும்படி சொல்லியிருக்கிறான், சிப்பந்தி" என்றேன். "பரவாயில்லை" என்று சிரித்தான், காமினி. இருவரும் ஒன்றென்று கருதியிருப்பான் போலும்.

அவனைக் கடந்து சில அடிகள் நகர்ந்திருப்பேன், எனது தெருவின் முனையில் ஒரு நூறு ரூபா அநாதரவாகக் கிடந்ததைக் கண்டேன். "தெருவில்காணும் எதனையும் எத்துணை பெறுமதியானதாக இருந்தாலும் எடுப்பதில்லை" என்ற எனது நீண்ட கால இலட்சியத்தை உடைக்கத்தீர்மானித்தேன். பணத்தை எடுத்துக்கொண்டு காமினியை நோக்கி நடந்தேன்.

"நீ கேட்ட பணம் இதோ!" என்று நீட்டினேன்.

"இப்பதானே இல்லை என்றீர்கள் எப்படிக் கிடைத்தது?" என வினவினான். நடந்ததைச் சொன்னேன். சற்று மௌனம[illegible]கக் கேட்டுக்கொண்டிருந்தவன்,

"இருந்த இடத்தில் சென்று அதைப் [illegible]போட்டுவிடுங்கள். அதை இழந்தவர்கள் தேடி வரலாம்" என நிதானமாகச் சொன்[illegible]ான்.

பார்வையற்றவன், தனது அறிவுப்ப[illegible]ர்வையினால், சமூகத்தின் பார்வைக்கு அப்பாற்பட்ட அத்தியாயங்களைத் [illegible]ரட்டுவது தெரிகிறது. காமினிகளின் எண்ணிக்கை அதிகமானால், சமூகப் புர[illegible]ரியென்பது ஒரு சிறு சம்பவம்.

பிறர் பொருளுக்கு ஆசைப்படாதது, அருள் நிறைந்த ஆன்மிகத்தின் ஒரு அங்கம் தான்.

## நான் தொலைந்து போதல்

முன் இரவுப்பொழுதொன்றில்
என் வாய்மூடி, தன் வழி செல்ல
யாரோ பணித்த நேரம்.....

நகர்ந்தன கால்கள், நம்பித்தான்
அவர்களையும்....

அடையாளப்படுத்தல்களில்
அந்தப்பலருள், நானும் அடங்கிநிற்க,
வெளியில் அம்மாவுக்கு
சொல்லப்பட்டது,
நாளை நான் வருவேன் என....

என்முகம், மூடிய அடையாளத்துள்
நான் தொலைய,
அவர்கள் நகர்த்தினார்கள் - அம்மா
எனைத் தொலைக்க...

நீர்கோர்த்த விழியின் வழி
எதிர்பார்ப்பு தொடர்ந்திருந்த - நான்
பார்த்த
என் அம்மாவின் கடைசிமுகம்

மறைக்கப்பட்ட வெளிச்சத்தின் கீழ்
மறுக்கப்பட்ட ஒரு விடியலையும்
என்னையும்
இல்லை பலரையும்
அன்றே புதைத்தனர்...


அழுந்திய மூச்சிற்குள்
அடங்காத ஒரு துயரத்துடன்
அம்மாவிற்கு தெரியாத என்
தொலைவான
புறப்படுதல்...


முடிவிலா பலிக்குள்
நான் முடிவானது தெரியாது - இன்றும்
என் முகம் ஏந்தி எனைத்தேடும் அம்மா...

தொடர்ந்திருக்கிறது காலமும்
மௌனமாக
எனைப்போல் தொலைந்தழிந்து

என் தாயின் துயரமோ
அழுதிருக்கிறது
நீர்கோர்த்த விழியின் வ(லி)ழி ஊடே
எதிர்பார்ப்பு தொடர்ந்திருக்க... !

**கோகிலா சிவா**
**வவுனியா.**





**த.அஜந்தகுமார்**

# சரிநிகர்=சதிபதி

**அ)**

**2015**

அந்தப் பிள்ளையார் கோவிலுக்கு முன் றோட்டால வரயிக்கைதான், அந்தத் தோட்டத்து வாய்க்கால்ல இருந்து திடீரென்று பறந்துவந்த கொக்கு, என்ரை மோட்டர் சைக்கிள் ஹெட்டில மோதித் துடிச்சு நடுறோட்டில விழுந்துது. "வேலைக்கு நேரம் போச்சு" எண்டு பறந்தடிச்சுக் கொண்டு வந்த எனக்கு இந்தச் சம்பவம் மனசெல்லாம் கீறிப்போட்டுது. ஆனா, அது சாகயில்லை. இன்னொரு கொக்கு (அதின்ரை துணைபோலத்தான் கிடக்கு) அதுக்கருகில் பதிய, அது ஒரு மாதிரிக் காலை இழுத்து றோட்டைத் தாண்டியது. "ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம்" என்று தான் அறிந்திருக்கிறேன். எனக்காகவே இந்தக் கொக்கு காத்திருந்து வந்து விட்டதே என்று எனக்குக் கவலையாக இருந்தது. "அது சாகக்கூடாது" என்று நினைச்சுக் கொண்டு மோட்டர் சைக்கிளை எடுத்தேன்.

அந்த றோட்டின் முடக்கைத் தாண்ட, இன்னொரு சம்பவம் எனக்காகக் காத்திருந்தது. ஒரு அம்மாவின் கையில் கொங்கிறீட் கல். மழையில நனைஞ்சு, ஒடுங்கிப்போய் நிற்கும் நாயைப் போல, பதுங்கிப்போய் நின்றார். அவவின் புருஷன் என்று நினைக்கிறன். அந்தக் கல்லைப் பிடுங்குறதுக்கு அவர் முயற்சித்தார். கண்ணகி கையில சிலம்பில இருந்ததைப் போல, அவவின் கையில் கல் இருந்தது. "அது எதற்கான நீதிப் போராட்டம்" என்று விளங்கவில்லை. இரண்டு பேரும் பஸ்ஸுக்காக வீட்டில் இருந்து வரும்போதே இருந்த கொளுவல் முத்தியிருக்கோணும் போல கிடக்கு. சனம் சுத்தி நிண்டுது. கல்லைப் பறிக்கவும் இல்லை. ஏன் என்று கேட்கவும் இல்லை. நானும் வேடிக்கை தான் பார்த்தேன். நீ யார் என்று அவர்களே கேட்டுவிட்டால்? ஆனையை அடக்கிய அரியாத்தையாக, ஆணை அடக்கியபடி நின்றார் அந்த அம்மணி. சனமும் அடக்கியபடி (சிரிப்பையும்) பார்த்துக் கொண்டிருந்தது. நான் அதில ஒருநிமிசம் தான் நிண்டிருப்பன். மோட்டர் சைக்கிள் விரைந்தது.

**ஆ)**

**1997**

எங்கன்ரை வீட்ட பங்கர் இருக்கேல்ல. முதல்ல கிண்டின பங்கருக்குள்ள மாடு விழுந்து செத்துப்போச்சு. அது கன்றுத் தாச்சி மாடு. அதைத் தூக்க முடியாமல் அப்பாவும், நானும் சேர்ந்து அதை அப்பிடியே மூடிப்போட்டம். பங்கர் கிண்டிறதுக்கு வேற இடம் இல்லாததால கனகுமாமி வீட்டு பங்கருக்குத்தான் நாங்கள் ஓடிப்போவம். அவவின்ரை வீடு, எங்கன்ரை பக்கத்துவீடு. அன்றைக்குச் செல்லடியோ, பிளேனோ இல்லை. சும்மா இருந்து நானும், தங்கச்சியளும் அவவோட தனகித் தனகிக் கதைச்சுக் கொண்டு இருந்தம். அப்பேக்கைதான் பாக்கியக்கா ஓடிவந்தா. எங்களோட கதைக்காமல், பங்கருக்குள்ள ஓடி ஒளிச்சா. கொஞ்சநேரத்தால தறுமண்ண சைக்கிள்ள அரக்கப் பரக்க வந்தார். "இவள் இங்க வந்தவளோ" என்று வீட்டை ஸ்கான் பண்ணிப் பாத்துக்கொண்டே கேட்டார். கனகுமாமி "இல்லை" எண்டதும், ஆள் சைக்கிள்ள எடுக்கேகையே பெரிசாச் சத்தம் போட்டுக்கொண்டு எடுத்தார். செல்லுக்குப் பயந்து நாங்கள் ஒளிக்கிற மாதிரி, அவற்ற சொல்லுக்கும், அடிக்கும் பயந்து ஒளிச்சுப் போட்டு பாக்கியக்கா எட்டிப் பாத்தபடி வந்தா. ஒருக்கா, உலக்கையால கூட அடிச்சவராம். "அவன் ஒரு உலக்கையன்" எண்டும் கனகுமாமி புறுபுறுப்பா. நராங்கிப் போன தோற்றம். "தேரை விழுந்தா ஆக்கள் தேயிறமாதிரி தறுமரைக் கட்டின காலத்தில இருந்து இவள் உப்பிடித்தான்" என்று கனகம்மா சொல்லிக் கவலைப்படுவா. ஆனா அவக்கு ஆறுபிள்ளையள். "சண்டை, சமாதானம் பெண்டில் பெறுமாதம்" என்று கனகுமாமி அவவுக்குச் சொல்லி நக்கலடிக்கிறதையும் அதைக்கேட்டு, அழுத மூஞ்சியில ஒரு வெட்கச் சிரிப்பு நெளியிறதையும் பாக்க, எங்களுக்கு அது ஒழுங்கா விளங்காமலே சிரிப்பு வரும். ஆனாக் குடியாலயே தறுமண்ண செத்தபிறகு, பாக்கியக்கா அழுத அழுகையைப் பாக்கோணும். அந்த அழுகைச் சத்தத்தைத் தாங்க முடியாமல், நான் கனகுமாமி வீட்டு பங்கருக்குள்ள, கனநேரம் ஒளிச்சு இருந்தன்.

**இ)**

**2006**

பாதை பூட்டின பிறகு, கம்பசும் கனமாசமா நடக்கேல்ல. அப்பயிக்கை நான் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தில வேலை செஞ்சனான். அங்க ஒருவர் அலுவலகப் பணியாளரா வேலை செஞ்சவர். காலைமை ஏழரைக்கு வந்து, முத்தம் கூட்டி, அலுவலகம் எல்லாம் கூட்டி, பாத்றூமையும் கிளீன் பண்ணி பத்துமணிக்கும், மூன்று, மணிக்கும் எல்லோருக்கும் ரீ தந்து, பாங்குக்கும் சொல்லிற வேலைக்கும், எண்டு வெளியில ஓடித் திரிஞ்சு எல்லா வேலையும் அவர்தான் செய்வார். ஒரு நாள் அவருக்கு எங்கட பொஸ் பேசிக் கொண்டு நின்றார். "ஏன் உன்ரை மனிசிக்கு உப்பிடி அடிச்சனி, அடிச்சாத்தான் ஆம்பிளையோ?" எண்டு பேசிக்கொண்டு நின்றார். எல்லாற்ற காதும் அங்கதான் இருந்தது. இங்க எல்லா வேலையையும் செய்யிறவர், வீட்டில தும்புத்தடி கூட தூக்க மாட்டாராம். அவர் ஆம்பிளையாம். வீட்டு வேலையெல்லாம் பொம்பிளை தான் செய்யோணுமாம் ஏதோ எதிர்த்துக் கதைச்சதுக்குத்தான் அடிச்சிருக்கிறார். எனக்கு அவரை நினைச்சுப் பாக்க இப்ப சிரிப்பாக் கிடக்கு. வேலைகளைப் பகிர்ந்து செய்வதில் உள்ள திருப்தி அலாதியானது. ஆர் ஆரோ சொல்லி வைத்த கருத்துகள், எங்கன்ரை மூளையுக்கை ஆணிமாதிரி அறைஞ்சுபோய்க் கிடக்கு. அந்த ஆணியில தொங்கிற ஆதிக்கத்துக்கு மாலைபோட்டு அடக்கம் செய்யாமல், கூர் பார்த்துக்கொண்டிருந்தா என்ன பிரயோசனம்? "எல்லோரும் மனிதர்" என்று நினைச்சிட்டா என்ன வில்லங்கம் வந்திடும். அந்தாளை இப்ப காணுறதில்ல. கண்டா அவரோட கனக்கக் கதைக்கோணும் போல கிடக்கு.

**ஈ)**

ஆணுக்கும், பெண்ணுக்குமான உறவு மிக அற்புதமானது. அதில் "ஊடல்" என்ற ஒன்று இடைக்கிடை நிகழத்தான் செய்யும். "ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்" என்பது வள்ளுவர் கருத்து. இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதரசம் சிறுகதை பலருக்கும் உடனே ஞாபகம் வந்து விடும். ஊடல் சாப்பாட்டில இருக்கிற உப்பு மாதிரி. அதிலும் ஒரு சுவை இருக்கவே செய்யும். அதற்காக, உப்பைக் கோப்பையிலே கொட்டிச் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியுமா? (உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது மிக்கற்றால் நீள விடல்.) புரிந்துணர்வு இல்லா உறவுகளின் சேர்க்கை, கொலையில், தற்கொலையில், விவாகரத்தில், அவமானத்தில் முடிவதை இன்று, நாளும் நாளும் அறிகிறோம். உடலில் உள்ள ஈர்ப்பும், கவர்ச்சியுமா வாழ்க்கை? ஏதோ ஒரு புள்ளியில் மனம் இணையும் சமனான முச்சையிலே தான் வாழ்க்கைப்பட்டம் ஏறமுடியும். பட்டம் ஆடலாம். விண்கூவலாம். ஆனால் அறுந்துவிடலாமா? விட்டுக்கொடுப்பில் இருக்கும் மனநிறைவு ஒரு புதையல் அல்லவா?

மட்டக்களப்பான்



# என்ன செய்யப் போகிறோம்?

"ஈழப்போரில், கிழக்கினுடைய பங்களிப்பு இன்றியமையாதது" என்று மார்தட்டிக்கொள்கின்ற அதேவேளை, இதன் பின்னணியில், கிழக்கு இழந்து நிற்கின்ற மனிதவளப் பற்றாக்குறை ஈடுசெய்து கொள்ள முடியாத ஒன்றே என்பதையும், மனதில் கொள்ளவேண்டும். 2009 இற்கு பின்னர், கிழக்கில் ஏற்பட்டுள்ள அத்துமீறிய குடியேற்றங்கள், அதிகரிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையின அரச ஊழியர்களின் நியமனம் என்பன, கருத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கிய விடயங்கள். அதிலும், மட்டக்களப்பு மாவட்டம் வறுமைநிலையில் இரண்டாமிடத்தில் இருக்கின்ற நிலையில், "அடுத்த நகர்வை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றோம்" என்பது இன்று கிழக்கு மக்களுள் உள்ள மிக முக்கியமான கேள்விகளுள் ஒன்று.

இந்த வருட உயர்தரப் பெறுபேறு வெளியாக உள்ள நிலையில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய மூன்று தொகுதிகளை சேர்ந்த தமிழ்கல்விச் சமூகம் யோசிக்க வேண்டிய தருணம் இது.

மட்டக்களப்பு நகரம், பட்டிப்பளை, பங்குடாவெளி போன்ற இடங்களில், தமிழருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவதற்கும், அதற்கு எந்த நேரத்திலும் கலந்து கொள்ளக்கூடிய தயார் நிலையிலும், கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம், விஞ்ஞானபீடம், விவசாயபீடம் ஆகியவற்றில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களையே சுமணதேரர் பகடைக்காயாகப் பயன்படுத்துகிறார். இத்தகைய களம் இறக்குதலும், இளைய சிங்களச் சமூகத்தை தவறாக வழிநடத்தலும் தொடர் கதையாக நீள்வதையே காணக்கூடியதாக உள்ளது. மட்டுநகரில் நடைபெற்ற கடந்த வார போராட்டத்தில் வெளிமாவட்டத்திலிருந்து கொண்டு வந்த சிங்களவர்கள் புனானையுடன் நிறுத்தப்பட்டனர். ஆனால் மட்டக்களப்பினுள் இருந்த மட்டு. போதனா வைத்தியசாலையில் புதிதாக நியமனம் பெற்ற சிங்கள சிற்றூழியர்களும், கிழக்கு பல்கலைக்கழக சிங்கள மாணவர்களுமே சுமண தேரருடன் கலந்துகொண்டு உற்சாகப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

உயர்தரப் பெறுபேறு வந்தவுடன், மட்டக்களப்பு மாவட்ட பெற்றோர், ஆசிரியர்கள் பல்கலைக்கழக விண்ணப்படிவத்தில் முதல் தெரிவாக கலை,கலாசார கற்கை நெறியை தவிரப் பௌதிக விஞ்ஞான, முகாமைத்துவ போன்ற கற்கை நெறிகளை தேர்வு செய்ய கிழக்கு பல்கலைக்கழகத்தை விரும்புவதில்லை.

இதனால் விஞ்ஞானபீடம், முகாமைத்துவபீடம் என்பவற்றில் 100 பேருக்கு உள்வாங்கப்பட வேண்டிய மாணவர் தொகையில், 7 அல்லது 8 பேரே தமிழ் மாணவர்களாக இருக்கிறார்கள். இதனால் மாணவர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறுபகுதி மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மாணவர்களை உள்வாங்கும் சூழல் நிலை விரும்பியோ விரும்பாமலோ கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உருவாகியுள்ளது.

இதனால், சிங்கள மாணவர்கள் கற்றல் நேரம் தவிர்ந்த நேரங்களில் இப்படியான இனத்துவேச போராட்டங்களில் பங்குபற்றுகின்றனர். அது மட்டுமில்லை இந்தச் சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழக சூழலிலுள்ள செங்கலடி வைத்தியசாலை, தபாற்கந்தோர், வங்கி, பாசிக்குடா போன்ற இடங்களிலும் அடாவடியில் ஈடுபடுகின்றனர்.

எனவே மட்டக்களப்புத் தமிழர்கள், தங்கள் பிள்ளைகளை கிழக்குப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பாமல், வேறு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதன் மூலம் கிழக்கு பல்கலைக்கழகம் சிங்களமயமாக துணைபுரிந்துவருகின்றார்கள்.

நாம் உயர்தர சித்தியடைந்து பேரதெனியா, தென்கிழக்கு, கொழும்பு, வயம்ப என்று எந்தப் பல்கலைக் கழகத்திலும் Bsc,bsc(agro), Bcom போன்ற பட்டத்தை முடித்தாலும், அரச உத்தியோகம் பெற்றாலும் சம்பள்ம் ஒரே அளவுதான், எல்லாரும் சம பட்டதாரிகள்தான் என்பதை உணர்ந்து மெரிட் அளவு பெறுபேறு கிடைக்காத மட்டக் களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த, கணித, விஞ்ஞான, வர்த்தக பிரிவில் சித்தியடையும் உயர்தர மாணவர்கள் முதல் தெரிவாகக் கிழக்கு பல்கலைக்கழகத்தினை தேர்வு செய்ய முன்வரவேண்டும்.

தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் எனும் பணிகளில் உள்ளோரில், அதிகமானவர்கள் உள்வாரி, வெளிவாரி மூலம் பட்டம் முடித்தவர்களே. எல்லாவற்றிருக்கும் "தமிழ்அரசியல்வாதிகள் என்ன செய்துள்ளார்கள்?" எனக் கேள்வி யெழுப்பும் நாம், "முதலில் எமது சமூகத்துக்காக நாம் என்ன செய்தோம்" எனக் கேள்வி யெழுப்புவது சாலச்சிறந்தது.

# அம்மா அதிகாரம் 06




சினிமா காலத்தில் இருந்து ஜெயலலிதாவை வாயாடி என்று அழைத்தவர் எம்.ஜி.ஆர். இது பற்றி ஜெயலலிதாவிடம் ஒரு நிருபர் கேட்ட போது, சிரித்தபடி சொன்னார்... சுசு அவர் "கலகல... நான் லொடலொட!"



யாகம் வளர்ப்பது, ஹோமத்தில் உட்காருவதில் ஜெயலலிதாவுக்கு ஈடுபாடு அதிகம். யாகத்தில் ஆறு மணி நேரம் கூட உட்கார்ந்திருக்கிறார். அவசரமாக மந்திரம் சொன்னாலோ, தவறாகச் சொன்னாலோ, கண்டுபிடித்து நிறுத்தச் சொல்லும் அளவுக்கு வேத ஞானம் உண்டு.



பரத நாட்டியம், ஓரியன்டல் டான்ஸ் இரண்டையும் முறைப்படி கற்று அரங்கேற்றம் செய்தவர், செல்வி ஜெயலலிதா அவர்கள். முதலமைச்சராக இருந்தபோது, ஊட்டியில் மேடையைவிட்டு இறங்கி வந்து, படுகர்களுடன் இணைந்து ஆடியதும் அடக்க முடியாத நாட்டிய ஆர்வத்தின் வெளிப்பாடுகள்!.



ஜெயலலிதாவின் 100 வது படத்துக்கான பாராட்டு விழாவில், அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதியால் "நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர்" என்று பாராட்டபட்டவர்!.

"அரசியலில் நான் என்றுமே குதிக்க மாட்டேன்" என்று பேட்டி கொடுத்தவர் ஜெயலலிதா. "நாடு போகிற போக்கைப் பார்த்தால், ஜெயலலிதாகூட முதலமைச்சர் ஆகிவிடுவார் போல" என்று அவர் நடிக்க வந்த காலத்தில் பேட்டியளித்தார், மறைந்த முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன்.





## ஜெயலலிதாவின் மரணம் இன்று நிகழ்ந்ததல்ல.

இது ஜெயலலிதாவாலும் கண்ணுக்கு தெரியாத "இந்திய லொபியாலும்" ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒன்று.

தமிழீழம் குறித்த சட்டமன்ற தீர்மானம் மற்றும் மூவர் தூக்குத் தண்டனையை ரத்து செய்தமை, என்று துணிச்சலான முடிவுகளை எடுத்து விட்டு தமிழர் நலன் சார்ந்த கோசங்களுடன், ஒரு பிரதமர் வேட்பாளராகக் கடந்த தேர்தலில் உருவெடுத்தபோதே அவர் தமிழக மட்டத்தில் மட்டும் இருந்த தனது எதிரிகளை டெல்லி வரை விரிவாக்கம் செய்தார்.

டெல்லி எதிரிகள் என்ன "கருணாநிதியா?" அறிக்கை வாசித்து விட்டு ஓய்ந்து போக.. அவர்கள் இந்திய கொள்கை வகுப்பாளர்கள். இந்துத்துவ ஆணி வேர்கள்.

விளைவு, ஜெயலலிதா குறி வைக்கப்பட்டார். முதல் குறியே அவரது வழக்கில் தான் தொடங்கியது.

"நீதித்துறைக்கும், அரச எந்திரத்திற்கும் எந்த தொடர்புமில்லை" என்பது வாதத்திற்குச் சரியாக இருக்கலாம். ஆனால் இந்தியா போன்ற தேசங்களில் இத்தகைய தீர்ப்புகளின் பின்னணியில், அரசியல் மறைந்திருப்பதையும் நாம் அறிவோம்.

அவரைச் சிறையில் தள்ளுவதனூடாக அவருக்கு எச்சரிக்கை விடப்பட்டது மட்டுமல்ல, அவரது ஆளுமை மற்றும் உளவியல் என்பன திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டது.

தனது ஆளுமைச் சிக்கல் மற்றும் அவமானம் என்பன அவரை அவரளவில் ஏற்கனவே "கொலை" செய்துவிட்டது. தொடர்ந்த சிறை வாழ்க்கை அவரை ஒரு உடல் உபாதையுள்ள நபராக தயார் செய்தே வெளித்தள்ளியது.

மீதியை "அப்பலோ" எழுதி முடித்திருக்கிறது.

"இந்தியம்" என்ற மாயையை, தன்னையறியாமலேயே கலைக்கும் வகையில் ஒரு அடியை என்று எடுத்து வைத்தாரோ, அன்றே ஜெயலலிதாவின் மரணத்திற்கான நாளும் குறிக்கப்பட்டு விட்டது.

இது அவரே விரும்பாத ஒரு தொடக்கமும், முடிவும்..

**பரணி கிருஷ்ணரஜனி**



## இரட்டைச் சூட்டடுப்பு

"இரட்டைச் சூட்டடுப்பு அல்லது கொடியடுப்பு" என்பது குறைந்த விறகுடன் கூடிய பலனைத் தரக்கூடிய ஒரு அடுப்பின் வடிவமைப்பு ஆகும். தமிழகத்தில் நீண்ட காலமாக புழக்கத்திலிருந்தது இந்த அடுப்பு. ஈழப் போராட்டத்தின் போது பொருளாதாரத்தடை, இடப்பெயர்வு காரணமாக இவ்வகையான சிக்கனமாக பயன் தரும் அடுப்புக்களை எம்மக்கள் அதிகம் பயன்படுத்தினர். இரண்டு பாத்திரம் வைத்துச் சமைக்கக் கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டிருக்கும். "இரட்டைச் சூட்டடுப்பு" என்றழைக்கப்பட்ட இந்த அடுப்பு ஒருபுறம் விறகு வைத்து எரித்தால், பக்க இணைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள மற்றொரு அடுப்பிலும் நெருப்பு வரக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருக்கும்.



## சுளகு

முறம் (அல்லது சொலவு, இலங்கை வழக்கு: சுளகு) என்பது தானியங்களை உமி, கல் போன்ற வற்றிலிருந்து பிரித்தெடுக்க ஈழ, தமிழக கிராமப்புறங்களில் பயன் படுத்தப்படும் ஒரு எளிமையான கருவி. இவ்வாறு பிரித்தெடுப்பதை "புடைத்தல்" என்பர். விவசாயிகளின் இல்லங்களில் இது பரவலாக காணப்படும். மூங்கில் பட்டை கொண்டு முடையப்பட்டு, விளிம்புகள் கட்டப்பட்ட முறம், அடிப் பகுதியில் அகண்டும் நுனிப் பகுதியில் குறுகியும், ஒரு முக்கோண வடிவில் இருக்கும். இலங்கையில் பனை ஈர்க்கு கொண்டு முடையப்பட்ட சுளகுகள் அதிகம் பயன்பாட்டில் உள்ளன. சில சமயங்களில், நெடு நாட்கள் பயனிலிருப்பதற்காக முறத்தின் அடிப்புறம் பசுவின் சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும்.




## உரல்

"உரல்" என்பது அரிசி முதலான தானியங்களைக் குற்ற, இடிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது மூன்று அடி வரை உயரமுள்ள, ஏறத்தாழ ஓர் அடி விட்டமுள்ள மரத்தினால் அல்லது கருங்கல்லினால் ஆக்கப்பட்டிருக்கும். இதன் ஒரு பக்கத்தில், அரை அடி முதல் ஓர் அடிவரையான ஆழத்தில் ஒரு குழி அமைக்கப்பட்டிருக்கும். இந்தக்குழிக்குள் அரிசி முதலான தானியங்களை இட்டு உலக்கையைப் பாவித்து குற்றுவார்கள். இப்படிச் செய்வதால், அதற்குள் இடப்பட்ட தானியம் துகள்களாக்கப்பட்டுப் பின்னர் பொடியாக்கப்படும்.

உரலில் தானியங்களைப் பொடியாக்குவதுபோல், சில தானியங்களின் வெளிப்புற உமியை நீக்குவதற்கும் பயன்படுத்துவார்கள். எடுத்துக்காட்டாக, நெல் மணிகளை உரலில் இட்டு சிறிதுநேரம் குற்றுவதன் மூலம், அரிசியும், உமியும் வெவ்வேறாகப் பிரிக்கப்படும். அதன் பின்னர் சுளகை (முறம்) பயன்படுத்தி புடைப்பதன் மூலம் அரிசியையும், உமியையும் வேறாக்குவர்.

பண்டைய தமிழர் வாழ்க்கையில், இயந்திரங்களின் வரவின் முன்னர், உரல், வீடுகளில் அன்றாடம் பாவிக்கப்படும் ஒரு பொருளாக இருந்து வந்தது. இன்றும் சிற்றூர்களில், சிறுஅளவில், நெல் குற்றவும், பலகாரங்கள் செய்வதற்காகத் தானியங்களை இடிப்பதற்கும் உரல் பயன்படுத்தப்படுகிறது. இப்படி உரலில் இடித்து உருவாக்கப்படும் மாவு, கைப்பக்குவம் மிகுந்து, சுவையான பலகாரங்களைச் செய்வதற்கு உதவுவதாகக் கருதுகின்றனர்.



## தமிழ் புளூட்டாக்

"தமிழ் புளூட்டாக் (Tamil Plutarch) என்பது தமிழ்ப் புலவர்களது வரலாறு கூறும் ஒரு நூலாகும். இது இலங்கை, கற்பிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டி (1807 - 1860) என்பவரால் ஆங்கில மொழியில் எழுதப்பட்டு, ரிப்ளே அண்ட் ஸ்ட்ரோங் (Ripley and Strong) பதிப்பகத்தாரால் யாழ்ப்பாணத்தில் 1859 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

"தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூற எழுந்த முதல் நூல் இதுவே" என்று கருதப்படுகின்றது.

பண்டைய கிரேக்க நாட்டைச் சேர்ந்த அறிஞரான புளூட்டாக் என்பவர் தனது காலத்தின் புகழ் பெற்ற நாற்பத்தாறு பேரின் வரலாற்றை எழுதினார். புகழ் பெற்ற இந்த நூல் எழுதியவரின் பெயரால் "புளூட்டார்க்" எனவும் வழங்கப்பட்டது. இதைப் பின்பற்றியே காசிச்செட்டி அவர்கள் தான் இயற்றிய தமிழ்ப் புலவர் வரலாற்றுக்குத் "தமிழ் புளூட்டாக்" எனப் பெயரிட்டார்.

இந் நூலில் 195 தலைப்புகளின் கீழ் புலவர்களுடைய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், வேறு ஐந்து புலவர்கள் பற்றிய தகவல்கள், தனித் தலைப்புகளிலன்றிப் பிற புலவர்களைப் பற்றிக் கூறும் போது கொடுக்கப்பட்டுள்ளன. அதங்கோட்டாசிரியர், சேனாவரையர், இளம் பூரணர், குணசாகரர், அம்பிகாபதி ஆகிய மேற்படி ஐவரில் முதல் மூவர் தொல்காப்பியரின் கீழும், நாலாமவர் அமிர்தசாகரரின் கீழும், அம்பிகாபதி அவர் தந்தை யாரான கம்பரின் கீழும் குறிப்பிடப் பட்டுள்ளனர். தவிர "பெருந்தேவனார்" என்னும் தலைப்பில் இரு வேறு பெருந்தேவனார்களைப் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்படி இந்நூல் 202 தமிழ்ப் புலவர்களைப் பற்றிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி வரை நாடா என்ற சொல் ஒரு நகைச்சுவைக்குரியதாகவே என்னுள் இருந்தது.


கொழும்பில் பணியாற்றும் போது அச்சுவேலி நடராஜா என்பவர் எனது சக அலுவலர். எங்கள் இருவரைத் தவிர காரியாலயத்தில் இருந்தவர்கள் அனைவரும் சிங்கள இனத்தவர்கள். ரைப்பிஸ்ட் கருணாவதியின் அருகேதான் நடராஜாவின் இருக்கை. கருணாவதி மாத்தளை மாவட்டமென்றதால் அரை குறைத் தமிழில் உரையாடக் கூடியவள்.

எனவே, தனக்குத் தெரிந்த தமிழால் நடராஜனோடு உரையாடிச் சீண்டுவது வழமை. அவளுக்கு நடராஜா என்று முழு நீளமாகப் பெயரைக்கூப்பிட வராததால், சுருக்கி "நாடா" என்று அழைப்பதுண்டு. "நல்லவேளை உன்னை அவள் "நாதா" என்று அழைக்காதவரைக்கும் தப்பினாய்" என நடராஜாவைப் பார்த்து நான் சொல்வதுண்டு.





# ‘நடுங்க வைத்த’ நாடா



கணபதி சர்வானந்தா

## கிலியுடன் மக்கள்

இதே நாடா என்ற சொல் என் மனதில் கிலி கொள்ளச் செய்த தினமாகக் கடந்த டிசம்பர் முதலாம் திகதியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வங்கக் கடலில் ஏற்பட்ட தாழமுக்க மானது, புயலாக மாறி, இந்தியாவின் கரையிலிருந்து 330 கி.மீ தொலைவில் மையங்கொண்டு இருப்பதாக இலங்கை, இந்திய வானொலிகளும், தொலைக் காட்சிகளும் அபாய அறிவித்தல்களைத் தந்தவண்ணமிருந்தன. கடலுக்குச் செல்ல வேண்டாமென மீனவர்கள் அறிவுறுத்தப் பட்டிருந்தனர். இந்தியக் கரையோரமாக வுள்ள பாடசாலைகளில் பல பாடசாலை கள் விடுமுறையை அறிவித்திருந்தன. அந்தப் புயலுக்கு "நாடா" என்று காலநிலை அவதான மையம் பெயரிட்டிருந்தது. காலை தொட்டு மாலை வரை கதிர் குதிக்கும் கீழ்வானம் கன்னங்கரேல் என்று காட்சி தந்த வண்ணமிருந்தது. ஐரோப்பிய நாடுகளில் குளிர் காலம். அதாவது "வின்ரர்" தொடங்கும் ஆரம்ப நாட்களில், இத்தகைய கால நிலையை நான் அவதானித்திருக்கிறேன். "வின்ரரை" எதிர்கொள்ள அவர்கள் ஆயத்த மாவதை நான் கண்டிருக்கிறேன். அது மட்டுமல்ல அந்தச் சூழ்நிலையிலே நான் வாழ்ந்தும் இருக்கிறேன்.

## மலையகமாக மாறிய காலநிலை

எனவே அன்றைய தினம் ஐரோப்பிய மீள் நினைவுகளோடு, மட்டமான தரைப் பரப்பைக் கொண்ட நுவரெலியாவை நினைவுபடுத்துவதாக இருந்தது, வட மாகாண காலநிலை. காற்றும், மழையும் கலந்து ஒரு புதுவிதமான சூழலை உருவாக்கியிருந்தது. காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் [illegible] மரங்கள் முறிந்து வீழ்ந்த வண்ணமிருந்தன. சங்கத்தானைப் பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒரு இளைஞர் மரணமடைந் திருந்தார். கடலிலும் இரு மீன வர்களின் மரணங்கள் சம்பவித்திருந்தன.

அன்றைய தினம் வவுனியா தொட்டுக் காங்கேசன்துறைவரை காலநிலை தலை கீழாக மாறிக் கிடந்தது. குளிரைத் தாங்க முடியாத மக்கள் பலர், மலையக வாசிகள் போல, ஏறத்தாழ 2 உடுப்புகளைப் போட் டுக் கொண்டுதான் வீட்டுக்கு வெளியே நடமாடினர்.

சாராயக் கடைகள் நிரம்பி வழிந்த வண்ணமிருந்தது. "இந்த காலநிலை நீடிக்குமானால், பல மரணங்களை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" என்று ஒரு சித்த வைத்தியர் கோயிலடியில் நின்றவாறு, அபாய அறிவித்தலை விட்டுக் கொண்டிருந்தார். அதில் உண்மை இல்லா மலில்லை. ஏனெனில் தற்போது உடல் பருமனைக் கட்டுப்படுத்தவும், நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பலவற்றிற்கும் மாத்திரையை உபயோகிக்கின்ற பழக்க வழக்கம் நம்மிடையே பரவலாகக் காணப் படுகின்ற ஒன்று. பல செயற்கை இரசாயனச் சேர்க்கையினால் உருவாக்கப்படும் இந்த மாத்திரைகள் உட் சென்று இயற்கையான தொழிற்பாட்டை ஒரு குழப்ப நிலையி லேயே எப்பொழுதும் வைத்திருப்பதனால், எமது உடலானது, உடற் சம நிலையைப் பேணுவதற்குரிய இயல்பைக் கொண்டி ருக்க வாய்ப்பே கிடையாது.

## தொற்றுநோயால் அச்சம்

குளிரைத் தாங்கக் கூடிய உஷ்ணத்தைப் பேண உதவுவதில் கொழுப்பு மிக முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது.

தற்பொழுது நோய் முன்னெச்சரிக்கை யாக நல்ல கொழுப்புள்ள உணவு வகை தவிர்க்கப்பட்டு வருவதுவும் குளிரை நம்மவர் தாங்கக் கூடிய சூழ்நிலையில் இல்லாததற்கு ஒரு காரணமுமாகும்.

1935 ஆம் ஆண்டளவில் ஒரு முறை இதுபோன்ற "குளிர் கொண்ட காலநிலை" யாழ்ப்பாண மண்ணில் உணரப்பட்டதாக 80 வயதுடைய எனது உறவினரொருவர் ஒப்புதல் வாக்கு மூலம் தந்து தனது பால்ய கால நினைவுகளை என்னோடு பகிர்ந்து கொண்டார்.

இத்தகைய காலநிலை மாற்றத்திற்குப் பின்னர், ஒரு வித நோய்ப் பரவல் தொடர் வதாக அச்சம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய காலநிலை மாற்றங்கள் ஆரோக்கிய ரீதியாகப் பல மாற்றங்களைத் தரவல்லது. புதிய பல தொற்றுநோய்க் கிருமிகள் தோன்ற வாப்பிருப்பதாகச் சுகாதார வைத்தியர் சொல்லுகிறார். ஏற்கனவே டெங்கு பரவி அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே இது தொடர் பாகவும் சிந்திக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

## குளிரும் மலையகமும்

மலையகத்தைப் பொறுத்தவரை இது ஒரு சாதாரணவிடயம். அவர்கள் பெரும் பாலோருக்கு எம்மைப் போன்று பாதுகாப் பான, தரமான வீடுகளில் வசிக்காவிட்டா லும், இத்தகைய காலநிலைக்கு அவர்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பரம் பரையாகப் பழக்கப்பட்டிக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் புகைத்தல், மதுபோதைப் பழக்கங்களுக்கு அடிமையாக இருப்பதற்கு இத்தகைய காலநிலையும் ஒரு காரணமாக இருக்கலாம். அங்கு ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்குள் பல சாராயக் கடைகள் இருப்பதைக் காணலாம்.

இலங்கையில் மழையும், குளிரும் கூடிய இடமாக வட்டவளை என்ற மலைப் பிரதேசத்தைக் குறிப்பிடுவர். அங்கு மாலை நேரங்களில், எமது கிராமத்துச் சிறுவர்களைப்போல, உடுப்புக்கள் எதுவு மில்லாமல் நிர்வாணமாக நின்று அவர்கள் விளையாடுவது, சாதாரண காட்சிகளில் ஒன்று.


## ஓய்ந்தது புயல்

டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி. "அடுத்த 12 மணி நேரத்தில் இந்த புயல் சின்ன மானது, மேற்கு - தென்மேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவிழந்து வேதா ரண்யத்திற்கும் புதுச்சேரிக்கும் இடையில் கடலூருக்குத் தெற்கில் டிசம்பர் 2- ஆம் திகதி அதிகாலை கரையைக் கடக்குமென வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக் கிறது" என்று இந்திய ஆய்வு மையத்தின் உத்தியோக பூர்வச் செய்தி மனதுக்கு ஆறுதல் தந்தது. மழையும், குளிரும் சிறிது சிறிதாகக் குறையத்தொடங்கின.

இருந்தும் இத்தகைய சூழ்நிலை அவ்வப்போது நீடிக்க வாய்ப்பிருப்பதாக அறிவித்தல்கள் வந்தவண்ணமிருக்கின்றன. இந்த "நாடா" போனாலும், இன்னும் பல நாடாக்கள் வரலாம். ஆண்டு தோறும், இத்தகைய சூழல் நிரந்தரமாக வருமிடத்து, அதையும் அவற்றால் ஏற்படப்போகும் வாழ்வியல் சூழ்நிலையையும், மாற்றங்க ளையும் எங்ஙனம் எதிர்கொள்ளப் போகிறோம்? எனவே பல வழிகளிலும் மாறிப்போய் கிடக்கின்ற எமது மண்ணில், தற்போது காலநிலையும் மாறத் தொடங்கி யிருக்கிறது.

## நாமே நமக்கு எதிரி

மக்களால் பல வழிகளிலும் மாசுபடுத் தப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலை மாற்றவேண்டிய கடமை இயற் கைக்கு உண்டென்பதால், இயற்கையும் மாறத் தொடங்கியிருப்பதாக எனது கணிப்பீடு. சங்கிலித் தொடர்புடையதாக உருவாக்கம் பெறக்கூடிய இந்தப் பிரச்சினையும் நமது மக்களுக்கெதிராகத் தோன்றியிருக் கின்ற ஒரு புதிய சவாலா? எப்படி எதிர் கொள்ளப் போகுறோம்? ஒட்டு மொத்த மாகப் பார்க்குமிடத்து, பூகோளரீதியாக இயற்கை ஒரு மாற்றத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பது தான் ஜீரணிக்க முடியாத உண்மை.



# 05 மக்கட் பெயர்

முனைவர்.ஜெ. அரங்கராஜ்

வடபுலத்தோடும் வட மொழியோடும் தொடர்புடைய வைதீகர்களின் பெயர்கள், சமண, பௌத்தத் துறவிகள் முதலானோர்களின் பெயர்கள்,தமிழகத்தில் குடிபேர்ந்த வேற்றுபுலத்தார் பெயர்கள் முதலானவைகளே, வடமொழிப் பெயர்களாக இருந்தன. ஆனால், பல்லவர் காலத்தில், வணிக மக்களின் சமண, பௌத்த சமய மேலாதிக்கம் ஆட்சியாளர்களைப் பற்றியவுடன், வடமொழிப் பெயர்களின் செல்வாக்கும் பெருகிற்று. சாளுக்கியர்களிடமிருந்து, இவ்வடமொழிப் பெயர் மரபைப் பல்லவர்கள் கைக்கொண்டனரா? என ஆயவேண்டியுள்ளது. பல்லவர்களுக்குப் பின்வந்த சோழர்களும், பாண்டியர்களும், தங்களது தமிழ் இயற்பெயர்களைத் தவிர்த்து, வடமொழிப் பட்டப் பெயர்களைச் சூட்டலாயினர். ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பட்ட திருத்தலங்களும், அத்தலத்தின் இறைவன், இறைவி பெயர்களும், தமிழிலேயே இருந்தன. பிற்காலச் சோழர், பாண்டியர் காலங்களிலும் இந்நிலையே நீடித்தது. அவர்கள் புதிதாகக் கட்டிய கோயில்களிலும், இறைவன், இறைவி பெயர்களைத் தமிழிலேயே வைத்தனர். இதற்குச் சான்றாகத் தஞ்சை பெருவுடையார் கோவிலைக் குறிப்பிடலாம்.

ஆனால், விஜயநகர நாயக்கர் காலங்களில், தலப்பெயர்களும், இறைவன், இறைவி பெயர்களும், முற்றிலும் வட மொழி வயப்படுத்தப்பட்டன. இதன் தொடக்கமாகப் பிற்காலச் சோழர்காலத்தில், சாளுக்கிய சோழர் குடிக் கலப்பில் பிறந்து சோழ அரியணையைக் கைப்பற்றிய, முதலாம் குலோத்துங்கன் காலத்தினையே குறிப்பிடலாம். அவன் காலத்தில் இறைவன், இறைவி பெயர்கள் வடமொழிக்கு மாறியமைக்குச் சான்றாக, கோனேரிராசபுரத்து உமாமகேஸ்வரன் கோயிலினைக் குறிப்பிடலாம். இக்கோயில், திருநல்லம் மாதேவர் கோயில் என்றே, முதலாம் குலோத்துங்கன் காலத்திற்கு முன்புவரை கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின், குலோத்துங்கன் காலம் முதல் உமாமகேஸ்வரர் கோயில் என்று வடமொழியில் குறிப்பிடப்படுவதாயிற்று. விஜயநகர நாயக்கர் காலத்தில் தமிழ்ப் பெயர்கள் மாற்றப்பட்டு, வடமொழிப் பெயர்கள் சூட்டப்பட்டன. தெலுங்கு மன்னர்கள் தமிழ்மொழியை அறிந்திலர். அவர்கள் கோயிலுக்கு வரும்வேளையில், தாயுமானவர் எனச் சொன்னால் அவர்களுக்கு விளங்காது. கோயிலுக்குக் கொடையும் வழங்கார். ஆதலால், தாயுமானவர் மாத்ரு பூதேஸ்வரரானார். நிலத்து அமரான் கைலாச நாதரானார், ஏழவார் குழலி சுகுந்தகுந்தலாம்பிகையானாள். அங்கோல்வளைமங்கை முழுமையாக

பண்டைய நாளிலே பிள்ளைப்பேறு அளவிற்கு அதிகமாக இருக்கும். சிலர் தமது எட்டாவது பிள்ளைக்கு சம்பூரணம் எனவும் போதும் பரிபூரணம் என்று இனி பிள்ளைகள் வேண்டாம் எனும் பொருளில் பெயர் வைப்பர்.

மொழிமாற்ற முடியாமல் தேக சுந்தரியாக ஆக்கி, மங்களநாயகியாக்கினர். விஜயநகர ஆட்சிக்காலத்தில் தெலுங்குப் பார்ப்பனர்கள் தமிழகக் கோயில்களில் பூசைக்கு இருத்தப்பட்டு, தமிழ்ப் பட்டர்களும், சிவாச்சாரியர்களும், கோயில் மடப்பள்ளிக்குக் கலைக்கப்பட்டனர். இதுவும், தமிழ்ப் பெயர்களை விருப்பப்படி மாற்றிக் கொள்ள வழியமைத்தது. இறைவன், இறைவியர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டிப் பழக்கப்பட்ட தமிழர்கள், அவ்வடமொழிப் பெயர்களையே சூட்டத் தொடங்கினர்.

தமிழ் நிலங்களான சோழ நாடு, சேர நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு, ஈழ நாடு ஆகிய பகுதிகள் அனைத்திலும் வாழும் மக்களுக்குத்தனித்துவமான பெயர் அமைவுகள் உண்டு. அவை, அச்சமூக நிலவியல் அமைவை ஒட்டியதாக அமைந்தவை எனலாம். தமிழகத்தில் செந்தில் எனும் பெயர் போல், ஈழத்திலும் செந்தூரன் எனும் பெயர் வழக்கு மிகுதி. தமிழகத்தில் கந்தசாமி, ஈழத்தில் கந்தையா. யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் காலத்தில், வைதீக மயப்படுத்தப்பட்ட போது கண்ணகி கோயில்கள் இராசராசேஸ்வரி கோயில்களாகவும், மனோன்மணியம்மன் கோயில்களாகவும் மாற்றப்பட்டன. மக்களுடைய பெயர்களும் வைதீகமாக்கப்பட்டு வடமொழி வயமானது.

பண்டைய நாளிலே பிள்ளைப்பேறு, அளவிற்கு அதிகமாக இருக்கும். சிலர் தமது எட்டாவது பிள்ளைக்கு சம்பூரணம் எனவும் போதும் "பரிபூரணம்" என்று "இனி பிள்ளைகள் வேண்டாம்" எனும் பொருளில் பெயர் வைப்பர். ஆனால், ஆண் பிள்ளைகளை வேண்டாம் எனப் பெயர் வைத்ததாக அறிய இயலவில்லை. மேலே குறிப்பிட்ட இருபெயர்களும், பெண் பிள்ளைகளுக்கே உரியவை என்பது குறிப்பிடத்தக்கது. இரட்டைக் குழந்தைகளோ, இரட்டை மாடுகளோ பிறந்து விட்டால் அவற்றுக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இராமன், இலட்சுமணன், இராமாயி, இலட்சுமி என்பனவாகப் பெயர் சூட்டுவர்.

பெண்ணும், ஆணுமாகப் பிறந்தால் நீலாம்பாள், நீலகண்டன் என்பனவாகப் பெயர் சூட்டுவர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு ரமேஷ், சுரேஷ் என்பனவாகப் பெயர் சூட்டுவர். ராம், சாம் என்பனவாகவெல்லாம் வடமொழிப் பெயர்களைச் சூட்டுவதினைக் காணலாம். ஆனால், சீவக சிந்தாமணியில், ஒரு வண்டியினை இழுக்கும் கரிய, வெள்ளை நிறங்களையுடைய இணைக்காளைகளைக் காமனும், சாமனும் போல் எனத் திருத்தக்கத்தேவர் குறிப்பிடுவார். இதனை,

*மாமனு மருகனும் போலு மன்பின*
*காமனுஞ் சாமனுங் கலந்த காட்சிய*
*பூமனு மரி சிப்புல் லார்ந்த மோட்டின*
*தாமின மமைந்து தந்தொழிலின் மிக்கவே*
சிந்தாமணி.1/43

எனும் அடிகளால் அறியலாம். சங்க இலக்கியத்திலும், உடன்பிறந்தோருக்கு நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்றும் அங்கவை, சங்கவை என்றும் பெயர் சூட்டிய மரபு உண்டு.

தமிழ்க்காப்பியப் பெயர்கள், இசை நயத்திற்கு ஏற்றனவாயும், இயற்பெயராயும் அமைந்தவை. கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை என்பனவான பெயர்களால் இவற்றை அறியலாம். ஆனால், வடமொழிப் பெயர்கள் நயத்திலும், பொருளிலும் சற்றே குறைந்தவை எனலாம். திருதராட்டிரன், துச்சாதனன், காந்தாரி, சத்ருக்கனன் என்பனவாகக் கொள்ளலாம். திருதராட்டிரன் எனும் பெயரின், இசைநயச் சிறப்பை, வில்லி பாரதத்தினைப் படிக்கும்போது படிப்பவர் வாயுணரும். கம்பருக்குச் சத்ருக்கனன் பெயரின் இசைநயம் தெரிந்ததனால், அப்பெயர் வழங்கவேண்டிய இடங்களில் எல்லாம் தம்பி, இளவல் என்றே கூறிப் போந்தார். தமிழ்க்காப்பியப் பெண்களின் பெயர்கள் எல்லாம், இயல்பாக தங்களுக்கே உரிய பெயர்களாய் இருக்க, வடமொழியில் இது வேறுபட்டே இருக்கும். பெரும்பாலான வடமொழிக் காப்பியப் பெண்களின் இயற்பெயர்கள் இன்னதென்றே இன்றளவும் அறியத்தகுந்ததாக இல்லை. சான்றாகக்குந்தி - குந்திராசனின் மகள், திரோபதி திரோபதராசனின் மகள் என்றும், பாஞ்சாலநாட்டு இளவரசி என்பதால் பாஞ்சாலி எனவும் பெயர் பெற்றாள். இவளது இயற்பெயர் கிருஷ்ணா (கரிய நிறமுடையாள்) எனக் குறிப்பிடுவர். கோசலை - கோசல நாட்டு இளவரசி, கைகேயி - கேயநாட்டு இளவரசி என்பனவாக அமையும், இவையாவும் இயற்பெயர்களல்ல. அவற்றைத் தத்திதப் பெயர்கள் என வடமொழி இலக்கணங்கள் கூறும். காப்பியங்களில், எதிர்மறை பெயர்களைக் கையாளும் மரபு, தமிழில் மிகக்குறைவு. ஆனால், வடமொழியில் இம்மரபு மிகுதியுமுண்டு. துச்சாதனன் என்றால், கெட்ட செய்கையையுடையவன் என்று பொருள். பெற்றோர் யாரும் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கெட்டவன் எனப் பெயர் வைப்பரோ? எதிர்மறைப் பெயர்களும், வடமொழியில் மிகுதி விமலன், அமலன், நிரோஷன் என்பன போன்றவையும், அதனுள் அடங்கும். தமிழ்ப்பெயர்கள் குறித்த இக் கட்டுரையில், வடமொழிப் பெயர்கள் குறித்துச் சுட்டுதல் யாதெனில், தமிழர்கள் வடமொழிப் பெயர்பால் கவர்ச்சி கொண்டு சார்தல் பற்றியதாலேயாம்.

தமிழில், தமிழர்கள் பெயர் வைத்தலைத் தடுத்தற் பொருட்டுத் திட்டமிட்டவர்கள் கைக்கொண்ட வகைமையில் ஒன்றுதான் பஞ்சாங்க அடிப்படையில் பெயர்வைக்கும் முறையை உருவாக்கியதாகும். தமிழ் எழுத்துகள் அனைத்தும் மொழிக்கு முதலாகவரா எனும் இலக்கண விதியை நன்குணர்ந்த அயலர், பஞ்சாங்கத்தில் மொழிமுதலாகா எழுத்துகளையும், வடமொழிக்கிரந்த எழுத்துகளையும் மிகுதியாகச் சேர்த்துப் பன்னிரண்டு இராசிகளைச் சேர்ந்தவர்களும் இவ்வெழுத்துகளிலேயே பெயர்கள் தொடங்கும் வண்ணம் வைத்தல் வேண்டும். குறிப்பிட்ட இராசிக்குக் குறிப்பிட்ட எழுத்துகளில் தொடங்கும் பெயர்களைச் சூட்டினால்தான், சிறப்பு என வகுத்து விட்டார்கள். மேஷம் முதலாக மீனம் ஈறாக உள்ள இராசிக் கூட்டத்தில் பிறந்தவர்கள் பெயர் சூட்டும் முதல் எழுத்துக்களாகத் தொண்ணூற்றாறு எழுத்துகளை குறிப்பிட்டுள்ளனர். இவற்றில், முப்பத்தொன்பது எழுத்துகள் தமிழில் மொழிமுதலாகா எழுத்துகளும், வடமொழி கிரந்த எழுத்துக்களுமாகும். நாற்பத்து மூன்று தமிழ் எழுத்துகளே மொழி முதலும் எழுத்துகளாகும். இவற்றிலும் மிகுதியான எழுத்துகள் அதிக பெயர்களைக் கொண்டிராதவை பின்வரும் தமிழ் எழுத்துகளே பெயர் சூட்டலுக்குரியதாகப் பஞ்சாங்கங்கள் குறிப்பிடுகின்றன. அ, இ, உ, எ, ஒ ஐந்து உயிர் எழுத்துகளும், க, கா, கி, கு, கூ, கே, கோ,ச, சி, சு, ந, த, தி, தீ, து, தே, தோ, ந, நி, நெ, நோ, ப, பா, பி, பு, பூ, பெ, போ, ம, மி, மெ, மோ, யா எனும் முப்பத்துநான்கு உயிர்மெய் எழுத்துகளிலேயே பெயர்கள் தொடங்கும் வண்ணம் அமைத்துள்ளனர். இந்தக் கணக்கின்படி பார்த்தால் உயிர் எழுத்துகளில் நெட்டெழுத்துக்களில் பெயர் தொடங்கக் கூடாது. ஆதன், ஆண்டிரன், ஔவையார் போன்ற பெயர்களெல்லாம், இவர்கள் கணக்குப்படி பிழையானவை. இவர்களின் கூற்றுப்படி பார்த்தால் ஜெ, ஷோ,ஷி,ஹி,ஹே, ஹோ,ஜ, ஜீ, ஜு, ஜோ, ஸி, ஸீ, ஸெ, ஸொ, ஸ்ரீ எனும் கிரந்த எழுத்துக்களும் ட, டி, டோ, டு, டே, ல, லி, லு, லே, லோ, ர, ரீ, ரு, ரே, யீ, யு, யே, யோ, ன் எனும் எழுத்துகளிலேயே பெயர்கள் தொடங்க வேண்டுமென்றால் தமிழர்கள் தமிழ்ச்சொல்லில் பெயர் வைத்தலே அரிதாகிப்போகும். ஸ்ரீ எனும் வடசொல்லை,எங்கு வடமொழி எழுத்துப் பட்டியலில் சேர்த்தார்களோ அறியவில்லை. இதன்படி பார்த்தால் கற்கடக இராசியில் பிறந்த யாரும் தமிழ்ப்பெயர்களை . சூட்டிக் கொள்ள இயலாது. ஏனெனில் அவ்வகைப் பாட்டில் கடகத்திற் பிறந்தவரின் பெயர்ப்பட்டியலில் ஓர் எழுத்துக்கூட தமிழ் எழுத்தாக இல்லை. இந்த எழுத்துப் பட்டியலைப் பார்த்தால் இது அனைத்து இனத்தவருக்கானதாகவும் கொள்வதற்கில்லை. ஏனெனில் வடவெழுத்துகளில் உள்ளவருக்க எழுத்து முறையை இப் பட்டியலில் பின்பற்றவில்லை. ஆதலால், இவை தமிழரின் தலைமேல் திணித்தலுக்காகவே உருவாக்கப்பட்டது எனலாம். இப்பட்டியல் இலக்கணமென்றால் இதற்கான இலக்கியங்களாக லலிதா சஹஸ்ரநாமம், விஷ்ணுசகஸ்ரநாமம் முதலான நூல்களையும் வைத்துக் கொண்டனர். இதில் மலைமகளின் தமிழ்ப் பெயர்களோ, மாலவனின் தமிழ்ப்பெயர்களோ இடம்பெறவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி அடுத்த வாரமும்...)

# விருதும் விமர்சனமும்




இலங்கை கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வான 'டயலொக்' கிரிக்கெட் விருதுகள் சில தினங்களுக்கு முன்னதாக வழங்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டுக்கான இந்த விருதில் சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது குமார் சங்ககாரவுக்கு வழங்கப்பட்டமை பொருத்தமான ஒன்றாகத் தெரியவில்லை.

சங்ககார 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தொடரில் தென்னாபிரிக்க அணியுடனான காலிறுதிப் போட்டியோடு சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார். இந்தப் போட்டி மார்ச் மாதம் 18 ஆம் திகதி நடைபெற்றது. 2015 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கலுக்குரிய காலப்பகுதியாக ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியே கருதப்படுகின்றது. எனவே 2015 ஆம் ஆண்டு மூன்று மாதங்கள் கூட விளையாடாத சங்ககாரவிற்கு இந்த விருது வழங்கியது சரி தானா என்ற கேள்வி எழுகின்றது.

அத்தோடு சங்ககார 2015 ஆம் ஆண்டு 14 போட்டிகளில் விளையாடி 5 சதங்கள், 2 அரைச்சதங்கள் அடங்கலாக 862 ஓட்டங்களையே குவித்திருந்தார். ஆனால் 2015 ஆம் ஆண்டு டில்சான் 25 போட்டிகளில் விளையாடி 4 சதங்கள் 6 அரைச்சதங்கள் அடங்கலாக 1207 ஓட்டங்களைக் குவித்து இலங்கை வீரர்கள் சார்பில் அதிக ஓட்டங்களைக் குவித்த முதன்மை வீரராகவும் சர்வதேச ரீதியில் மூன்றாவது வீரராகவும் அவரே விளங்கி இருந்தார். ஒப்பீட்டளவில் 2015 ஆம் ஆண்டுக்கான டில்சானின் சரா சரியை விட (52.47) சங்ககாரவின் சராசரி (86.20) அதிகம் என்றாலும் போட்டிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் ஒரு வருடம் என்பதைக் கணக்கில் எடுக்கும் பொழுதும் இந்த விருது டில்சானுக்கே கிடைத்திருக்க வேண்டும்.

ஆனாலும் சங்ககார விடயத்தில் நடந்தது என்னவென்றால் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ஒருநாள் போட்டியில் சங்ககார 4 சதங்களை தொடர்ச்சியாகப் பெற்று உலக சாதனை படைத்தமைக்காகவே இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். உண்மையில் புள்ளி விபரங்களின் பிரகாரம் டில்சானுக்கே சர்வதேச ஒரு நாள் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருது வழங்கப்பட்டு சங்ககாரவின் உலகசாதனைக்காக விசேட விருதொன்றே வழங்கப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய நடைமுறை 'டயலொக்' விருதில் கடந்தகாலங்களில் இருந்தே வந்துள்ளது. சென்ற வருடம் நடைபெற்ற 'டயலொக்' விருது விழாவில்கூட விசேட விருது என்ற வகைப்படுத்தலில் டில்சான், குமார் தர்மசேன, றொசான் மகாநாம ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவில் சங்ககார கலந்து கொள்ளவில்லை என்றாலும் விருதை அவர் புறக்கணிக்கவும் இல்லை. சர்ச்சைக்குரியதான இவ்வாறான விருதுகள் சங்ககாரவிற்கு புகழுக்குப் பதிலாக களங்கத்தை ஏற்படுத்தவே வாய்ப்புண்டு.


## Agenda14 Short Film Festival - 2016

09 -11 December 2016 @ BMICH Cinema

Festival will be open at 3.00pm on the 09 December 2016.

**10 -11 December 2016
Screenings will be held from 10.00am - 07.00pm**

Open Doors Programme of Locarno Film Festival in Switzerland will conduct a Masterclass at this edition.

Film South Asia Film Festival in Kathmandu, Nepal will collaborate to present some award documentaries too. All are welcome!

அஜென்டா 14 குறுந்திரைப்பட விழாவின் 6 ஆவது பதிப்பு டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள திரையரங்கில் ஆரம்பமாகிறது. தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் இவ் விழாவில், 10 ஆம் திகதி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரையும், 11 ஆம் திகதி காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும், குறும்படங்கள் திரையிடப்பட்டு வெற்றி பெறும் குறும்படங்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.



சர்வதேச கிரிக்கெட் உலகில் ஒரு பிரச்சினையைக் கையாள்வதில் வீரர்களுக்கிருக்கும் மதிப்பு தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்தியே வந்திருக்கின்றது. கிரிக்கெட் சபைகள் வீரர்களை நடத்தும் முறை நாட்டுக்கு நாடு வேறுபட்டு இருப்பதனால் ஒரே பிரச்சினையை வெவ்வேறு விதமாக அணுகி அதனால் வீரர்கள் பாதிப்படைந்த வரலாறும் உள்ளது.

சில தினங்களுக்கு முன்னதாக அவுஸ்ரேலிய அணியின் அதிரடி நாயகன் மக்ஸ்வெல் உள்ளூர் போட்டி ஒன்றில் விக்ரோறியா அணிக்காக விளையாடும் போது குறித்த அணித்தலைவரும் விக்கெட் காப்பாளருமான மத்தியூ வேட் தன்னை எட்டாம் நிலையில் ஆடவிடுவதனால் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் இடம் பெறுவதற்கான வாய்ப்பைப் பறிப்பதாகவும் விக்கெட் காப்பாளரான அவருக்குப் பின்னர் களமிறங்குவது வேதனை என்றும் வெளிப்படையாகப் பத்திரிகையாளர்களிடம் கூறியிருந்தமை அவுஸ்திரேலிய அணியில் சங்கடத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து ஆஸி. அணித்தலைவர் ஸ் ரீவ் சிமித் மற்றும் சில வீரர்கள் தமது கண்டனத்தை வெளியிட பயிற்சியாளர் டரன் லீமன், மக்ஸ்வெல் இந்த விடயத்தை பத்திரிகையாளர் வரை கொண்டு சென்றது ஏமாற்ற மளிப்பதாக கூறியுள்ளார். உண்மையில் பயிற்சியாளரோடும் அணித் தலைவரோடும் கலந்து ஆலோசித்து ஆடை மாற்றும் அறைக்குள்ளேயே தீர்க்க வேண்டிய விடயம் அம்பலமானதில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிர்வாகமும் சற்று கோபமடைந்துதான் இருக்கின்றது. இது மக்ஸ்வெல் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பதற்கான வாய்ப்பை தற்போது கேள்விக்குறி ஆக்கி உள்ளது.

இதேபோன்றதொரு சம்பவம் இந்திய கிரிக்கெட் அணியிலும் நடைபெற்று இருக்கின்றது.

# பலியாடுகள்



2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கங்குலியின் தலைமையில் விளையாடும்போது கங்குலி அணியின் நலன் கருதி டெண்டுல் கரை நான்காம் இடத்தில் விளையாடுமாறு கோரியிருந்தார். ஒரு வீரர் எந்த நிலையிலும் ஆடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதனால் சச்சின் அதை ஏற்றுக்கொண்டாலும் அதில் அவரால் ஜொலிக்க முடியவில்லை. இதனால் 2002 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக வந்தபோது பத்திரிகையாளர்களிடம் டெண்டுல்கர் "ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக நான் சிறப்பாக விளையாடாது விட்டால் என்னை நான்காவது இடத்தில் மாறி விளையாடச் சொல்வதில் ஒரு அர்த்தம் இருக்கும். நான் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக நன்றாக விளையாடும் பட்சத்தில் என்னை ஏன் வரிசை மாற்றம் செய்ய வேண்டும்" என்று வெளிப்படையாகவே கூறியிருந்தார்.

ஆனாலும் இது குறித்து இந்திய அணி நிர்வாகமோ, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையோ அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. டெண்டுல்காரின் நட்சத்திர மதிப்பு அவர்களுக்குத் தெரிந்ததனால் இந்த விடயத்தை மௌனமாகவே கடந்திருந்தார்கள். சர்வதேச கிரிக்கெட் உலகிலும் சட்டங்களும் சங்கடங்களும் எளியோரையே பலிக்கடா ஆக்குகின்றன என்பதற்கு மக்ஸ்வெல் சமீபத்திய உதாரணம் எனலாம்.

தொகுப்பு:
சி. விமலன்




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 10.12.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.